REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ ThinakaranLk / ThinakaranLK

2023 செப்டெம்பர் 29 வெள்ளிக்கிழமை


# தினகரன்
THINAKARAN

வரு. 91 இல. 231 | Friday 29, September, 2023 | 12 பக்கங்கள் | 50/-

## பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் சபையில்!

### ஒக். 03 இல் நீதியமைச்சரால் சமர்ப்பிக்கப்படும்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு பதிலாக அரசாங்கத்தினால் கொண்டுவர உத்தேசித்துள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் எதிர்வரும் 3ஆம் திகதி பாராளுமன்றத்தில்

04

## துறைமுக, விமானத்துறைகளின் அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு

### அமெரிக்கா அர்ப்பணிப்புடன் செயற்படும் –தூதுவர் ஜூலி உறுதி

**லோரன்ஸ் செல்வநாயகம்**



இலங்கையின் துறைமுகங்கள் மற்றும் விமானப் போக்குவரத்து துறையை பாதுகாப்பது தொடர்பாக அமெரிக்கா அர்ப்பணிப்புடன் செயற்படுமென்று, இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்தார்.

அமெரிக்கத் தூதுவருக்கும் துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவுக்கும் இடையில் நடைபெற்ற விசேட சந்திப்பின் போதே, இந்த விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதாகவும், அமெரிக்கத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தமது ட்விட்டர் பதிவிலும் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் வர்த்தகத்துறை மற்றும் தனியார்துறை சார்ந்த முன்னேற்றங்களில் இன்றியமையாத

04

அமைச்சர் பந்துல தாக்கல் செய்த வழக்கு

## இந்திக்க தொடங்கொடவுக்கு நீதிமன்றம் தடையுத்தரவு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



அமைச்சர் பந்துல குணவர்தன மீதான பொய் குற்றச்சாட்டுகளை சுமத்தி, அவரது நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தியமை தொடர்பாக ரயில்வே சாரதி இந்திக்க தொடங்கொடவுக்கு எதிராக நீதிமன்றம் தடையுத்தரவு விதித்துள்ளது.

ரயில்வே திணைக்களத்தின் நிர்மாணப் பணிகளுக்கான ஒப்பந்தங்களை வழங்கியது தொடர்பாக அமைச்சர் பந்துல குணவர்தன, சம்பந்தப்பட்ட இந்திய நிறுவனத்திடம் இலஞ்சம் பெற்றுக்கொண்டதாக, ஊடகங்கள் மற்றும் சமூக

04

அவுஸ்திரேலியாவில் பாலியல் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த

## தனுஷ்க குணதிலக எந்தவித தவறுமே இழைக்கவில்லை

### அவுஸ்திரேலிய நீதிமன்றம் நேற்று அதிரடி தீர்ப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் பாலியல் துஷ்பிரயோக குற்றச்சாட்டு தொடர்பாக கைது



செய்யப்பட்ட இலங்கை கிரிக்கெட் வீரர் தனுஷ்க குணதிலக சிட்னியின் நியூசௌத் வேல்ஸ் மாவட்ட நீதிமன்றத்தினால் நேற்று விடுதலை செய்யப்பட்டார். சகல குற்றச்சாட்டுகளிலுமிருந்து அவர் குற்றமற்றவரென்று நீதிமன்றம் தீர்ப்பளித்து அவரை விடுதலை செய்தது.

அவுஸ்திரேலியாவில் பெண்ணொருவரை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டு, கடந்த நவம்பர் 6ஆம் திகதி அதிகாலை சிட்னியில் தனுஷ்க குணதிலக கைது செய்யப்பட்டார்.

கடந்த 2022ஆம் ஆண்டு நவம்பரில் 29 வயதுடைய பெண்ணொருவரை தனுஷ்க குணதிலக சந்தித்துப் பேசியதுடன், இதனை அடுத்து

04

அரசின் பொருளாதார மறுசீரமைப்பு திட்டங்களுக்கு பாராட்டு

# IMF இன் இரண்டாவது தவணை கடனும் சாதகம்

### அதிகாரிகளுடனான பேச்சுவார்த்தை திருப்தி தருகிறது என்கிறார் அமைச்சர் சேமசிங்க



சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது தவணைக் கடனை பெற்றுக்கொள்வதற்கான பேச்சுவார்த்தைகள் சாதகமான முறையில் இடம்பெற்று வருவதாக தெரிவித்த பதில் நிதி அமைச்சர் செஹான் சேமசிங்க, அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் பொருளாதார மறுசீரமைப்பு வேலைத்திட்டங்களுக்கு சர்வதேச நாணய நிதியம் பாராட்டு

### ஜேர்மன் விஜயம் நிறைவடைந்து ஜனாதிபதி நாடு திரும்பியதும், பேச்சுவார்த்தைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும்

தெரிவித்துள்ளதாகவும் கூறினார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஜேர்மன் விஜயம் நிறைவடைந்தவுடன், இரண்டாவது தவணைக் கடனை பெற்றுக்கொள்வதற்கான செயற்குழு இணக்கப்பாட்டை பெற்றுக்கொள்வதற்கான பேச்சுவார்த்தைகள் தொடர்ச்சியாக

04

## இந்திய நிதி அமைச்சரிடமிருந்து உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட விடைபெற்றார்



இந்தியாவுக்கான இலங்கையின் உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட, புதுடில்லியில் தனது பதவிக்காலத்தை நிறைவு செய்யவுள்ள நிலையில் இந்திய நிதி அமைச்சர் ஸ்ரீமதி நிர்மலா சீதாராமனை புதுடில்லியிலுள்ள நிதி அமைச்சு அலுவலகத்தில் மரியாதை நிமித்தம் நேற்று முன்தினம் (27) சந்தித்துக் கலந்துரையாடினார். தனது பதவிக்காலத்தில் இந்திய நிதி

04



### IMF இரண்டாவது தவணையை இலங்கை விரைவில் பெறும்

அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவிப்பு

03

## வல்லிபுர ஆழ்வார் தேர்த் திருவிழா



**யாழ். விசேட நிருபர்**

வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்ப்பாணம் வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தினுடைய மகோற்சவ தேர்த் திருவிழா நேற்று (28) மிகச் சிறப்பாக நடைபெற்றது.

விசேட பூஜைகளை தொடர்ந்து வசந்த மண்டப பூஜை நடைபெற்று, உள் வீதி உலா வந்த வல்லிபுரத்தான் தேரில் ஆரோகணித்து, பக்தர்களுக்கு அருட்காட்சியளித்தார்.

இன்று (29) மாலை சமுத்திர தீர்த்தம் நடைபெறவுள்ளது.



### ஒரு கோடி ரூபா பெறுமதியான ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர் கைது

150,000 ரூபா பணமும் மீட்பு

03

## கடந்த 11 மாதங்கள் எனக்கு கடுமையான மன உளைச்சல்!

### மீண்டும் அணிக்காக விளையாட தயார் –தனுஷ்க



தனக்கு எதிராக முன்வைக்கப்பட்ட பாலியல் குற்றச்சாட்டினால் கடந்த 11 மாதங்கள் தான் பெரும் கஷ்டங்களை அனுபவித்ததாகவும் மீண்டும் விளையாடுவதற்காக வாய்ப்பு கிடைக்கும்வரை காத்திருப்பதற்கான பொறுமை தன்னிடம் இல்லையென்றும், இலங்கை கிரிக்கெட் அணியின் வீரர் தனுஷ்க குணதிலக தெரிவித்தார்.

தனுஷ்கவுக்கு எதிரான வழக்கிலிருந்து முழுமையாக விடுவிக்க அவுஸ்திரேலிய நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. நீதிமன்ற தீர்ப்பின் பின்னர் அவுஸ்திரேலிய ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடைசி 11 மாதங்களில் பல இன்னல்களுக்கு

04

## உள்ளூராட்சி தேர்தல் வேட்பு மனுக்கள் செல்லுபடி நிலையில்!

### பாராளுமன்ற சட்டத்தின் மூலமே இரத்தாக்கலாம்



2023ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் இன்னும் செல்லுபடியாகுமென்றும் அவற்றை பாராளுமன்றத்தில் ஒரு சட்டத்தின் மூலம் மட்டுமே இரத்துச் செய்ய முடியுமென்றும், தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

கடந்த 20ஆம் திகதி நடைபெற்ற பொது நிர்வாகம், உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் ஆலோசனைக்குழு, உள்ளூராட்சி தேர்தலுக்கான வேட்புமனுக்களை இரத்துச் செய்ய

04

## GCE (A/L) பரீட்சை திகதி அறிவிப்பு ஒக்டோபரில்!

### முதல் வாரத்தில் வெளியிடுவதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவிப்பு




2023ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சை நடைபெறுவதற்கான திகதி எதிர்வரும் ஒக்டோபர் முதல் வாரத்தில் அறிவிக்கப்படுமென்று, கல்வி அமைச்சு தெரிவித்தது.

எதிர்வரும் நவம்பரில் நடத்த திட்டமிடப்பட்ட 2023 க.பொ.த. உயர்தரப் பரீட்சை ஒத்திவைக்கப்படுவதாக, கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த கடந்த வாரம்

04

## தனிநபர்கள், நிறுவன துப்பாக்கி உரிமங்களை புதுப்பிக்க காலக்கெடு

### ஒக். 01 முதல் டிசெ. 31வரை கால அவகாசத்தை வழங்கிய பாதுகாப்பு அமைச்சு



தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களின் துப்பாக்கி உரிமங்களை புதுப்பிப்பது தொடர்பான அறிவிப்பை பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ளதுடன், துப்பாக்கி உரிமங்களை எதிர்வரும் முதலாம் திகதி முதல் டிசெம்பர் 31ஆம் திகதிவரை புதுப்பிக்கலாமெனவும், பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

தேவையான விவரங்களை பாதுகாப்பு அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் (www.defence.lk) பதிவிறக்கம் செய்து கொள்ள முடியுமென்றும், பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை, எதிர்வரும் 2024ஆம் ஆண்டுக்கான துப்பாக்கி உரிமம் புதுப்பிக்கும் நடவடிக்கையானது டிசெம்பர் 31ஆம் திகதிக்கு பின்னர்

04

ஒரு கோடியே 02 இலட்சம் ரூபா பெறுமதியான

## தங்கத்துடன் பெண் வர்த்தகர் விமான நிலையத்தில் கைது

**லோரன்ஸ் செல்வநாயகம்**



இந்தியாவிலிருந்து சட்ட விரோதமாக இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட ஒரு கோடியே 2 இலட்சம் ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்களுடன் வர்த்தகரான பெண்ணொருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவு உத்தியோகத்தர்களினால் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் அனைத்து சோதனைகளையும் முடித்துக்கொண்டு வெளிச்செல்ல முனைந்த போதே, அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

04

## மழையுடனான சீரற்ற காலநிலை தொடரும்

### 07 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

### பொதுமக்களை அவதானமாக இருக்க வலியுறுத்து

**லோரன்ஸ் செல்வநாயகம்**




நாட்டில் நிலவும் மழையுடன் கூடிய சீரற்ற காலநிலை சில தினங்களுக்கு தொடருமென்றும் சில பிரதேசங்களில் 100 மில்லிமீற்றருக்கும் 150 மில்லிமீற்றருக்கும் இடைப்பட்ட அளவில் மழை வீழ்ச்சி பதிவாகலாமென்றும், வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்தது.

அடை மழை காரணமாக கிங் கங்கை உட்பட ஆறுகளில் நீர்மட்டம் அதிகரித்துள்ளதாகவும் அப்பகுதிகளில் வெள்ளப்பெருக்கு அபாயம்

04

## ரயில் மோதியதில் ஒரேநாளில் ஆறு காட்டு யானைகள் உயிரிழப்பு



### கல்கமுக, ஹபரண பகுதிகளில் சம்பவம்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஒரே நாளில் இருவேறு பகுதிகளில் ரயில்கள் மோதியதில், ஆறு காட்டு யானைகள் உயிரிழந்துள்ளதாக, வன ஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்தது. கொழும்பு, கோட்டையிலிருந்து நேற்று முன்தினம் இரவு காங்கேசன்துறை நோக்கி

04

# சர்வதேச செய்திகள்

## புதிய ஐபோன் குறித்து பயனீட்டாளர்கள் குறை

ஆப்பிள் நிறுவனம் புதிதாக வெளியிட்டுள்ள ஐபோன் 15 கைத்தொலைபேசி பற்றிக் குறைகூறல்கள் எழுந்துள்ளன.

சாதனத்தைப் பயன்படுத்தும்போதோ அதற்கு மின்னூட்டம் செய்யும்போதோ ஐபோன் மிகவும் சூடாகிவிடுவதாகப் பயனீட்டாளர்கள் சிலர் கூறினர்.

மின் விளையாட்டுகளை விளையாடும் போதோ மற்றவர்களிடம் தொலைபேசி அழைப்பு அல்லது பேஸ்டைம் காணொளி மூலமாகப் பேசும்போதோ அவ்வாறு ஏற்படுவதாகப் பயனீட்டாளர்கள் சமூக ஊடகங்களில் தெரிவித்தனர்.

கைத்தொலைபேசிகளில் உள்ள



புதிய ஏ17 சில்லினால் பிரச்சினை ஏற்படுகிறதா என்ற கேள்வி வந்துள்ளது.

புதிய சாதனங்களைப் பயன்படுத்தும்போதும் குறிப்பிட்ட சில செயலிகளைப் பயன்படுத்தும்போதும் அவ்வாறு நேர்வது வழக்கம் என்று ஆப்பிள் நிறுவனம் கூறுகிறது.

## ஜனாதிபதி காவலரை கடித்த பைடனின் நாய்

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் வளர்ப்பு நாயான கமாண்டர், ஜனாதிபதியின் பாதுகாப்புப் படை வீரர் ஒருவரை கடித்துள்ளது.

கடந்த 2021ஆம் ஆண்டில் வெள்ளை மாளிகைக்குக் கொண்டுவரப்பட்ட ஜெர்மன் ஷெப்பர்ட் வகை நாயான கமாண்டர், வெள்ளை மாளிகை ஊழியரைக் கடித்திருப்பது இது 11ஆவது முறையாகும்.

இச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை (25) காலை நடைபெற்றதாகவும், கடிபட்ட ஊழியருக்கு வெள்ளை மாளிகையிலேயே முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டதாகவும் ஜனாதிபதியின் பாதுகாப்புப்



படை தலைவர் அண்டனி குக்லீன்மி தெரிவித்தார்.

வெள்ளை மாளிகையின் சூழலுக்கு ஏற்ப கமாண்டரைப் பழக்கப்படுத்தி வருவதாக ஜனாதிபதியின் மனைவி ஜில் பைடன் தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

## கண் அழற்சியால் 56,000 பாடசாலைகளுக்குப் பூட்டு

கண் அழற்சிப் பரவலைக் கட்டுப்படுத்த பாகிஸ்தானில் உள்ள 56,000க்கும் அதிகமான பாடசாலைகள் இவ்வாரம் முழுதும் மூடப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

பஞ்சாப் மாநிலத்தில் மட்டும் இவ்வாண்டின் ஆரம்பத்தில் இருந்து 357,000 கண் அழற்சி சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அதைத் தொடர்ந்து மில்லியன் கணக்கான மாணவர்கள் நேற்று (28) முதல் பாடசாலைக்கு செல்லவில்லை.

கண் அழற்சி காரணமாக கண்கள் சிவந்து போவது, அரிப்பு ஏற்படுவது, நீர் கசிவது ஆகியவை ஏற்ப



டுகின்றன. தொடர்பு வழியாகவும், சளி, இருமல் வழியாகவும் இந்த வைரஸ் பரவுகிறது. வைரஸுக்கு எதிராக மாணவர்களைப் பாதுகாக்கப் பாடசாலைகள் மூடப்படுவதாக பஞ்சாப் மாநிலத்தின் கல்வித்துறை கூறியது.

## புர்கினா பாசோவில் ஆட்சி கவிழ்ப்பு சதி முறியடிப்பு

புர்கினா பாசோவின் பாதுகாப்பு மற்றும் உளவுச் சேவை நாட்டில் ஆட்சி கவிழ்ப்பு சதி ஒன்றை முறியடித்ததாக அந்நாட்டு இராணுவ அரசு தெரிவித்துள்ளது.

நாட்டில் ஸ்திரமற்ற நிலையை ஏற்படுத்தி குழப்ப சூழலை உருவாக்க அதிகாரிகள் மற்றும் ஏனையோர் முயன்றதாக அது குற்றம்சாட்டியுள்ளது. நாட்டின் இடைக்கால ஜனாதிபதியான இப்ராஹிம் டரோரே ஆட்சியை கைப்பற்றி ஒரு ஆண்டுக்கும் குறைவான காலத்திலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நாட்டில் இஸ்லாமியவாதிகளின் கிளர்ச்சி அதிகரித்த நிலையில் 2022 ஆம் ஆண்டு இடம்பெற்ற இராணுவ சதிப்புரட்சி அந்த ஆண்டில் ஏற்



பட்ட இரண்டாவது சதிப்புரட்சியாக இருந்தது.

இந்நிலையில் கடந்த புதன்கிழமை (27) மாலை தொலைக்காட்சியில் வாசிக்கப்பட்ட அறிக்கையில், இந்த செயலில் ஈடுபட்ட சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டபோதும் அது பற்றிய விபரம் வெளியிடப்படவில்லை.

# அமெரிக்க அரசாங்கம் 'முடங்கும்' நெருக்கடி

அமெரிக்க அரசாங்கம் கடந்த பத்து ஆண்டுகளில் நான்காவது முறையாக பகுதி முடங்கும் ஆபத்து தற்போது தலை எடுத்துள்ளது.

இந்த நெருக்கடி நிலை ஏற்பட இன்னும் ஒருசில நாட்களே உள்ள நிலையில் அதற்குள்ளாக அமெரிக்க பாராளுமன்றம் ஒரு சட்டத்தை நிறைவேற்ற வேண்டி ஏற்பட்டுள்ளது.

அதில் ஜனாதிபதி ஜோ பைடன் கையெழுத்திட வேண்டும். இதற்கு நாளை சனிக்கிழமை நள்ளிரவு வரைதான் கால அவகாசம் உள்ளது.

பல்வேறு அமைப்புகளுக்கும் வரும் நவம்பர் வரை நிதி கிடைக்க வகை செய்யும் ஒரு சட்டமூலம் பாராளுமன்றத்தின் செனட் சபை நிறைவேற்றி உள்ளது. ஆனால் மக்களவை அதை நிராகரித்துவிட்டது.

குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் அனைத்தும் நல்லபடி நடக்கவில்லை என்றால் ஆயிரக்கணக்கான மத்திய அரசாங்க ஊழியர்கள் முதல் பொருளாதார புள்ளி விபரங்



களை வெளியிடுவது, சத்துணவு சேவைகளில் ஈடுபட்டு இருக்கும் இதர ஊழியர்கள் வரை அனைவரும் தற்காலிகமாக விடுப்பில் போக வேண்டிய நிலை ஏற்படும்.

பாராளுமன்றத்தின் செனட் சபை 77க்கு 19 என்ற கணக்கில் கடந்த செவ்வாய்க்கிழமை (26) ஒரு சட்டமூலத்தின் மீதான விவாதத்தை ஆதரித்தது.

அந்த சட்டமூலம் அரசாங்கத்திற்கு வரும் நவம்பர் 17ஆம் திகதி வரை நிதியை ஒதுக்க வகை செய்யும். உள்நாட்டுப் பேரிடர்களைச் சமாளிக்க சுமார் 6 பில்லியன் டொலர், உக்ரைனுக்கு உதவியாக மேலும் 6 பில்லியன் டொலர் ஒதுக்கவும் அது வழி செய்கிறது.

ஆனால் அதை குடியரசுக் கட்சியினர் ஆதிக்கம் செலுத்தும் மக்களவை நிராகரித்துவிட்டது.

மெக்சிகோவுடன் கூடிய எல்லை வழியாக அகதிகள் அதிகம் பேர் அமெரிக்காவுக்குள் நுழைகிறார்கள்.

இந்தப் பிரச்சினையைக் கவனித்தால்தான் சட்டமூலத்திற்கு அங்கீகாரம் கிடைக்கும் என்று அவர்கள் கூறுகிறார்கள். இதனிடையே, அரசாங்க முடக்கத்திற்கான வாய்ப்புகள், மாணவர் கடன் கொடுக்கும் நடைமுறை மீண்டும் ஆரம்பிக்கப்படும் நிலை, அதிக வட்டி விகிதம், மோட்டார் வாகன ஊழியர் வேலை நிறுத்த மிரட்டல் எல்லாம் தலைதூக்குவதால் அமெரிக்கப் பொருளாதாரம் சவால்களை எதிர்நோக்குவதாக வெள்ளை மாளிகை பொருளாதார ஆலோசகர் ஜெராட் பெர்ன்ஸ்டின் புதின்கிழமை (27) பொருளாதார கொள்கைப் பயிலகம் என்ற அமைப்பில் நடந்த நிகழ்ச்சியில் பேசியபோது தெரிவித்தார்.

அமெரிக்க அரசாங்கம் முடங்கினால் அது உலக அளவில் நிதிச் சந்தைகளையும் நாட்டின் நிதித் தரநிலையையும் பாதிக்கலாம்.

## விண்வெளியில் சிக்கியிருந்த வீரர்கள் பூமிக்கு திரும்பினர்

விண்வெளியில் மிக அதிக நாட்கள் இருந்த அமெரிக்க விண்வெளி வீரர் பூமிக்குத் திரும்பியுள்ளார்.

பிரெங்க் ருபியோவும் 2 ரஷ்ய வீரர்களும் கடந்த ஆண்டு செப்டம்பரில் விண்வெளிக்குச் சென்றனர். அவர்கள் 6 மாதங்களுக்கு முன் திரும்பவிருந்தனர். விண்கலத்தில் கோளாறு ஏற்பட்டதால் பயணம் தடைப்பட்டது. அவர்கள் புதிய விண்கலம் அனுப்பப்படும் வரை காத்திருக்க வேண்டியிருந்தது. இதனால் அவர்கள் 371 நாட்கள் விண்வெளியில் இருந்தனர். ருபியோ விண்வெளியில் மிக நீண்ட காலம் இருந்த அமெரிக்க வீரர் எனும் சாதனையைப்



படைத்தார். எனினும் விண்வெளியில் அதிக காலம் இருந்தவர் என்ற சாதனையை ரஷ்யாவின் வெலெரி பொல்யாகோவ் வசமுள்ள. பொல்யாகொவ் 1994 ஜனவரிக்கும் 1995 மார்ச் மாதத்திற்கு இடையே 437 நாட்கள் விண்வெளியில் இருந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பங்களாதேஷில் டெங்குவால் 1000 பேர் வரை உயிரிழப்பு

பங்களாதேஷில் டெங்கு காய்ச்சலினால் அண்மைய வாரங்களில் சுமார் 1,000 பேர் உயிரிழந்திருப்பதாக அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். இந்த தீவிர நிலை தொடர்ந்து நீடிப்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

வழக்கத்திற்கு மாறான பருவமழைக் காலம் டெங்கு வைரஸை ஏற்படுத்தும் நுளம்புகள் அசுத்தமான மற்றும் தேய்ந்திருக்கும் நீரில் இனப்பெருக்கம் செய்ய வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

நோயை கட்டுப்படுத்த அதிகாரிகள் போராடி வருவதோடு, மருத்துவமனைகள் நிரம்பி வழிகின்றன.

டெங்கு காய்ச்சலின் தீவிர நிலையில் உடலில் இரத்தக் கசிவு ஏற்பட்டு மரணத்திற்கு இட்டுச் செல்லும். தலைவலி, குமட்டல் மற்றும் மூட்டுவலி நோய் அறிகுறியாக உள்ளன.



பங்களாதேஷில் பருவகால நோயாக டெங்கு இருந்தபோதும் காலநிலை மாற்றத்தால் ஏற்படும் வெப்பமான மற்றும் ஈரலிப்பான பருவங்கள் காரணமாக இது அடிக்கடி ஏற்படும் ஒன்றாக மாறியுள்ளது.

## உஸ்பகிஸ்தான் களஞ்சியத்தில் பாரிய வெடிப்பு: ஒருவர் பலி

உஸ்பகிஸ்தான் விமானநிலையத்திற்கு அருகில் உள்ள களஞ்சியம் ஒன்றில் ஏற்பட்ட வெடிப்பில் ஒருவர் கொல்லப்பட்டு மேலும் 162 பேர் காயமடைந்துள்ளனர். இந்த வெடிப்பினால் அருகில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்பில் ஜன்னல் கதவுகள் உடைந்துள்ளன.

இதில் ஜன்னல் கதவு உடைந்து தன்மீது விழுந்ததால் பதின்ம வயதினர் ஒருவர் கொல்லப்பட்டிருப்பதாக அந்நாட்டு உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. 138 பேர் காயத்திற்கு சிகிச்சை பெற்றிருப்பதாகவும் 24 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் அது குறிப்பிட்டது. எனினும் தலைநகரில் உள்ள சர்வதேச விமானநிலையத்தில் விமானசேவைகள் வழக்கம்போல் இடம்பெற்றுள்ளன. இந்த களஞ்சியத்திற்கு மேலால் இரவு வானில் தீ



வெளிவரும் படங்கள் சமூக ஊடகங்களில் பகிரப்பட்டுள்ளன. எனினும் இந்த வெடிப்புக்கான காரணம் உறுதி செய்யப்படவில்லை.

## வடகொரியா வெளியேற்றியவர் அமெரிக்க தடுப்புக் காவலில்

வட கொரியாவிலிருந்து வெளியேற்றப்பட்ட அமெரிக்க இராணுவ வீரர் டிரேவிஸ் கிங் தற்போது அமெரிக்க தடுப்புக்காவலில் இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

23 வயது கிங், ஜூலை மாதம் தென் கொரியாவிலிருந்து சட்ட விரோதமாக வட கொரியாவுக்குச் சென்றார்.

அமெரிக்க இராணுவத்தின் மனிதத்தன்மையற்ற நடவடிக்கை, இனவாதம் ஆகியவற்றால் கிங் தப்பி வந்ததாக வட கொரிய ஊடகம் கூறியிருந்தது.

அவருடைய உடல்நிலை, வட கொரியாவில் அவர் சிறைவைக்கப்பட்டிருந்த விபரம் ஆகியவை குறித்து எதுவும் தெளிவாகத் தெரியவில்லை. கிங்கை வெளியேற்ற பியோங்யாங் முடிவு செய்திருப்பதாக வட கொரிய அரசாங்கச் செய்தி




நிறுவனம் நேற்று முன்தினம் (27) கூறியிருந்தது. கூடுதல் விபரங்களை அது வெளியிடவில்லை. 2021ஆம் ஆண்டிலிருந்து கிங் அமெரிக்க இராணுவத்தில் உள்ளார். சுழற்சி முறையில் அவர் தென் கொரியா அனுப்பப்பட்டிருந்தார். தாக்குதல் குற்றச்சாட்டுகளின் பேரில் அவர் அங்கு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தார். ஜூலை 10ஆம் திகதி விடுவிக்கப்பட்ட பின்னர் அவர் வட கொரியாவுக்குச் சென்றார்.

## ஈராக் தீ தொடர்பில் ஒன்பது பேர் கைது

ஈராக் திருமண மண்டபத்தில் நடந்த தீ விபத்து தொடர்பில் 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருமண மண்டப உரிமையாளர், ஊழியர்கள் ஆகியோரும் அவர்களில் அடங்குவர்.

விபத்தில் உயிரிழந்தவர்களுக்காக 3 நாள் தேசியத் துக்கம் அனுசரிக்கப்படும் என்று பிரதமர் முகமது ஷியா அல் சுடானி அறிவித்தார்.

திருமண விழாவின்போது நடந்த வாண வேடிக்கையால் தீ விபத்து ஏற்பட்டது. விருந்தினர்கள் நிரம்பியிருந்த மண்டபத்தை நெருப்பு சூழ்ந்தது.

எளிதில் தீப்பற்றக் கூடிய பொருட்கள் மண்டபத்தில் நிறைந்திருந்தன. அது பாதுகாப்பு விதிகளுக்கு முரணானது என்று ஈராக் சிவில் தற்காப்பு பணிப்பாளர் அலுவலகம் கூறியது.





## வியட்நாமில் கடும் வெள்ளம்

வியட்நாமின் மத்திய பகுதியில், கடும் வெள்ளத்தினால் ஆயிரக்கணக்கானோர் வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர். ஆற்றங்கரைக்கு அருகே மீன் பிடிக்கச் சென்ற குறைந்தது ஒருவரைக் காணவில்லை. தண்ணீர், உணவு, மின்சார வசதிகள் இன்றி பலர் சிக்கியிருப்பதாகக் கூறப்பட்டது.

வள்ளத்தில் மரங்கள் அடித்துச்செல்லப்பட்டன. ஆயிரக்கணக்கான ஹெக்டர் அளவு பயிர்களும் சேதமாயின. பாதிக்கப்பட்ட இடங்களில் எச்சரிக்கை அறிவிப்புகள் விடுக்கப்பட்டுள்ளன. வாகனங்கள் அந்தப் பகுதிகளுக்குள் நுழையாமல் இருப்பதை உறுதிசெய்ய அதிகாரிகள் பணியில் இருந்தனர். அதிகாரிகள் மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பவும் உதவினர்.

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2023 செப்டெம்பர் 29 வெள்ளிக்கிழமை

# தினகரன்
THINAKARAN தினகரன்

தொழுகை நேரம்
10 முதல் 13 வரை
சுபஹ் - 05.04
லுஹர் - 12.22
அஸர் - 03.38
மஃரிப் - 06.22
இஷா - 07.32

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் சித்திரை 5
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



## களுகங்கையின் நீர்மட்டம் உயர்வு

### தாழ்நிலப்பகுதி வாழ் மக்களுக்கு நீர்ப்பாசன திணைக்களம் எச்சரிக்கை

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

களுகங்கையின் நீர்மட்டம் உயர்வடைந்து வருவதாகவும் இதனால் தாழ்நிலப் பகுதிகளிலுள்ள மக்களை அவதானமாக இருக்குமாறும், நீர்ப்பாசனத் திணைக்களத்தின் இரத்தினபுரி மாவட்ட அலுவலகம் அறிவித்துள்ளது.

களுகங்கையின் கிளை ஆறுகளில் ஒன்றான குடாகங்கையின் இரு மருங்குகளிலும் தாழ்நிலப் பகுதிகளிலுள்ள மக்களையே அவதானமாக இருக்குமாறும், அந்த அலுவலகம் கேட்டுக்கொண்டுள்ளது.

இப்பகுதியில் 100 மில்லிமீற்றருக்கும் அதிகளவான மழை பெய்து வருவதை தொடர்ந்து இப்பகுதியிலுள்ள துணை வீதி

04

# போதைப்பொருள் கடத்தலை தடுக்க தன்னார்வ திட்டம்

## கடும் நடவடிக்கை எடுக்க பிரதமர் தினேஷ் வலியுறுத்து



போதைப்பொருள் பாவனை மற்றும் போதைப்பொருள் கடத்தல் கணிசமானளவு அதிகரித்துள்ளதினால் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென, பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

அலரி மாளிகையில் மாகாண ஆளுநர்களுடன் நடைபெற்ற சந்திப்பின் போதே, இதனை பிரதமர் தெரிவித்தார்.

உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால், பாதாள உலகக் குழுக்களுக்கு இடையிலான உள்நாட்டு மோதல்களினால் கொலைகள் எங்குபோய் முடிவடையுமென்பது உறுதியாகத் தெரியவில்லை. ஆகையினால், இந்த நிலைமை கட்டுப்படுத்தப்பட வேண்டுமென்பதுடன், நாட்டில் போதைப்பொருள் புழக்கத்தை தடுக்க மீண்டும் ஒரு தன்னார்வ வேலைத்திட்டம் தேவையெனவும், பிரதமர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, தனித்தனியாக நாட்டின் கல்வி முறையை மேம்படுத்த வேண்டிய முக்கியத்துவத்தை வலியுறுத்திய பிரதமர், மாகாண சபை மட்டத்திலுள்ள அனைத்து வெற்றிடங்களையும் நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் தெரிவித்தார்.

### அடுக்குமாடி தொடர் வீடமைப்பு திட்டத்தில்

## ரயில்வே திணைக்களத்தால் 100 வீடுகள் கையளிப்பு



களனிவெளி ரயில் பாதை அபிவிருத்திக்கான இடங்களை கையகப்படுத்தும் போது ரயில்வே திணைக்களத்தின் பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் அனுமதியின்றி வசித்தவர்களுக்கு தொடர் மாடி வீட்டுத் திட்டத்தில் உறுதிப்பத்திரத்துடன் 100 வீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், அண்மையில் போக்குவரத்து அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற நிகழ்வில் அதற்கான வீட்டு உரிமைப் பத்திரங்களை அமைச்சர் பந்துல குணவர்தன வழங்கி வைத்தார்.

தேசிய போக்குவரத்து கட்டமைப்பில் இலங்கை ரயில்வே துறையின் எதிர்பார்க்கப்படும் பங்களிப்பை அங்கீகரித்து, புறநகர் பகுதியில் ரயில் சேவையை அபிவிருத்தி செய்வதற்கான இடத்தை பெறுவதற்காக களனிவெளி

04

# IMF இரண்டாவது தவணையை இலங்கை விரைவில் பெறும்

## அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவிப்பு



சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது தவணையை இலங்கை விரைவில் பெறுமென்று, பதில் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் முழுமையான பொருளாதார மீட்சி இன்னும் உறுதி செய்யப்படவில்லயென்று சர்வதேச நாணய நிதியம் நேற்று முன்தினம் அறிவித்திருந்தை அடுத்தே, அவர் இவ்வாறு நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் தவணையை விரைவாக பெற்றுக்கொள்ள முடியுமென்ற நம்பிக்கை தமக்கு இருப்பதாகவும், அவர் தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடியின் மிகவும் கடினமான தருணங்களை வெற்றிகரமாக சமாளித்த அரசாங்கம், எதிர்வரும் நாட்களில் அதிலிருந்து முற்றாக விடுபடுவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமென்றும், அவர் தெரிவித்தார்.

பாரிய பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கை அதிலிருந்து மீண்டு வருவதாகவும் அனைத்தையும் சமாளிக்கும் திறன் இருப்பதாகவும் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவின் தலைவர் பீட்டர் ப்ரூயர் சுட்டிக்காட்டியதாகவும், அவர் தெரிவித்தார்.

தற்போது நாடு எதிர்கொண்டுள்ள மேலும் சில தடைகளை கடக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும், பதில் முதலீட்டு

04

### GCE A/L பரீட்சை பிற்போடப்பட்டால்

# கல்வியில் நீண்டகால நெருக்கடி ஏற்படலாம்

## ஜனாதிபதியிடம் கல்வித்துறை நிபுணர்கள் தெரிவிப்பு

க.பொ.த. உயர்தர பரீட்சை பிற்போடப்பட்டால் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பட்டப்படிப்புகளுக்கான வயதெல்லை அதிகரித்து இலங்கைக் கல்வியில் நீண்டகால நெருக்கடி ஏற்படலாமென, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கல்வித்துறை நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

பரீட்சைகளை ஒத்திவைப்பது தொடர்பாக முடிவு செய்யும் போது, அந்த விடயங்களையும் கருத்திற் கொள்ள வேண்டுமெனவும், கல்வித்துறை நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஆண்டுகளில் கொரோனா தொற்று, பொருளாதார நெருக்கடிகள் போன்றவற்றால் பரீட்சைகள் தாமதமாகி, பாடசாலைக் கல்வி தடைபட்டதை கல்வித்துறை நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

2023ஆம் ஆண்டுக்கான உயர்தர பரீட்சை 2024 ஜனவரிவரை ஒத்திவைக்கப்பட்டால், அந்த ஆண்டு மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் நடைபெறவிருக்கும் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை 2024 மே மற்றும் ஜூன்வரை ஒத்திவைக்க நேரிடும். 2023 உயர்தர பரீட்சை முடிவுகளை ஜுலை மாதத்திலேயே வெளியிட முடியும். பின்னர் 2024 உயர்தர பரீட்சைக்கு தோற்றும் விண்ணப்பதாரர்களுக்கு இம்முறை போன்று கூடுதல் நேரம் வழங்கப்பட வேண்டுமெனவும், கல்வித்துறை நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அவ்வாறானால், 2024 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தர பரீட்சை மீண்டும் டிசெம்பர் 2024 அல்லது ஜனவரி 2025வரை ஒத்திவைக்கப்படுமென்றும் இலங்கை கல்வித்துறையில் ஏற்கெனவே ஏற்பட்டுள்ள பின்னடைவை சரி செய்வது மேலும் தாமதமாகுமென்றும் அவர்கள் கருதுகின்றனர்.

04

# இலங்கை தேநீரின் சுவையால் கவரப்பட்ட சீன தூதுக் குழு




சர்வதேச தேயிலை பொருளாதாரத்தில் பாரிய தேயிலை உற்பத்தியாளர்களான சீனக் குடியரசின் Hainan Province துணை ஆளுநர் Gu Gang உள்ளிட்ட சீன இராஜதந்திர தூதுக் குழுவினர் கடந்த 25ஆம் திகதி பிட்டிகல தேயிலை தொழிற்சாலை வளாகத்துக்கு இலங்கை தேயிலை கைத்தொழிலின் அழகை கண்டு இரசிக்க வருகை தந்திருந்தனர்.

இந்த தூதுக்குழுவினரை அத்துக்கோரள குரூப்பின் தலைவர் அனுர அதுகோரள வரவேற்றிருந்தார். குறுந்துவத்த தேயிலை தோட்ட தேயிலை தொழிற்சாலை உற்பத்தி நடவடிக்கைகளை அவதானித்த பின்னர், சுற்றுலா தேயிலை ஊக்குவிப்பு விற்பனை

04

# பிரபல வேளாண் விஞ்ஞானி சுவாமிநாதன் காலமானார்



இந்தியாவின் பிரபல வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதன் தனது 98ஆவது வயதில் சென்னையில் நேற்று (280 காலமானார்.

இவரது மறைவுக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார். அத்துடன், விவசாயிகள் உட்பட பல்வேறு துறை சார்ந்தவர்களும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவில் பசுமை புரட்சிக்கு வித்திட்டவர்களில் முதன்மையானவராக அறியப்படுகின்ற சுவாமிநாதன், பசுமை புரட்சியின் தந்தையென்றும் அழைக்கப்படுகிறார். நாட்டில் பஞ்சம் போன்ற காலங்களில் விவசாயிகள் மற்றும் அரசாங்கத்தின் கொள்கைகளுடன் இணைந்து ஏனைய விஞ்ஞானிகளின் உதவியுடன் ஒரு சமூக புரட்சியையும் அவர் ஏற்படுத்தினார். சர்வதேச அரிசி ஆராய்ச்சி மையத்தின் இயக்குநராக பணியாற்றிய அவர், 40 க்கும் மேற்பட்ட விருதுகளை பெற்றுள்ளார்.

# ஒரு கோடி ரூபா பெறுமதியான ஐஸ் போதைப்பொருடன் ஒருவர் கைது

## 150,000 ரூபா பணமும் மீட்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியான ஐஸ் போதைப்பொருள் மற்றும் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பணத்துடன் 39 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் தெஹிவளையின் பஞ்ஞாலோக மாவத்தைப் பகுதியில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். அத்துடன், இச்சந்தேகநபரிடமிருந்து ஒரு கிலோ மற்றும் 10 கிராம் ஐஸ் போதைப் பொருள் மற்றும் அவரினால் போதைப்பொருள் வர்த்தகம் மூலம் சம்பாதித்த பணத்தையும் கைப்பற்றியுள்ளதாகவும், கொழும்பு

04

### கொடகம, ஆரச்சிகட்டு பகுதிகளில்

## முச்சக்கரவண்டி, லொறி ரயிலுடன் மோதி விபத்து

### இருவர் பலி, ஒருவர் படுகாயம்

லோரன்ஸ் செல்வநாயகம்



இருவேறு பிரதேசங்களில் நேற்று இடம்பெற்ற ரயில் விபத்துகளில் இருவர் மரணமடைந்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், ஆரச்சிகட்டுவ பிரதேசத்தில் ரயிலுடன் முச்சக்கரவண்டியொன்று மோதி விபத்துக்குள்ளானதில், முச்சக்கரவண்டிச் சாரதி சம்பவ இடத்தில் மரணமடைந்துள்ளார்.

கொழும்பு, கோட்டையிலிருந்து புத்தளம் நோக்கிச் சென்ற ரயில், ஆரச்சிகட்டுவ ரயில் நிலையத்துக்கு அருகிலுள்ள ரயில்வே கடவையில் நேற்று அதிகாலை 7.30

04

### சிறுமியின் கை அகற்றப்பட்ட விவகாரம்

## மருத்துவ நிபுணரின் ஊடாக பரிசோதிக்க நீதிமன்றம் உத்தரவு


யாழ். விசேட நிருபர்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அகற்றப்பட்ட சிறுமியின் கையை கொழும்பு பல்கலைக்கழக மருத்துவபீட விசேட உடற்கூற்று நிபுணரினூடாக பரிசோதிக்குமாறு, யாழ். நீதவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையில் கடந்த மாதம் 8 வயதுச் சிறுமி ஒருவர் காய்ச்சல் காரணமாக அனுமதிக்கப்பட்ட போது, சிறுமியின் கையில் பொருத்தப்பட்ட 'கனுலா' ஊசி மருந்து உரிய முறையில் பொருத்தப்படாததால், சிறுமியின் இடது கை மணிக்கட்டுடன் அகற்றப்பட்டது.

இது தொடர்பாக யாழ். போதனா வைத்தியசாலையினரும் மத்திய சுகாதார அமைச்சினரும் விசாரணை நடத்தும் அதேவேளை, யாழ். பொலிஸ் நிலையத்தில் சிறுமியின் பெற்றோர் செய்த முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸாரினூடாக யாழ். நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு, விசாரணை நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வெலிகமவில் மீலாதுன் நபி விழா



வெலிகம பைத்துர் பரக்காவில் தரீகத்துல் ஹக்கியத்துல் காதிரிய்யா அமைப்பின் சார்பாக அதன் தலைவர் அஸ்ஸய்யது ஜமாலிய்யா சைய்யது கலீல் அவுன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுசைனிய்யுல் தலைமையில் நேற்று முன்தினம் (27) ஆரம்பமான மீலாதுன் நபிவிழா இன்று (29) நிறைவடைகிறது.

இந்தியா, டுபாய், கட்டார், குவைத், மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளிலிருந்தும் நாட்டின் பல பிரதேசங்களிலிருந்தும் பிரதிநிதிகள் பங்குபற்றியுள்ள

04

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
புதன்கிழமை 2023.09.27
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5250
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 28,916,800.00
ஆங்கில எழுத்து P
வெற்றி இலக்கங்கள் 3 3 9 2 4 7

லக்கி 7 (Lucky 7)
திகதி 27.09.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0076
வெற்றி இலக்கினம் சிம்மம்
L7 இலக்கம் 3 8
வெற்றி இலக்கங்கள் 1 5 7 8 9 7
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 11,182,346.88

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3492
சீட்டிழுப்பு திகதி 2023.09.27
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 62,513,804.80
ஆங்கில எழுத்து I
வெற்றி இலக்கங்கள் 09 30 64 76
விசேட எழுத்து I
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 11745

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் 559
சீட்டிழுப்பு திகதி 2023-09-27
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,042,454.40
வெற்றி இலக்கினம் கும்பம்
வெற்றி இலக்கங்கள் 13 37 43 62
விசேட இலக்கினம் கும்பம்

தன நிதானய
தேதி 2023/09/27
சீட்டிழுப்பு இலக்கம் 1280
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 112,590,996.80
ஆங்கில எழுத்து W
வெற்றி இலக்கங்கள் 34 71 78 80
விசேட ஆங்கில எழுத்து W
Double Chance இலக்கம் 40666


Mega Power
சீட்டிழுப்பு இலக்கம் 1598
27/09/2023
Double Chance 48905
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 409,130,180.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த மிரண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து F
சுப்பர் இலக்கம் 03
வெற்றி இலக்கங்கள் 24 29 72 76

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 120.37 | 126.14 |
| கனடியன் டொலர் | 132.20 | 138.18 |
| யூரோ | 201.26 | 209.00 |
| ஜப்பான் யென் | 1.6887 | 1.7628 |
| சிங்கப்பூர் டொலர் | 128.46 | 133.83 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 224.45 | 232.40 |
| சுவிஸ் பிராங்க் | 187.86 | 195.81 |
| அமெரிக்க டொலர் | 183.51 | 188.61 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 492.89 | கட்டார் ரியால் | 50.73 |
| குவைத் டினார் | 603.09 | சவூதி ரியால் | 49.54 |
| ஓமான் ரியால் | 483.42 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 50.66 |

# சர்வதேச சட்டத்தரணிகள் சங்க கூட்டத்தொடரில் அஜ்ரா அஸ்ஹர்



சட்டத்தரணி அஜ்ரா அஸ்ஹர், சர்வதேச சட்டத்தரணிகள் சங்கத்தின் (International Bar Association) வருடாந்த கூட்டத்தொடரில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கான மதிப்புமிக்க முழு புலமைப்பரிசிலை பெற்றுள்ளார். இந்த விருது சட்டத்துறையில் அவரது சிறந்த பணிக்கான ஓர் அங்கீகாரமாகும். அவர் அக்டோபர் 29 முதல் நவம்பர் 3, 2023 வரை பிரான்சின், பாரிஸில் நடைபெறும் சர்வதேச சட்டத்தரணிகள் சங்கத்தின் வருடாந்த மாநாட்டில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்துவார்.

சட்டத்துறையில் அஜ்ரா அஸ்ஹரின் பயணம் மற்றும் வளர்ச்சி மிகவும் பாராட்டத்தக்கதாக உள்ளது. புத்தளத்தை பிறப்பிடமாகக் கொண்டு, புத்தளம் பாத்திமா பெண்கள் தேசிய பாடசாலையில் கலைப்பீடத்தில் உயர் கல்வியைத் தொடர்ந்து, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் சட்ட பீடத்தில் இளங்கலை பட்டம் பெற்று, பின்னர் கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்டபீடத்தில், மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகமயமாக்கலில் முதுமானி பட்டம் பெற்றவர் இவர்.

அவர் கல்வியில் சிறந்து விளங்கியது மட்டுமல்லாமல், கொழும்பு பல்கலைக் கழகத்தின் சட்டபீடத்தில் வருகை விரிவுரையாளராகவும் (visiting lecturer), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சட்டபீடத்தில் உதவி விரிவுரையாளராகவும் கடமையாற்றியமை கோடிட்டு காட்டக்கூடிய ஒன்றாகும்.

அவரது ஐந்தாண்டு தொழில் துறையில், சட்ட ஆராய்ச்சி (legal research), திட்ட முகாமைத்துவம் மற்றும் திட்ட ஒருங்கிணைப்பு உள்ளிட்ட பல்வேறு பாத்திரங்களில் அஜ்ரா அஸ்ஹர் தனது திறமைகளை வெளிப்படுத்தியுள்ளார். அவர் தற்போது சட்டத்தரணியாக பணிபுரிந்து வருவதுடன், கொழும்பு அசோசியேட்ஸ் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தின் பணிப்பாளராகவும் கடமையாற்றுகிறார். சட்ட, வணிக, கல்வி மற்றும் இடம்பெயர்வு ஆலோசனைகள் (Legal, Commercial, Educational and Migartion Consultancy services) மற்றும் நிறுவன பதிவுகள் (company registration) போன்ற இன்னும் பல சேவைகளை கொழும்பு அசோசியேட்ஸ் (பிரைவேட்) லிமிடெட் வெற்றிகரமாக வழங்கி வருகிறது.

தனது தொழில் துறையைத்தாண்டி, பல்வேறுபட்ட திட்டங்களுக்காக, பல உள்நாட்டு மற்றும் சர்வதேச நிறுவனங்களுக்கு ஆலோசகராக செயல்பட்டமை குறிப்பிடத்தக்கது. தனது தன்னார்வப் பணியின் மூலமாக சமூகத்தில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்த அஜ்ரா அஸ்ஹர் செயல்பட்டுவருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது. சர்வதேச சட்டத்தரணிகள் சங்கத்தின் வருடாந்த கூட்டத்தில் பங்கேற்பது மற்றும் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்துவது உள்நாட்டில் மட்டுமல்ல, சர்வதேச அளவிலான அங்கீகாரத்தை நம் நாட்டின் இளம் சட்டத்தரணிக்கு வழங்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை என தெரிவிக்கப்படுகிறது.

## களுகங்கையின்... (03 ஆம் பக்கத் தொடர்)

களில் வெள்ளம் ஏற்படும் அபாயம் நிலவுவதினால், வாகனச் சாரதிகளை அவதானமாக இருக்குமாறும் நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள் கேட்டுக்கொண்டனர்.

## ரயில்வே... (03 ஆம் பக்கத் தொடர்)

ரயில்வே திணைக்களத்துக்குரிய பாதுகாப்புப் பகுதியில் சீவலிபுர முதல் கிருலப்பனை வரையான பகுதியில் அனுமதியின்றி வசித்த 100 பேருக்கு வீட்டு உரிமைப் பத்திரங்கள் வழங்கப்பட்டன. கொழும்பு நகர அபிவிருத்தி அதிகார சபையினால் நிர்மாணிக்கப்பட்ட மாளிகாவத்தை லக் ஹிரு செவன மற்றும் காலிங்க மாவத்தை கொலொங்தொட்ட சரசவி உயன அடுக்குமாடி குடியிருப்புகளிலிருந்து இந்த வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடனுதவியின் கீழ் கொழும்பு புறநகர் ரயில் பாதை அபிவிருத்தித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

## பயங்கரவாத எதிர்ப்பு ...

சமர்ப்பிக்கப்படவுள்ளதுடன், அது நிகழ்ச்சிநிரலிலும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்தச் சட்டமூலத்தை நீதியமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதுடன், இணையவழி அமைப்பு பாதுகாப்பு தொடர்பான சட்டத்தையும் அதே தினத்தில் பாராளுமன்றத்தில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் சமர்ப்பிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.இதற்கமைய இணையவழி அமைப்பு பாதுகாப்பு தொடர்பான ஆணைக் குழுவை உருவாக்குவதற்கும் முன்மொழிவு செய்யப்பட்டுள்ளது. பாராளுமன்றம் எதிர்வரும் 3ஆம் திகதி கூடவுள்ளதுடன், பொருளாதார நெருக்கடி காரணமாக நாட்டை விட்டு வெளியேறியுள்ள தொழில் துறையினர் தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை விவாதமும் 6ஆம் திகதி சபையில் நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## IMF இரண்டாவது... (03 ஆம் பக்கத் தொடர்)

ஊக்குவிப்பு அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய மேலும் தெரிவித்தார்.

விரிவாக்கப்பட்ட நிதி வசதி ஏற்பாட்டின் கீழ் வேலைத்திட்டத்தின் முதல் மீளாய்வுக்கான இலங்கை விஜயத்தினுடைய நிறைவில், கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் பேசிய சர்வதேச நாணய நிதியத்தின் குழுவினர், இலங்கை அதிகாரிகளுடன் கலந்துரையாடல் தொடரலாமென அறிவித்திருந்தனர்.

## இலங்கை தேநீரின்... (03 ஆம் பக்கத் தொடர்)

நிலையத்துக்கு சென்று, எமது நாட்டின் அனைத்து பிரதேசங்களிலும் உற்பத்தி செய்யப்படும் தேயிலை ரகங்களையும் விசேடமாக அத்துக்கோரள தேயிலை தொழிற்சாலையில் பல வடிவங்களில் உற்பத்தி செய்யப்படுகின்ற ருஹுனு தேயிலை மற்றும் அத்துக்கோரள தொழிற்சாலைக்கே உரித்தான வகையில் உற்பத்தி செய்யப்படும் தேநீரின் சுவையையும் அனுபவித்திருந்தனர். புதிய பாதையை தேடி வரும் இலங்கை, தேயிலை கைத்தொழிலுக்கு சிறந்த எதிர்காலத்துக்கான வழியை திறப்பதற்கு இந்த தூதுக்குழுவினர் ஒப்புதல் அளித்ததுடன், எமது நாட்டில் உற்பத்தி செய்யும் தேயிலையை அந்நாட்டு சந்தைக்கு நேரடியாக இறக்குமதி செய்வதற்கும் பூரண ஒத்துழைப்பு அளிக்கவுள்ளதாக தெரிவித்தனர்.

## ஒரு கோடி ரூபா.... (03 ஆம் பக்கத் தொடர்)

குற்றப்புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர்.கொழும்பு குற்றத்தடுப்பு விசாரணை பிரிவுக்கு கிடைத்த தகவலை அடுத்து இச்சந்தேகநபரைக் கைது செய்துள்ளதுடன், தெஹிவளையைச் சேர்ந்த சந்தேகநபரிடம் மேலதிக விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், அந்த அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

## முச்சக்கரவண்டி... (03 ஆம் பக்கத் தொடர்)

மணியளவில் இந்த விபத்தை எதிர்நோக்கியதாக, பொலிஸார் தெரிவித்தனர். இதேவேளை, மிடியாகொடவின் கொடகம பிரதேசத்தில் ரயிலுடன் சிறிய ரக லொறியொன்று மோதி விபத்துக்குள்ளானதில் அந்த லொறியில் பயணித்த ஒருவர் சம்பவ இடத்தில் மரணமடைந்துள்ளதுடன்,

லொறியின் சாரதி படுகாயமடைந்துள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர். லொறியின் சாரதி பலபிட்டிய போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## வெலிகமவில்... (03 ஆம் பக்கத் தொடர்)

இந்த மீலாதுன் நபி விழாவின் நிறைவு வைபவத்தில் பேராசிரியர்களான கலாநிதி ஷைகு அப்துல்லாஹ் ஜமாலி, கலாநிதி மௌலவி வி.எஸ். அன்வர் பாதுஷா உலவி, மௌலவி எம்.முஸ்தஃபா மஸ்லஹி ஆகியோர் விசேட சொற்பொழிவு ஆற்றவுள்ளனர். நேற்று முன்தினம் ஆரம்பமான மீலாது நபி விழாவில் நபிகள் நாயகம் புகழ்பாக்களான சுபுஹான மவ்லூது, இரசூல்மாலை இவைகள் அனைவராலும் ஓதப்பட்டு உலக அமைதி, மக்கள் நிம்மதி இவைகளுக்காக பிரார்த்தனை செய்யப்பட்டதோடு, நேற்றைய நிகழ்வில் நபி புகழ் பாடல்கள் இசைக்கப்பட்டு, நபிபுகழ் இறுவெட்டுகள் வெளியிடப்பட்டன. இன்று வெள்ளிக்கிழமை நிகழ்வில் ஷைகு நாயகம் அஸ்ஸய்யிது ஜமாலியா கலீல் அவுன் மௌலானா அல் ஹஸனிய்யுல் ஹுசைனிய்யுல் ஹாஷமியினால் ஆக்கம் செய்யப்பட்ட உமர் ரலி புராணமும் ஜமாலிய்யா சைய்யது யாஸீன் மௌலானா நாயகம் அல் ஹஸனிய்யுல் ஹுசைனிய்யுல் ஹாஷிமியினால் எழுதப்பட்ட மிஷ்காதுல் அவுலியா ஷரஹீ யவானிஉ அஸ்மா ருந்நிமாஉ நூலும் வெளியிடப்படுகிறது. சைய்யது சாஜித் அலி மௌலானா, பேராசிரியர் வாரிது அலி மௌலானா, ஜாஹிது அலி மௌலானா, யாஸின் அலி மௌலானா மற்றும் தரீகத்துல் ஹக்கிய்யத்துல் காதிரிய்யா அமைப்பினர் இவ்விழாவை சிறப்பாக ஏற்பாடு செய்துள்ளனர்.

## தனுஷ்க குணதிலக...

அவர் அந்தப் பெண்ணுடன் பழகி அவரை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியதாக முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து, அந்நாட்டின் அரசாங்க சட்டத்தரணி அவருக்கு எதிராக வழக்கு தொடர்ந்தார். சாட்சியம் மற்றும் எழுத்துமூல சமர்ப்பணங்ளென கடந்த 4 நாட்களாக நீதிமன்றத்தில் விசாரணை மேற்கொள்ளப்பட்டதுடன், இந்த தீர்ப்பு நேற்று வெளியிடப்பட்டது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது, தனுஷ்க குணதிலக குற்றமற்றரென சிட்னியின் நியூசௌத் வேல்ஸ் மாவட்ட நீதிமன்ற நீதிபதி தீர்ப்பளித்தார்.

இந்நிலையில், பல்வேறு சர்ச்சைக்குள்ளான இந்த விவகாரத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

## கல்வியில்... (03 ஆம் பக்கத் தொடர்)

பரீட்சைகள் ஒத்திவைக்கப்படுவதால், பாடசாலைகளுக்கு மாணவர்களை சேர்ப்பதில் தாமதம் ஏற்படுமென்பதுடன், 11ஆம் 12ஆம் வகுப்பு மாணவர்கள் மேலதிக நேரம் தங்க வேண்டிய நிலையுடன் வகுப்பறைகளில் இடப் பிரச்சினையும் ஏற்படும்.

## கடந்த 11 மாதங்கள் எனக்கு...

முகங்கொடுத்ததுடன், தன்னோடு இருந்த அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதாக தெரிவித்த தனுஷ்க, தனது பழைய வாழ்க்கை மீண்டும் கிடைத்துவிட்டதாகவும் தெரிவித்தார். மீண்டும் கிரிக்கெட் அணியில் இணைந்து விளையாடும்வரை தன்னால் பொறுமையாக இருக்க முடியாதென்றும், அவர் தெரிவித்தார். ஆயினும், தான் மீண்டும் இலங்கை அணிக்காக விளையாடத் தயாராகவுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

## GCE (A/L) பரீட்சை திகதி ...

பாராளுமன்றத்தில் அறிவித்திருந்தார். பரீட்சைகளை நடத்துவதற்கான திருத்தப்பட்ட திகதிகள் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அறிவிக்கப்படுமென்றும், அவர் தெரிவித்தார். 2023 க.பொ.த. உயர்தரப் பரீட்சை, நவம்பர் 27ஆம் திகதி முதல் டிசெம்பர் 2ஆம் திகதிவரை நடைபெறுமென்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.எனினும், மாணவர்கள் பரீட்சைக்கு தயாராகுவதற்கு போதிய கால அவகாசம் இல்லையென்று ஆளும் மற்றும் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் விடுத்த கோரிக்கையை அடுத்து பரீட்சை ஒத்திவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## தங்கத்துடன் பெண் வர்த்தகர் ...

கொழும்பு, கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த 54 வயதான இந்தப் பெண் தொடர்ச்சியாக பயணப் பைகளில் மறைத்து வைத்து சட்டவிரோதமாக பொருட்களை கடத்தி வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்துள்ளதாக, அந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தப் பெண் இந்தியாவின் சென்னை நகரிலிருந்து இண்டிகோ விமான சேவைக்கு சொந்தமான 6 ஈ 1171ஆம் இலக்க விமானத்தில் நேற்று அதிகாலை 3.00 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்ததாகவும் அவரிடம் அனைத்து சோதனைகளையும் மேற்கொண்ட பின்னர் விமான நிலையத்திலிருந்து அவர் வெளியேற முற்பட்ட போதே, கைது செய்யப்பட்டதாகவும் அந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

அவரின் பயணப் பையில் 587 கிராம் மற்றும் 316 மில்லி கிராம் எடை கொண்ட தங்க ஆபரணங்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாகவும், அவர்கள் தெரிவித்தனர்.

## தனிநபர்கள், நிறுவன துப்பாக்கி...

மேற்கொள்ளப்படதெனவும், பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

துப்பாக்கி சட்டத்தின் பிரிவு 22 இன் விதிகளுக்கமைய, உரிமம் இல்லாமல் துப்பாக்கியை வைத்திருப்பது தண்டனைக்குரிய குற்றமென்றும், பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

இதற்கிடையில் 2024/2025ஆம் ஆண்டுக்கான தனியார் பாதுகாப்பு நிறுவனங்களின் பதிவை எதிர்வரும் முதலாம் திகதி முதல் டிசெம்பர் 31ஆம் திகதிவரை புதுப்பிக்க முடியும்.

காலக்கெடுவுக்கு பின்னர் செய்யப்படும் எந்தவொரு புதுப்பித்தல் நடவடிக்கைகளுக்கும் அபராதம் அல்லது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென்றும், பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவித்தது.

## துறைமுக, விமானத்துறைகளின்...

துறைகளாக துறைமுகங்கள் மற்றும் விமானப் போக்குவரத்துத் துறை காணப்படுவதுடன், அந்த துறைகளின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக இந்தச் சந்திப்பின் போது விரிவாக கலந்துரையாடியதாகவும், அமெரிக்கத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

துறைமுகங்கள் மற்றும் விமானப் போக்குவரத்து துறைகளின் வளர்ச்சி மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு அமெரிக்கா அர்ப்பணிப்புடன் செயற்படுமென்றும், அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## உள்ளூராட்சி தேர்தல் வேட்பு...

ஏகமனதாக அங்கீகாரம் வழங்கியது.

வேட்புமனுக்களை இரத்துச் செய்ய ஆலோசனைக் குழுவின் தீர்மானம் எதையும் செய்யாதென்றும் வேட்பு மனுக்களை இரத்துச் செய்ய வேண்டுமானால், அதை பாராளுமன்ற சட்டத்தின் மூலம் மட்டுமே செய்ய முடியுமென்றும், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர். எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்தார்.

கடந்த மார்ச் 09 ஆம் திகதி நடத்த தீர்மானிக்கப்பட்ட உள்ளூராட்சித் தேர்தல் நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு மற்றும் திறைசேரியினால் தேவையான நிதி விடுவிக்கப்படாததால், ஏப்ரல் 25ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

அந்நேரத்திலும் நிதி வெளியிடப்படாததால், மீண்டும் தேர்தலை காலவரையின்றி தேர்தல்கள் ஆணைக்குழு ஒத்திவைத்ததால், வேட்புமனு தாக்கல் செய்த அரச அதிகாரிகள் பலர் பல்வேறு சிரமங்களை சந்திக்க நேரிட்டது.

எவ்வாறாயினும் வேட்புமனுக்களை இரத்துச் செய்வதினால், சுமார் 1,000 கோடி இழப்பு ஏற்படுமென்றும் மக்களின் வாக்குரிமையை பறிக்கும் செயலென்றும் எதிர்க்கட்சி மற்றும் சிவில் அமைப்புகளிடமிருந்து விமர்சனங்கள் எழுந்ததினால், வேட்புமனுக்களை இரத்துச் செய்ய ஆலோசனைக் குழு முடிவு செய்திருந்தது.

## ரயில் மோதியதில் ஒரேநாளில் ...

பயணித்த இரவு தபால் ரயில், கல்கமுக நகருக்கு அண்டிய தேக்கங்காட்டு பிரதேசத்தில் யானைக் கூட்டத்தின் மீது மோதியதில், நான்கு யானைகள் உயிரிழந்துள்ளன.

இதேவேளை, கொழும்பு, கோட்டையிலிருந்து மட்டக்களப்பு நோக்கி பயணித்த மீனகயா ரயில் கெக்கிராவைக்கும் பளுகஸ்வெவவுக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் காட்டு யானைக் கூட்டத்தின் மீது மோதியதில், இரண்டு யானைகள் உயிரிழந்துள்ளதாகவும், அந்தத் திணைக்களம் தெரிவித்தது.

கல்கமுவ பிரதேசத்தில் இடம் பெற்ற விபத்தில் உயிரிழந்துள்ள நான்கு யானைகளில் மூன்று யானைகள் 10 வயதுக்கு குறைவானவை. மற்றைய யானை 12 வயதுக்கும் 13 வயதுக்கும் இடைப்பட்ட வயது உடையதெனவும், அந்தத் திணைக்களத்தின் மருத்துவர் இசுறுஹேவா கோட்டேகொட தெரிவித்தார். இந்த விபத்தின் போது யானையொன்று ரயில் இஞ்சினுக்கும் ரயில் பெட்டிக்கும் இடையில் சிக்கியிருந்த நிலையில் ரயில் பயணிகளும் கல்கமுக பொலிஸ் உத்தியோகத்தர்களும் இணைந்து மீட்டனர். இதன் காரணமாக அந்த ரயில் ஒரு மணித்தியாலத்துக்கும் மேல் தாமதமாகி சென்றதாகவும், அவர் தெரிவித்தார்.

இதேவேளை, பளுகஸ்வெவ பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்த இரண்டு யானைகளும் 15 வயதுக்கும் 20 வயதுக்கும் இடைப்பட்ட வயது உடையனவெனவும், அவர் தெரிவித்தார்.

வனஜீவராசிகள் அலுவலகத்துடன் இணைந்து கல்கமுக மற்றும் ஹபரண பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

## இந்திக்க தொடங்கொடவுக்கு...

வலைத்தளங்கள் மூலம் இந்திக்க தொடங்கொட பொய் பிரசாரங்களை மேற்கொண்டிருந்தார்.

இதனால் தனது நற்பெயருக்கு களங்கம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்து அமைச்சர் பந்துல குணவர்தன தமது சட்டத்தரணிகளினூடாக நீதிமன்றத்தில் மனுவொன்றை தாக்கல் செய்தார்.

ஜனாதிபதி சட்டத்தரணி வி.கே.சொக்சி, டி.எஸ்.ரத்நாயக்க மற்றும் மினோலி அலெக்சாண்டர் ஆகியோர் அடங்கிய சட்டத்தரணிகள் குழுவினர், சட்டத்தரணி தம்மிகாவின் ஆலோசனையின் பேரில் நீதிமன்றத்தில் விடயங்களை தெளிவுபடுத்தினர்.

இதனையடுத்து வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட கொழும்பு மாவட்ட நீதிமன்றம், ரயில்வே சாரதி இந்திக்க தொடங்கொடவுக்கு எதிராக தடையுத்தரவை பிறப்பித்துள்ளது.

அந்த வகையில் அவர் எந்த விதத்திலும் பேச்சுவார்த்தைகளில் கருத்துகளை முன்வைத்தல், தாம் அல்லது வேறு நபர்களினூடாக நேரடியாக அல்லது மறைமுகமாக இழிவுபடுத்தும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் அல்லது தொடர்ச்சியாக நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் செயற்படுதல், ஊடகங்கள் அல்லது சமூக வலைத்தளங்கள் மூலமாக அல்லது வேறு வழியில் முறைபாட்டாளர்களை இழிவுபடுத்தும் வகையில் எந்த விடயங்களையும் தெரிவிப்பதற்கு அவருக்கு உரிமை கிடையாதென்று நீதிமன்றம் அந்த தடையுத்தரவில் குறிப்பிட்டுள்ளது.

மேற்படி மனுவை எதிர்வரும் ஒக்டோபர் 11ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளவும் நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக இந்திக்க தொடங்கொடவுக்கு எதிராக அமைச்சர் பந்துல குணவர்தன குற்றத்தடுப்பு விசாரணைத் திணைக்களம், இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிலும் முறைப்பாடுகளை முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மழையுடனான சீரற்ற...

ஏற்படக்கூடுமென்றும், நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்தது.

இந்நிலையில், ஆறுகளை அண்டிய தாழ்நிலப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் அவதானமாக இருக்க வேண்டுமென்றும் பொது மக்களை அந்தத் திணைக்களம் கேட்டுக்கொண்டது.

மேல், சப்ரகமுவ, வடமேல், மத்திய, ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் அதிகளவான மழை வீழ்ச்சி பதிவாகலாம். இதற்கமைய மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் 100 மில்லிமீற்றருக்கும் அதிகளவான மழை வீழ்ச்சி பதிவாகலாமென்றும் வடமேல் மாகாணத்திலும் கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டத்திலும் 100 மில்லிமீற்றருக்கும் அதிகளவான மழை வீழ்ச்சி பதிவாகலாமென்றும், வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்தது.

கடந்த 24 மணித்தியாலங்களில் கேகாலை மாவட்டத்தில் அதிகளவான மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதுடன், அந்த மாவட்டத்தின் மாலிம்பொட பகுதியில் 152 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் களுத்துறை மாவட்டத்தின் இங்கிரிய பகுதியில் 101.5 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவாகியுள்ளதாகவும், அந்தத் திணைக்களம் தெரிவித்தது.

இதேவேளை, 07 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கையை தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் விடுத்துள்ளது.

கண்டி, கேகாலை, களுத்துறை, இரத்தினபுரி, காலி, மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களுக்கே மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், களுத்துறை மாவட்டத்தின் இங்கிரிய பிரதேச செயலக பிரிவுக்கும் கண்டி மாவட்டத்தின் பஸ்பாகே கோரளைக்கும் இரண்டாம் கட்டமாக மண்சரிவு அபாய எச்சரிக்கையை அந்த நிறுவனம் விடுத்துள்ளது.

கடும் மழை, வெள்ளம், மண்சரிவு, இடி, மின்னல் போன்ற இயற்கை அனர்த்தங்களிலிருந்து தம்மை பாதுகாத்துக்கொள்வதில் பொதுமக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டுமென்றும் பொதுமக்களிடம் மேற்படி நிறுவனங்கள் கேட்டுக்கொண்டுள்ளன.

## IMF இன் இரண்டாவது...

முன்னெடுக்கப்படுமென்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (28) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே, பதில் நிதி அமைச்சர் செஹான் சேமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த பதில் அமைச்சர்,

"நிதி அமைச்சு மற்றும் மத்திய வங்கியின் பங்கேற்புடன் அண்மையில் சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. அதனை தொடர்ந்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனும் பிரதிநிகள் குழுவினர், நீண்ட கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இதுவரையில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் கடன் மறுசீரமைப்பு செயற்பாடுகள் மற்றும் நீடிப்பு செயற்பாடுகளுக்கு பாராட்டு தெரிவித்த சர்வதேச நாணய நிதியக் குழுவினர், அந்த செயற்பாடுகளை முன்னெடுக்கும் போது மக்கள் வழங்கிய ஒத்துழைப்புக்கும் பாராட்டு தெரிவித்தனர்.

குறிப்பாக சர்வதேச நாணய நிதியத்துடனான செயற்குழு மட்டத்திலான இணக்கப்பாட்டினை விரைவில் எட்ட முடியுமென்ற நம்பிக்கை அரசாங்கத்துக்கு உள்ளதாகவும், அதற்காக வரி சேகரிப்பு செயற்பாடுகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய சீர்த்திருத்தங்கள் மற்றும் வரி செலுத்தாமல் இருப்போரை கண்டறிவதற்கான வேலைத்திட்டம் தொடர்பாக ஐ.எம்.எப் குழுவினர் ஆலோசனைகளை வழங்கியிருந்தனர்.

மேலும், இந்த பேச்சுவார்த்தைகள் தொடர்பான தவறான எண்ணங்களை பரப்ப சிலர் முயற்சித்து வருவதாகவும், மேற்படி வேலைத்திட்டத்தின் கீழ் இன்னும் பல செயன்முறைகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது.

இந்நிலையில் இலங்கையின் உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு செயற்பாடுகள் முழுமையாக நிறைவடைந்துள்ள நிலையில், வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு செயற்பாடுகளில் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக இந்தியா மற்றும் ஜப்பான் உள்ளிட்ட நாடுகள் இணைத் தலைமைத்துவம் வகிக்கும் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

கடன் மறுசீரமைப்பு செயற்பாடுகளில் இலங்கைக்கு சில நாடுகள் ஒத்துழைப்பு வழங்கவில்லையென்று போலியான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டாலும், இலங்கைக்கு கடன் வழங்கிய நாடுகள் பலவும் வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு செயற்பாடுகளின் முன்னேற்றகரமான பேச்சுவார்த்தையில் தொடர்ச்சியாக பங்களிப்பு செய்து வருகின்றன.

மறுமுனையில், நாட்டின் பணவீக்கம் 1.3ஆக குறைவடைந்துள்ளமை மற்றும் கையிருப்பு அதிகரித்துள்ளமை வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களின் பணம் அனுப்பும் செயற்பாடுகள் சுமூகமான நிலைக்கு திரும்பியுள்ளமை, நாட்டின் அடிப்படைக் கணக்கின் வைப்புத் தொகை அதிகரித்துள்ளமை என்பன மகிழ்ச்சிக்குரியது. இருப்பினும், அரசாங்கத்தின் வருமானம் 48% ஆக அதிகரித்துள்ள நிலையில், செலவீனம் 38% ஆக அதிகரித்துள்ளது.

கடன் மறுசீரமைப்பு செயற்பாடுகள் இடம்பெற்றுவரும் காலப்பகுதியில் கடன் செலுத்துவதற்கு தவணைகளை செலுத்துவதற்கு மாறாக, பெருமளவில் வட்டி பணத்தை செலுத்த நேர்ந்துள்ளமையே அரச செலவீனங்கள் அதிகரிக்க காரணமாகியுள்ளன. எவ்வாறாயினும், ஜனாதிபதியின் தலைமைத்துவத்தின் கீழான பொருளாதார மறுசீரமைப்புகளின் பலனாக எதிர்வரும் பண்டிகை காலப்பகுதியில் நாட்டின் பொருளாதாரம் வலுவான நிலைமையை அடையுமென்றும் நம்பிக்கை உள்ளது.

தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் பொருளாதார மறுசீரமைப்புகளை 20 வருடங்களுக்கு முன்பாக செய்திருக்கும் பட்சத்தில், நாடு வலுவான நிலைமையை அடைந்திருக்கும். அதன்படி அபிவிருத்தி அடைந்த நாடுகள் பின்பற்றிய அனைத்து படிமுறைகளையும் அரசாங்கம் பின்பற்றி வருகின்றது.

இவ்வாறான நிலைமைகளுக்கு மத்தியில் இந்நாட்டில் பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டால், அதனால் தமது அரசியல் செயற்பாடுகளுக்கு பாதிப்பு ஏற்படக்கூடுமெனக் கருதுகின்ற சிலர் தவறான கருத்துகளை பரப்ப முற்படுகின்றனர். ஆனால், சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் தவனை கடன் இலங்கைக்கு கிடைக்காதென எவரும் குறிப்பிடவில்லை" எனத் தெரிவித்தார்.

## இந்திய நிதி அமைச்சரிடமிருந்து...

அமைச்சர் சீதாராமன் வழங்கிய ஆதரவு மற்றும் வழிகாட்டுதலுக்கு உயர்ஸ்தானிகர் மிலிந்த மொகொட இதன்போது பாராட்டு தெரிவித்ததுடன், கடந்த ஆண்டு நிதி நெருக்கடியின் போது இலங்கையின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கு சுமார் நான்கு பில்லியன் டொலர்களை வழங்குவதில் நிதி அமைச்சரின் தனிப்பட்ட தலையீட்டுக்கும் உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட மீண்டும் ஒருமுறை நன்றி தெரிவித்தார்.

இலங்கைக்கான சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி (EFF) ஏற்பாட்டை நனவாக்குவதற்கு இந்திய அரசாங்கம் எடுத்துள்ள தலைமைக்கும் இந்தச் சூழலில் இருதரப்பு அபிவிருத்தி பங்காளிகள் மற்றும் சர்வதேச நாணய நிதியம் உட்பட பலதரப்பு நிதி நிறுவனங்களுடன் இலங்கையின் விவகாரத்தை எடுத்துக்கொள்வதில் அமைச்சர் சீதாராமனின் தனிப்பட்ட ஈடுபாட்டுக்கும் உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட நன்றி தெரிவித்தார்.

இந்திய நிதி அமைச்சர் மீதான பாராட்டு மற்றும் நல்லெண்ணத்தின் அடையாளமாக களனி ரஜ மகா விகாரையின் சுவரோவியங்களை உள்ளடக்கிய இலங்கை தொல்பொருள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 'உறுமயக்க அருமய' எனும் இரண்டு நூல் தொகுதிகளை அமைச்சர் சீதாராமனிடம் உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட வழங்கினார்.

# கிழக்கின் குரல்



## கிழக்கில் மீலாத் விழா நிகழ்வுகள்


(படம் மட்டக்களப்பு குறூப் நிருபர் )


(படம்; அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்)



இஸ்லாத்தின் இறுதித்தூதர் முகம்மது நபி அவர்களின் பிறந்த தினத்தையொட்டி கிழக்கில் நேற்றைய தினம் பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்றன. அந்தவகையில் அக்கரைப்பற்று ஏஸ். கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மீலாத் விழா நேற்று (28) அக்கரைப்பற்று எப்.என். வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்றதுடன் அல்குர்ஆன் தமாம் வைபவமும், விசேட சமய நிகழ்வுகளும் அன்னதான நிகழ்வும் நடைபெற்றது. அதேபோல் சாய்ந்தமருது மாளிகைக்காடு ஜும்ஆ பெரிய பள்ளிவாசலினால் மீலாத் தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட மரநடுகை நிகழ்வு சாய்ந்தமருது மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் வளாகத்தில் நேற்று நடைபெற்றது. காத்தான்குடி பத்ரியா ஜும்மா பள்ளிவாசலில் நேற்றிரவு மீலாதுந் நபி விசேட மௌலித் வைபவம் நடைபெற்றது.

## அறுகம்பையில் உலக சுற்றுலா தின விழிப்புணர்வு நடைபவனி

**அட்டாளைச்சேனை விசேட நிருபர்**

உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு கிழக்கு மாகாண சுற்றுலா பணியகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற சுற்றுலா மற்றும் பசுமை முதலீடு எனும் தொனிப்பொருளிலான விழிப்புணர்வு நடைபவனியும் மர நடுகை நிகழ்வும் அறுகம்பை பிரதேசத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானும் கௌரவ அதிதியாக பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப்பும் கலந்து கொண்டனர்.விசேட அதிதிகளாக கிழக்கு மாகாண சுற்றுலா பணியக தவிசாளர் ஏ.பீ. மதன், சுற்றுலா பணியக பணிப்பாளர் சபை உறுப்பினர் எம்.ஏ. ஜெஸ்வத், இலங்கை சுற்றுலா



மன்றத் தலைவர் ஜௌபர், பாராளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர் வை.எல்.நியாஸ் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

அறுகம்பை பிரதான வீதியில் நடைபெற்ற விழிப்புணர்வு நடைபவனி நிகழ்வில் சுற்றுலாத்துறை வர்த்தகர்கள், அதிகாரிகள், அமைப்புகளின் பிரதிநிதிகள்,பொதுமக்களென பெருமளவிலானோர் பங்கேற்றனர்.

கிழக்கு மாகாண ஆளுநர் மற்றும் சுற்றுலா பணியகத்தின் தவிசாளர் ஏ.பீ.மதன் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் திட்டமிட்ட செயற்பாடுகளால் கிழக்கில் சுற்றுலாத்துறை அபிவிருத்தி மிக வேகமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அத்தோடு அறுகம்பை பிரதேசத்தை சுற்றுலா வலயமாக்கி உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளை வரவழைப்பதன் ஊடாக முதலீட்டு வாய்ப்புக்களை ஏற்படுத்துவதற்காக தொடர்ச்சியான முயற்சிகளை பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முசாரப் மேற்கொண்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## பெண்கள் அதிகளவில் மார்பக, கர்ப்பப்பை புற்றுநோயால் பாதிக்கப்படுகின்றனர்

### ஆரம்பத்திலேயே அறிந்துகொண்டால் குணப்படுத்தலாம் –Dr.ஏ.எம்.இஸ்மாயில்

**ஒலுவில் விசேட நிருபர்**

மார்பகப் புற்று நோயை ஆரம்பத்திலேயே அறிந்து கொள்வதன் மூலம் முற்றாக குணப்படுத்தலாம் என அட்டாளைச்சேனை பிரதி சுகாதார வைத்தியதிகாரி டாக்டர் ஏ.எம். இஸ்மாயில் தெரிவித்தார்.

பாலமுனை சுகாதார நிலையத்தில் மார்பகப்புற்று நோய் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

இலங்கையில் அதிகமான பெண்கள் மார்பகப் புற்று



நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் அறிக்கையின் மூலம் அறிய முடிகின்றது.

பெண்கள் மார்பக மற்றும் கர்ப்பப்பை புற்றுநோய்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

இதை நேர காலத்துடன் கண்டுபிடித்து சிகிச்சையளிப்பதன் மூலம் இந்நோய் பரவாமல் கட்டுப்படுத்த முடியும்.

அரசாங்கத்தினால் நாடு பூராகவும் மார்பக சிகிச்சை நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு மார்பக மற்றும் கர்ப்பப்பை புற்றுநோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சையளிக்கப்படுகின்றது.

அட்டாளைச்சேனை சுகாதார வைத்தியதிகாரி அலுவலகத்தில் மார்பக மற்றும் கர்ப்பப்பை புற்று நோய் தொடர்பான பரிசோதனைகள் நடைபெறுகின்றன. 35 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் இச்சிகிச்சை நிலையத்துக்குச் சென்று தங்களை பரிசோதிக்க வேண்டும்.

பரிசோதனையின் போது மார்பக மற்றும் கர்ப்பப்பை புற்றுநோய் கண்டறியப்படும் பட்சத்தில் சிகிச்சைகள் வழங்கப்படும்.

## வாழைச்சேனை மீன்பிடித் துறைமுகத்தில் படகு உரிமையாளர்கள் ஆர்ப்பாட்டம்

**கல்குடா தினகரன் நிருபர்**

வாழைச்சேனை மீன்பிடித் துறைமுக பகுதியில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் படகு உரிமையாளர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் நேற்று ஈடுபட்டனர்.

வெசல்; மொனிட்டரிங் சிஸ்டம், ஐஸ் கட்டி விலை அதிகரிப்பு, தரமான வலை கிடைக்காமை, துறைமுகத்தில் இடப்பற்றாக்குறை போன்றவற்றை நிவர்த்தி செய்து தருமாறு கோரியே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது படகு உரிமையாளர்களின் வாழ்வாதாரத்தை சுரண்டாதே, துறைமுக குறைபாடுகளை நிவர்த்தி செய்,ஐஸ் விலையை குறை என பல வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மீன்பிடி துறைமுகத்தில் ஏறத்தாள



150 படகுகளுக்கு மேல் நிறுத்துவதற்கு இடப்பற்றாக்குறை நிலவுவதாகவும் இவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அதுமட்டுமின்றி துறைமுக நிர்வாகத்தால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய செலவுகளால் மீன்பிடித் தொழிலை முன்னெடுப்பது மிகவும் சிரமமாக உள்ளதாகவும் படகு உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆகையால் தகுந்த தீர்வை பெற்றுத்தருமாறு கேட்டுக்கொள்வதாக படகு உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

போராட்டத்தில் கலந்து கொண்ட படகு உரிமையாளர்களின் கோரிக்கை அடங்கிய மகஜர்களை பெற்றுக்கொள்ள எந்த அதிகாரிகளும் சமுகளிக்காத காரணத்தால் ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர்.

## அக்கரைப்பற்றில் ஆலங்கட்டி மழை

**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**

அக்கரைப்பற்று, பள்ளிக்குடியிருப்பு பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் மாலை ஆலங்கட்டி (ஐஸ்) மழை பெய்துள்ளதா க அப்பகுதி மக்கள் தெரிவி க்கின்றனர். சுமார் ஐந்து நிமிடங்களுக்கு மேல் ஆலங்கட்டி மழை பெய்துள்ளதுடன் வீட்டுக்கூரையில் கல் எறிவது போல் சத்தம் கேட்டதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

அத்தோடு, அன்றையதினம் வீசிய கடும் காற்றினால் வீதியிலிருந்த பெரிய மரம் வீழ்ந்ததில் அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியின் முன் மதில் சேதமடைந்துள்ளதுடன், பொதுமக்கள் வசிக்கும் வீட்டின் கூரைத்தகடுகளும் சேதமடைந்துள்ளன. இன்னும், பாதையில் வீழ்ந்த மரத்தினால் வீதிப்போக்குவரத்தில் நெரிசல் ஏற்பட்டுள்ளது. அதனை உடனடியாக சுத்தப்படுத்தி போக்குவரத்து தடையை நிவர்த்தி செய்ய வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### அம்பாறை மாவட்டத்தில்

## காலநிலைக்கு உகந்த நீர்ப்பாசன விவசாய திட்ட மீளாய்வு கூட்டம்



**மாளிகைக்காடு குறூப் நிருபர்**

உலக வங்கியின் அனுசரணையுடன் அம்பாறை மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் காலநிலைக்கேற்ற நீர்ப்பாசன முன்னேற்ற திட்டம் தொடர்பான மீளாய்வு கூட்டம் அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்ரம தலைமையில் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அம்பாறை மாவட்டத்தில் லாகுகல, பொத்துவில் மற்றும் திருக்கோவில் ஆகிய பிரதேச செயலகங்களுக்குட்பட்ட கிராமங்களை உள்ளடக்கிய 34 கிராம சேவகர் பிரிவுகள் இந்த மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டன.

இத்திட்டங்கள் அனைத்திலும் உள்ள தற்போதய நிலவரத்தை ஆராய்ந்து, அதிலுள்ள சிக்கல்கள், இத்திட்டம் முடிவடைவதற்கான காலஎல்லை என்பன பற்றி மிக விரிவாக ஆராயப்பட்டன.

இக்கூட்டத்தில் அம்பாறை மாவட்டத்திலுள்ள பிரதேச செயலாளர்கள், அம்பாறை மாவட்ட திட்ட பணிப்பாளர் எச்.பி.அனீஸ் நீர்ப்பாசன பணிப்பாளர் சுதத் கமகே, விவசாய சேவைகள் உதவி ஆணையாளர் திருமதி சாமினி சோமதாச, நிறுவன தலைவர்கள், அரச அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## பொத்துவில் விவசாயக் காணிகளுக்கு புதிய பாதை

**அட்டாளைச்சேனை விசேட நிருபர்**

பொத்துவில் ஆமவட்டுவான், கச்சக்கொடி,வேகாமம் போன்ற விவசாயக் காணிகளுக்கு செல்வதற்கான புதிய பாதை அமைக்கும் நடவடிக்கைகள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முசாரப்பின் முயற்சியால் எடுக்கப்பட்டுள்ளன.

முறையான பாதை வசதிகள் இன்மையால் அப்பகுதி விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். எனவே இப்பிரச்சினையை தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகளை பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முசாரப் எடுத்துள்ளார்.

இப்பாதை அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து காணி உரிமையாளர்கள், கமக்கார அமைப்



பினர், பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முசாரப்பை சந்தித்து வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

அந்தவகையில் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முசாரப், ஆமவட்டுவான், கச்சக்கொடி,வேகாமம் போன்ற விவசாயக் காணிகளுக்கு நேரடியாக விஜயம் செய்து பாதை அமைக்கப்படவேண்டிய இடங்களைப் பார்வையிட்டார்.

பாராளுமன்ற உறுப்பினருடன் பொத்துவில் பிரதேச செயலாளர் எம்.ஐ.பிர்னாஸ், நீர்ப்பாசன பொறியியலாளர், வன இலாகா அதிகாரி, கமக்கார அமைப்பினர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

மூன்று விவசாயக் காணிகளுக்கான புதிய பாதை எவ்வாறு அமைய வேண்டும் என்ற தீர்மானம் எடுக்கப்பட்டதுடன் எதிர்வரும் சனிக்கிழமை பாதை அமைப்பதற்கான வேலைத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கிண்ணியா மத்திய கல்லூரியின் 65 ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு நடைபவனி!

**கிண்ணியா மத்திய நிருபர்**

கிண்ணியா மத்திய கல்லூரியின் 65 ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு நேற்று பழைய மாணவர்களின் நடைபவனி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கல்லூரி மைதானத்திலிருந்து ஆரம்பித்த இந்த நடைபவனி, பிரதான வீதியாக சென்று, மட்டக்களப்பு திருகோணமலை வீதியை அடைந்து, அங்கிருந்து மாஞ்சோலைச்சேனை வீதி வழியாக வலம் வந்து, கல்லூரி வாயிலை அடைந்தது.

கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினால், ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நடைபவனியில், 65 அடி நீளமான கல்லூரி கொடி இணைத்துக் கொள்ளப்பட்டதோடு, இந்தக் கல்லூரியில் கல்விகற்று பல்வேறு உயர் பதவிகளிலுள்ள பழைய மாணவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

அத்தோடு, இன்றிலிருந்து மூன்று நாட்களுக்கு, பல்வேறு கலை, கலாசார மற்றும் விளையாட்டு நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

ஆரம்ப நிகழ்வில், கிண்ணியா வலயக்கல்வி பணிப்பாளர் ஏ. நகூகர்கான், பிரதி கல்வி பணிப்பாளர் எம். சி. நசார் மற்றும் பாடசாலை முன்னாள் அதிபர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## செந்நெல் கிராம ஆரம்ப பராமரிப்புப்பிரிவு பிரதேச வைத்தியசாலையாக தரமுயர்வு

**சம்மாந்துறை கிழக்கு தினகரன் நிருபர்**

சம்மாந்துறை செந்நெல் கிராம ஆரம்ப பராமரிப்பு சுகாதாரப் பிரிவு பிரதேச வைத்தியசாலையாக தரமுயர்த்தப்பட்டுள்ளது.

சம்மாந்துறை பிரதேச செயலகத்துக்குட்பட்ட செந்நெல் கிராம ஆரம்ப பராமரிப்பு சுகாதாரப் பிரிவில் காணப்படும் ஆளணிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதுடன் முக்கிய வளங்களை பெற்றுக் கொள்வதற்காகவும் பிரதேச வைத்தியசாலையாக தரமுயர்த்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் தொடர்ச்சியாக பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்விளைவாக அண்மையில் சுகாதார அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் அதற்கான அங்கீகாரம் கிடைத்திருந்ததுடன் நேற்றுமுன்தினம் (27) அதற்கான உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. வைத்தியசாலைகளின் மறுசீரமைப்பு மற்றும் தரமுயர்த்தல் தொடர்பில் நேற்று நடைபெற்ற முக்கிய கலந்துரையாடலில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ், திட்டமிடல் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம். மாஹீர் பங்குபற்றியிருந்ததுடன் வைத்தியசாலையை பிரதேச வைத்தியசாலையாக தரம் உயர்த்துவதற்கான காரணம் மற்றும் மக்களின் அபிப்பிராயம் தொடர்பில் விரிவாக விளக்கியிருந்தனர்.

குறித்த கோரிக்கையை ஏற்றுக் கொண்ட சுகாதார அமைச்சின் தரமுயர்த்தல் குழுவானது செந்நெல் கிராம ஆரம்ப பராமரிப்பு சுகாதாரப் பிரிவை பிரதேச வைத்தியசாலையாக தரம் உயர்த்துவதற்கான கோரிக்கையை ஏற்றுக்கொண்டது வைத்தியசாலையை பிரதேச வைத்தியசாலையாக தரம் உயர்த்துவதற்காக பெரிதும் ஒத்துழைத்த முன்னாள் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஏ.ஆர்.எம் தௌபீக், தற்போதைய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் மெலிண்டன் கொஸ்தா, மாகாண திட்டமிடல் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி உள்ளிட்ட ஏனைய பிரிவு தலைவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார்.



ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான சஜித் பிரேமதாச அக்கரைப்பற்று ஸ்ரீ இராமகிருஸ்ண தேசிய பாடசாலைக்கு புதிய பஸ் ஒன்றை நேற்று அன்பளிப்பு செய்துள்ளார். ஐக்கிய மக்கள் சக்தியின் பிரபஞ்சம் எனும் வேலைத்திட்டத்தின் ஊடாக நாட்டிலுள்ள பாடசாலைகளுக்கு தேவையான பஸ் வண்டிகள் மற்றும் இதர கல்வி உபகரணங்கள் தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.
(படம்; வாச்சிக்குடா விசேட நிருபர்)

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் புரட்டாதி மாதம் 13ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ரபீஉனில் அவ்வல் பிறை 13

### குறள் தரும் சிந்தனை



பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
கலந்தீமை யாற்றிரிந் தற்று

பாத்திரம் களிம்பு பிடித்திருந்தால், அதில் ஊற்றி வைக்கப்படும் பால் எப்படிக் கெட்டுவிடுமோ அதுபோலப் பண்பு இல்லாதவர்கள் பெற்ற செல்வமும் பயனற்றதாகி விடும்.

# பொருளாதார மறுசீரமைப்பில் பாராட்டத்தக்க முன்னேற்றங்கள்

கடந்த வருடத்தின் ஆரம்ப கட்டத்தில் கடும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளான இலங்கை, குருகிய காலப்பகுதிக்குள் மீட்சி பெற்று மறுமலர்ச்சிப்பாதையில் பிரவேசித்திருக்கிறது. இதனையிட்டு உலகின் பல நாடுகளும் உதவி வழங்கும் நிறுவனங்களும் இலங்கையைப் பாராட்டியுள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் தலைமைப் பதவியை ஏற்றது முதல் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளான நாட்டை மீளக்கட்டியெழுப்பும் நோக்கில் விரிவான அடிப்படையிலான வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றார். அவ்வேலைத் திட்டங்களின் பிரதிபலன்களை நாடும் மக்களும் அனுபவிக்கும் வாய்ப்பை குருகிய காலத்திற்குள் பெற்றுக் கொண்டுள்ளனர். குறிப்பாக மக்களுக்கு அளிக்கப்படுகின்ற நிவாரணங்களும் சலுகைகளும் அவற்றின் பிரதிபலன்களே அன்றி வேறில்லை.

இலங்கை முன்னெடுத்துவரும் பொருளாதார மேம்பாட்டு வேலைத்திட்டங்களும் சர்வதேச நாணய நிதியத்துடன் மேற்கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தத்தின் அடிப்படையிலான உதவி, ஒத்துழைப்புகளும் இதற்கு பெரிதும் பங்களித்துள்ளன.

குறிப்பாக வீழ்ச்சி கண்ட நாட்டை பொருளாதார ரீதியில் மீளக்கட்டியெழுப்புவதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் உதவி, ஒத்துழைப்புக்களைப் பெற்றுக் கொள்ளும் வகையில் கடன் சலுகை நீடிப்பை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார மறுசீரமைப்பு தொடர்பில் கடந்த மார்ச் மாதம் அந்நிதியத்துடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. அத்தோடு 2.9 பில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு வழங்க இணக்கம் தெரிவித்த இந்நிதியம், அக்கடன் தொகையில் முதற்கட்ட தொகை நிதியையும் மார்ச் மாதமே வழங்கியது.

இது பொருளாதார நெருக்கடிக்கு உள்ளான நாட்டை மீளக்கட்டியெழுப்பும் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த உதவியதோடு சர்வதேச மட்டத்தில் இலங்கை தொடர்பில் நம்பிக்கைகள் ஏற்படவும் வித்தூன்றின.

நாட்டின் பொருளாதார மேம்பாட்டின் நிமித்தம் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதன் பயனாக 2022 செப்டெம்பரில் 70 சதவீதமாகப் பதிவாகிய பணவீக்கத்தை, இவ்வருடம் (2023) செப்டெம்பர் மாதம் 2 சதவீத மட்டத்திற்கு கொண்டுவர முடிந்துள்ளது. இவ்வருடம் மார்ச் முதல் ஜுன் வரையான காலப்பகுதியில் மொத்த வெளிநாட்டு கையிருப்பு 1.5 பில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளது. புலம்பெயர் தொழிலாளர்கள் நாட்டுக்கு அனுப்பிவைக்கும் அந்நியச் செலாவணியும் கடந்த வருடத்தை விடவும் இவ்வருடம் அதிகரித்துள்ளது. அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடுகள் நீங்கியுள்ளன. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டு வருமானப் பெறுகைகளிலும் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

அதேநேரம் கட்டமைப்பு ரீதியிலான மறுசீரமைப்புகளிலும் இந்நாடு சிறப்பான முன்னேற்றங்களை வெளிப்படுத்தியுள்ளது. மத்திய வங்கி தொடர்பான புதிய சட்டம், ஊழல் ஒழிப்பு சட்டம் உள்ளிட்ட பொருளாதார ரீதியிலான முக்கிய சட்டங்கள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. உள்ளகக் கடன் மறுசீரமைப்பு செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துதல், வெளியகக் கடன் வழங்குனர்களுடனான பேச்சுவார்த்தைகளை விரிவுபடுத்துதல் என்பவற்றின் மூலம் கடன் ஸ்திரத்தன்மையை மீள அடைந்து கொள்வதிலும் முன்னேற்றங்கள் எட்டப்பட்டுள்ளன.

இவ்வாறான சூழலில் சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தின் முன்னேற்றங்கள் குறித்து மீளாய்வு செய்யும் நோக்கில் அந்நியத்தின் பிரதிநிதிகள் குழு பீட்டர் பீரேவுர் தலைமையில் கடந்த 14 ஆம் திகதி இலங்கைக்கு வருகை தந்தது. இக்குழுவினர் இவ்வாரம் 26 ஆம் திகதி வரை ஜனாதிபதி செயலகம், நிதியமைச்சு மற்றும் இலங்கை மத்திய வங்கி என்பவற்றின் உயரதிகாரிகளுடன் மீளாய்வுக் கூட்டங்களை நடாத்தினர். இக்கூட்டங்களின் போது இலங்கையின் பொருளாதார மறுசீரமைப்புக்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து விரிவாக கவனம் செலுத்தப்பட்டுள்ளன.

அதனடிப்படையில் இலங்கைக்கு வருகை தந்த சர்வதேச நாணயப் பிரதிநிதிகள் இலங்கை மத்திய வங்கி கேட்போர் கூடத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தனர். அச்சமயம் பீட்டர் பீரேவுர் 'பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகி மீட்சி பெற்றுவரும் இலங்கை, மக்கள் பாரிய சவால்களுக்கு மத்தியிலும் குறிப்பிட்டுக் கூறத்தக்கவாறான மீண்டெழும் தன்மையினை வெளிக்காட்டியுள்ளனர். மிகக் கடினமானதும், மிக அவசியமானதுமான மறுசீரமைப்புகளை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை பாராட்டத்தக்க முன்னேற்றங்களை காண்பித்துள்ளது' என்று கூறியுள்ளார்.

கடும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளான இந்நாடு குருகிய காலப்பகுதிக்குள் மீட்சி பெற்று வருவதை சர்வதேச நாணய நிதியப் பிரதிநிதிகளின் கூற்றுக்களும் உறுதிப்படுத்தி நிற்கின்றன. பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக முன்னெடுக்கப்பட்டுவரும் வேலைத்திட்டங்களுக்கு கிடைக்கப்பெற்றுள்ள அங்கீகாரமாக இக்கூற்றுக்களை நோக்க முடியும். இது நாட்டின் தலைமைக்கும் பொருளாதார மேம்பாட்டுக்காக அவர் முன்னெடுக்கும் திட்டங்களுக்கும் கிடைக்கப்பெற்றுள்ள வெற்றியாகும்.

ஆகவே நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டங்களுக்கு கட்சி அரசியல் பேதங்களுக்கு அப்பால் ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கப்பட வேண்டும். நாட்டின் மறுமலர்ச்சிக்கு அது இன்றியமையாததாகும்.

editor.tkn@lakehouse.lk

# இலங்கை பொலிஸ் கல்லூரியின் 75 ஆவது ஆண்டுவிழா (29.09.2023)



## பொலிஸ் மஹகெதரவுக்கு (தாய்வீட்டுக்கு) 75 வயது

இலங்கை பொலிஸின் 'மககெதர' என்று அழைக்கப்படும் இலங்கை பொலிஸ் கல்லூரிக்கு 75 வருடங்கள் பூர்த்தி அடைந்துள்ளது. அன்று முதல் இன்றுவரை பல மைல்கற்களை கடந்து மகத்தான ஒரு பணியை நிறைவேற்றிய பெருமைக்குரியதாக இலங்கை பொலிஸ் கல்லூரி திகழ்கிறது.

இலங்கை பொலிஸ் நாட்டின் மிகப் ப மைமையான நிறுவனங்களில் ஒன்றாகும். மேலும் தற்போது நீதியை நிலைநாட்டும் ஒரு தனித்துவமான நிறுவ னமாக இலங்கை பொலிஸை அறிமுகப்படுத்த முடியும்.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கி லே யர் ஆட்சிக்காலத்தில் பொலிஸ் து றை முறையாக ஒழுங்கமைக்கப் படாவிட்டாலும், பொலிஸ்துறைப் பணி களுக்கு நிகரான அதிகாரிகளின் பிரிவு அந்தக் காலத்தில் பொறுப்பில் இருந்ததாகத் தெரிகிறது. அந்த அதிகாரிகள் திசாவே, கோரளே, விதானே, மொஹொட்டாலா, முதியான்சே, முஹந்திரம் எனப் பல்வேறு பெயர்களில் அறியப்பட்டார்கள். மேலும் அவர்களின் அதிகாரபூர்வ பெயர்களுக்கு ஏற்ப, பல்வேறு பணிகள் மற்றும் அதிகாரங்கள் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டன.

நாட்டில் பிரித்தானிய ஏகாதிபத்திய ஆட்சியின் போது இலங்கை பொலிஸின் முறையான ஆரம்பம் 1866 செப்டம்பர் 08 ஆகும். முதல் பொலிஸ் மாஅதிபராக ஜி.டபிள்யூ.ஆர். கேம்ப்பெல் நியமிக்கப்பட்டார்.

மருதானை பொலிஸை அடிப்படையாகக் கொண்டு பொலிஸ் பயிற்சி நடவடிக்கைகள் ஏதோ ஒரு விதத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், தொண்டர் தலைமையகம் என அழைக்கப்படும் கொழும்பு குமார வீதியில் உள்ள ஒல்லாந்து கட்டடத்தில் முறையான பயிற்சி நடவடிக்கைகள் 1905 இல் ஆரம்பமாகின.

முதல் பயிற்சிக் குழுவாக, 436 பொலிஸ் கொன்ஸ்டபிள்கள் பணியில் இணைக்கப்பட்டு பயிற்சியளிக்கப்பட்டனர். பயிற்சி நிறைவுவிழா நடத்தப்பட்டு, அந்த அதிகாரிகள் பொலிஸ் நிலையங்களுக்கு நியமிக்கப்பட்டனர்.

அந்த ஒல்லாந்த கட்டடம் பயிற்சி நடவடிக்கைகளுக்கு போதுமானதாக இல்லாததால் மார்ச் 26, 1925 இல், பொலிஸ் கல்லூரி பம்பலப்பிட்டி பொலிஸ் மைதானத்திற்கு அருகிலுள்ள பல கட்டடங்களுக்கு மாற்றப்பட்டது.

1948 ஆம் ஆண்டு பொலிஸ் பயிற்சியின் ஒரு தனித்துவமான தருணம் ஆகும். ஏகாதிபத்தியவாதிகளிடம் இருந்து நாடு சுதந்திரம் அடைந்தது. சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் முதலாவது பொலிஸ் மாஅதிபராக சேர் ரிச்சர்ட் அலுவிஹாரே நியமிக்கப்பட்டார்.

அவரது தலையீட்டில் செப்டம்பர் 29, 1948 இல் பொலிஸ் பயிற்சிக் கல்லூரியை களுத்துறைக்கு கொண்டு செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டன. களுத்துறைக்கு கொண்டு வரப்பட்ட பொலிஸ் பயிற்சிக் கல்லூரியின் முதலாவது பணிப்பாளராக பொலிஸ் மாஅதிபரின் பணிப்புரையின் கீழ் பொலிஸ் அத்தியட்சகரான சிட்னி சொய்சா நியமிக்கப்பட்டார்.

பொலிஸ் பயிற்சிக் கல்லூரி என்ற பெயரை 1974 ஆம் ஆண்டு செப்டெம்பர் 1 ஆம் திகதி முதல் இலங்கை பொலிஸ் கல்லூரி என அழைக்க அன்றைய அதிகாரிகள் முடிவு செய்தனர்.

களுத்துறை இலங்கை பொலிஸ் க ல்லூரி 204 ஏக்கர் கொண்ட பயிற்சிக்கு மிகவும் பொருத்தமான காணியில் அமைந்துள்ளதுடன், இந்தக் காணியை 204 ஏக்கராக விஸ்தரிப்பதற்கு முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க மற்றும் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தன ஆகியோர் பெரும்பணி ஆற்றியுள்ளார்கள்.

களுத்துறை பொலிஸ் கல்லூரியின் பயிற்சி நடவடிக்கைகளின் போது, இலங்கையில் உள்ளகப் பயிற்சிக்காக அதிகளவான அதிகாரிகளை இணைத்துக் கொள்வதற்காக 08 மேலதிக பயிற்சிப் பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எல்பிட்டிய, பொரலந்த, குண்டசாலை, நிக்கவெரட்டிய, பஹலகம, மஹியங்கனை, கல்லடி, அரலகங்வில ஆகிய பொலிஸ் கல்லூரிகள் பயிற்சி நடவடிக்கைகளுக்காக தொடர்ந்தும் பங்களித்துவருகின்றன.

இலங்கை பொலிஸ் கல்லூரியின் முதல் பணிப்பாளராக கடமையாற்றிய பொலிஸ் அத்தியட்சகர் சிட்னி டி சொய்சா தொடங்கி இதுவரை 27 பணிப்பாளர்கள் பதவி வகித்துள்ளனர். தற்போது இலங்கை பொலிஸ் கல்லூரியின் 28 வது பணிப்பாளராக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே.ஏ.சந்திரசேன நடவடிக்கை மேற்கொள்கிறார்.

ஆட்சேர்ப்பு மற்றும் பயிற்சி மாவட்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபராக சட்டத்தரணி சம்பத் குமார லியனகேயும், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர் உதவி சேவையாளராக ரன்மல் கொடித்துவக்கும் நடவடிக்கையில் ஈடுபடுகிறார்கள். பணிப்பாளராக இலங்கை பொலிஸ் கலலூரி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே.ஏ.சந்திரசேன பணிபுரிகிறார்.

களுத்துறை பொலிஸ் கல்லூரியுடன் இணைந்த ஏனைய அனைத்து கல்லூரிகளிலும் பிரதிப் பொலிஸ் பணிப்பாளராலோ அல்லது உதவிப் பணிப்பாளராலோ நிர்வாக மற்றும் பயிற்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.



ரன்மல் கொடித்துவக்கு
சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர்
(உதவிகள் சேவை)



சட்டத்தரணி சம்பத் குமார லியனகே
பிரதி பொலிஸ் மா அதிபர், இணைத்துக் கொள்ளல் பயிற்சி மாவட்டம்

இலங்கை பொலிஸ் கல்லூரியின் அனைத்து பயிற்சிப் பிரிவுகளையும் சேர்த்து ஒரேநேரத்தில் 4550 பயிற்சி அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்க முடியும். பயிலுனர் உத்தியோகத்தர்களுக்கு உயர்தரப் பயிற்சிகளை வழங்குவது இலங்கை பொலிஸ் கல்லூரியின் முதன்மையான பணியாகும். பயிலுனர் பொலிஸ் கான்ஸ்டபிள் சாரதிகள், பயிலுனர் பொலிஸ் கான்ஸ்டபிள்கள் மற்றும் பெண்கள், பயிலுனர் சப்இன்ஸ்பெக்டர்கள் மற்றும் பெண்கள் பயிலுனர் உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள் மற்றும் பெண்கள் பயிற்சி அதிகாரிகளாக பயிற்சிக்காக ஆட்சேர்ப்பு செய்யப்படுகின்றனர்.

பயிலுனர்களுக்கு தமது பயிற்சிக் காலத்தில் சட்டம் மற்றும் நடைமுறை காவல், நீதித்துறை கடமைகள், திறன் பயிற்சிகள், ஆயுதப் பயிற்சிகள், உடற் பயிற்சிகள், தற்காப்பு போர், வன போர் பயிற்சி, பல்வேறு விளையாட்டு நிகழ்வுகளில் ஈடுபடுதல், பொதுஒழுங்கு முகாமைத்துவம், அறிவியல் குற்றவியல் விசாரணை, தகவல் தொழில்நுட்பம் போன்றவற்றில் பயிற்சியினை பொலிஸ் கல்லூரி பல்வேறு பாடப்பிரிவுகளில் பயிற்சி அளிக்கிறது.

இந்தப் பாடங்களுடன் பல்வேறு திறன்கள் மற்றும் மன எண்ணங்களை வளர்ப்பதற்காக பல திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. சேதன உர உற்பத்தி மூலம் பல்வேறு விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வது, மத மற்றும் கலாசார நடவடிக்கைகள் மூலம் ஆன்மிக நற்பண்புகளை வளர்ப்பது, சினிமா காட்சிகள், இசை நிகழ்ச்சிகள், பல்வேறு கச்சேரிகள், பேச்சுப் போட்டிகள், வினாடி வினாக்கள் மூலம் கலைத்திறன்களை மேம்படுத்துதல், கேள்வி பதில் நிகழச்சிகள் மூலம் திறன் மேம்பாடு, புதுவருட கொண்டாட்டங்கள், விளையாட்டு நிகழ்வுகள் மூலம் குழு உருவாக்கம், உணர்வு மேம்பாடு, போன்ற பல்வேறு திட்டங்கள் பொலிஸ் கல்லூரி மூலம் செயல்படுத்தப்படுகின்றன.

1972 முதல் இன்றுவரை 74 பயிலுனர் உதவி பொலிஸ் அதிகாரிகள், 03 பெண் உதவி பொலிஸ் அதிகாரிகள், 5944 உதவி பொலிஸ் பரிசோதகர்கள், 696 பெண் பயிலுனர் சப்இன்ஸ்பெக்டர்கள், 85739 பயிலுனர் பொலிஸ் கொன்ஸ்டபிள்கள், 9865 பெண் பயிலுனர் பொலிஸ் கொன்ஸ்டபிள்கள், 6982



ஜே.ஏ.சந்திரசேன
பணிப்பாளர், இலங்கை பொலிஸ் கல்லூரி, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்



எஸ்.பி. சிட்னி த சொய்ஸா
பொலிஸ் கல்லூரியின் முதலாவது பயிற்சிப் பணிப்பாளர்

பொலிஸ் கொன்ஸ்டபிள் சாரதிகள் என 1972 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை ஒரு இலட்சத்து ஒன்பதாயிரத்து முந்நூற்று மூன்று அதிகாரிகள் பொலிஸ் பணிக்காக பொலிஸ் கல்லூரியால் பங்களிப்பு செய்யப்பட்டுள்ளார்கள்.

இந்த அடிப்படை பயிற்சி நடவடிக்கைகளுடன், பொலிஸ் துறையில் பணி புரியும் பொலிஸ் அதிகாரிகளுக்கான பல மேம்பட்ட பயிற்சி வகுப்புகள் இந்த பொலிஸ் கல்லூரியில் இயங்கி வருகின்றன. சோக்கோ டிப்ளோமா பாடநெறி, போக்குவரத்து முகாமைத்துவ பாடநெறி, தொழிலுக்கு இசைவாகும் பாடநெறி, பொதுமக்கள் அமைதிக்கான அமைதி முகாமைத்துவ பாடநெறி, போர்ப்பயிற்சி மற்றும் வனப்பகுதி பயிற்சி, கணினிப் பயிற்சி பாடநெறி, ஐ.நா. அமைதி காக்கும் நடவடிக்கைகளுக்கான அதிகாரிகள் பயிற்சி, பயிற்சி வழங்குபவர்களுக்கான பயிற்சி, பயிற்சி திறன் மேம்பாட்டு பயிற்சி, வாகனஓட்டுநர் பயிற்சி வகுப்புகள் என பல பயிற்சிகள் இந்த பொலிஸ் கல்லூரியில் நடத்தப்படுகின்றன.

மேலும், இந்தக் கல்லூரி பல்வேறு அரசு நிறுவனங்களுக்கு குறுகியகால பயிற்சி வகுப்புகளையும் வழங்குகிறது. பொதுநிர்வாக சேவையின் புதிய அதிகாரிகள், கணக்காளர்கள், குடிவரவு குடியகல்வு துறை அதிகாரிகள், மீன்வளத்துறை அதிகாரிகள், தடயவியல் மருத்துவர்கள், வனவிலங்கு மற்றும் வனப்பாதுகாப்பு அதிகாரிகள் போன்ற பல்வேறு நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகளுக்கான சட்ட அறிவு மற்றும் தலைமைத்துவ பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்துகிறது. இது இயல்பாகவே இலங்கை பொலிஸாருக்கும் ஏனைய அரச நிறுவனங்களுக்கும் இடையில் பரஸ்பர புரிந்துணர்வு மற்றும் நல்லெண்ணத்தை வளர்க்க வழிவகுக்கும்.

நாட்டின் எதிர்கால பாதுகாவலர்களாக விளங்கும் பாடசாலை மாணவர்களுக்காக பொலிஸ் கெடட் முகாம்களை நடத்துதல் மற்றும் பயிற்சி பெற்று வெளியேறுபவர்களுக்கான விழா மற்றும் அவர்களின் பயிற்சி நடவடிக்கைகளுக்கு பொலிஸ் கல்லூரி பெரும் ஆதரவை வழங்கி வருகிறது.

இலங்கையின் முக்கிய அரச விழாவான சுதந்திர தின கொண்டாட்டத்தினை அழகுபடுத்த முப்படைகளின் அணிவகுப்புக்கு இணைந்ததாக பொலிஸ் கல்லூரி அவர்களுக்கு பயிற்சியளித்து அரச தலைவர்கள், வெளிநாட்டு பிரதிநிதிகள், அதிகாரிகள், மக்கள் முன்னிலையில் இலங்கை பொலிஸ் துறைக்கு மரியாதை சேர்க்கிறது.

இவ்வாறு புதிய அதிகாரிகளுக்கு பயிற்சி அளித்தல், பணியில் ஈடுபடும் காவல்துறை அதிகாரிகளுக்கு மேம்பட்ட பயிற்சி வகுப்புகள் நடத்துதல், பல்வேறு அரசு நிறுவனங்களின் அதிகாரிகளுக்கு பயிற்சி வகுப்புகள் நடத்துதல் போன்றவற்றுடன் பாதுகாப்புக்கான மகத்தான பணிக்கு பொறுப்பான அதிகாரிகளுக்கு பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இலங்கை மக்களின் உயிர்கள் மற்றும் உடைமைகளை பாதுகாக்கும் பணிக்கு இலங்கை பொலிஸ் கல்லூரியானது அதிகாரிகளை வழங்குவதற்கான பாரிய பணியை தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றது.

இலங்கை பொலிஸ் கல்லூரி 75 வருடங்களை பூர்த்தி செய்யும் இத்தருணத்தில், இங்கு பயிற்சி பெற்ற அனைத்து அதிகாரிகள், பணிக்குழுவினர், இங்கு கடமையாற்றிய அனைத்து பணிப்பாளர்கள், அனைத்து தரத்திலும் தொடர்ந்து பணியாற்றி வரும் மற்றும் சேவையாற்றி ஓய்வுபெற்ற அனைத்து தரப்பு உத்தியோகத்தர்களையும் கௌரவமாக நினைவு கூர்ந்து கௌரவிக்கின்றோம்.

இலங்கை பொலிஸ் கல்லூரியின் 75வது ஆண்டு நிறைவை கௌரவத்துடனும் பெருமையுடனும் கொண்டாடுவோம்.

### இலங்கை பொலிஸ் கல்லூரியின் பார்வை:

பொதுமக்களுடனான நட்பு, தொழில்முறை மற்றும் பெருமைமிக்க பொலிஸ் சேவைக்கான அதிகாரிகளை உருவாக்குவதன் மூலம் நாட்டில் அனைத்து மக்களும் பாதுகாப்பாக வாழ்வதை உறுதி செய்தல்.

**பணி:**

சட்டம் மற்றும் ஒழுங்கைப் பாதுகாப்பதற்கும், திறமையான, புத்திசாலியான, அறிவுத் திறன்களை கொண்ட பொலிஸ் அதிகாரிகளை உருவாக்க, மனிதாபிமான மனப்பான்மையை ஏற்படுத்த அர்ப்பணிப்பு செய்துள்ளோம்.

தமிழில்: **வீ.ஆர்.வயலட்...**

# மட்டு. ஆசிரியர் கலாசாலையின் நான்காவது ஒன்றுகூடல் நிகழ்வு

மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையின் 1991 /1992 புலன அணியினரின் நான்காவது ஒன்றுகூடல் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பில் நடைபெற்றது. புலன அணியின் தலைவர் வி.ரி. சகாதேவராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், திருமலை தொடக்கம் திருக்கோவில் வரையிலான 42 உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள்.

விசேட அதிதிகளாக முன்னாள் அதிபர் சிவஞானம் அகிலேஷ்வரன் மற்றும் குடும்ப உறுப்பினராக முன்னாள் அதிபர் கே. பாஸ்கரன் ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள். அதேவேளை, மட்டக்களப்பு ஊறணியைச் சேர்ந்த புலன உறுப்பினரான கவிமாமணி புண்ணியமூர்த்தி அஞ்சலாதேவி தம்பதியினரின் 29 ஆவது திருமணநாள் விழாவும் சிறப்பிக்கப்பட்டது. அருட்கவியரசு ஆ.புட்கரன் திருமணநாள் வாழ்த்தை யாத்து பாடி வழங்கினார். பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டு லண்டன் நண்டு நடா மற்றும் உறுப்பினர்களின் அன்பளிப்புகள் வழங்கி வைக்கப்பட்டன.

கூடவே, அணியின் பாடகி ஆசிரியை சுகுணமதியின் தாயாரின் இறுதிக் கிரியையிலும் புலன அணியினர் கலந்து கொண்டார்கள்.



காரைதீவு குறூப் நிருபர்...

ஜனனம் அறக்கட்டளையின் ஏற்பாட்டில்

## தரம்–05 புலமைப்பரிசில் மாணவருக்கு கருத்தரங்கு



2023ஆம் ஆண்டு தரம்05 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கான மாபெரும் இலவச பரீட்சை வழி காட்டல் கருத்தரங்கு கொட்டாஞ்சேனையிலுள்ள விவேகானந்தா கல்லூரியில் நாளை சனிக்கிழமை (30) காலை 8.30 மணி முதல் பிற்பகல் 3.00 மணிவரை நடைபெறவுள்ளது.

கலாநிதி ஜனகன் எண்ணக்கருவில் உருவான 'ஜனனம் அறக்கட்டளையின் கல்விக்கு கரம் கொடுப்போம்'எனும்செயற்றிட்டத்தின் கீழ் ஜனனம் அமைப்பின் தலைவர் கலாநிதி வி.ஜனகன் தலைமையில் இந்தக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

இதில் வளவாளர்களாக எம்.ஐ.முரத் மற்றும் எம்.எச்.எம்.சதாத் கலந்து கொள்ளவுள்ளதாக, ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## கம்பஹாவில் கருத்தரங்கு

கம்பஹா மாவட்டத்திலுள்ள முஸ்லிம் பாடசாலைகளின் கல்வித்தர மேம்பாட்டுக்கான மூலோபாயங்களை ஆராயும் அதிபர்களுக்கான மூன்று நாள் வதிவிட கருத்தரங்கு மல்வானை மாபிடிக்கம செய்லான் எஸ்டேட் பங்களாவில் நேற்று முன்தினம் 27 ஆம் திகதி ஆரம்பமானதோடு இன்று 29 ஆம் திகதி வரை நடைபெறுகிறது.

மல்வானை அல் முஹ்சீன் விஞ்ஞானக் கல்லூரி, கம்பஹா மாவட்ட அதிபர்கள் சங்கத்துடன் இணைந்து நடாத்தப்படும் இவ் ஆய்வு கருத்தரங்கில் கம்பஹா மாவட்டத்தின் முஸ்லிம் பாடசாலைகளின் தற்போதைய கல்வி நிலைமை தொடர்பில் ஆராய்ந்து குறிப்பிட்ட வளர்ச்சிக்கான இலக்கை அடைவதற்கான வழிமுறைகள் தொடர்பாகவும் ஆராயப்படுகிறது. மாவட்டத்திலுள்ள அதிபர்களுக்கிடையிலான உறவை மேம்படுத்துவதற்கான திட்டங்களும் வகுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் என். கபூர்தீன் அங்குரார்ப்பண வைபவத்தில் ஆரம்ப உரை நிகழ்த்தியதோடு சிறப்புப் பேச்சாளர்களாக களனி வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் எம்.டி.ஏ. தௌசீர், மினுவாங்கொட வலயக் கல்விப்பாணிப்பாளர் எம்.ஜே.எம். றிஸ்வி, கொழும்புப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.எம். சாபிர் ஆகியோரும் கலந்து கொண்டுள்ளனர். இந்த ஆய்வுக் கருத்தரங்கில் தேசியக்கல்வி நிறுவனத்தின் செயற்றிட்ட அதிகாரி எம்.ஜே.எம். ஸனீர், சப்ரகமுவ மாகாண கல்வித் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் அன்ஸாப் தௌஸ் மற்றும் கணனித்துறை விரிவுரையாளர் அமீர் மொஹமத் ராஜா ஆகியோர் வளவாளர்களாகப் பங்குபற்ற உள்ளனர்.

இக்கருத்தரங்கின் இணைப்பாளராக மினுவாங்கொட அல்அமான் அதிபர் எம்.டி.எம். ஆதீம் செயல்படுவதோடு 5 அமர்வுகளை உள்ளடக்கியதாக இக்கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அல்முஹ்சீன் விஞ்ஞானக் கல்லூரியின் முதல்வர் எம்.எம்.ஏ. இஸ்மாயில் ஹாஜியார் தெரிவித்தார்.

கொழும்பு கொட்டாஞ்சேனை

# சாயி சரணாலயத்தில் விசேட குரு பாதுகை பூசையும் திருவாசக முற்றோதலும் இன்று

கொழும்பு கொட்டாஞ்சேனை ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலய வளாகத்தினுள் அமைந்துள்ள ஸ்ரீ சாயி நாதனின் சரணாலயத்தில் இன்று 29ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி முதல் இலங்கை திருநாட்டில் முதன் முறையாக பக்தர்களின் பாதுகை வழிபாடு மற்றும் பகல் 1 மணிக்கு திருவாசக முற்றோதல் நிறைவு நிகழ்ச்சிகள் நடைபெற திருவருள் கூடியுள்ளது.

பிரதி பூரணை தினத்தன்றும் அடியார்கள் தனித்தனியே அமர்ந்து செய்யும் பலவிதமான பூசைகளை நடாத்த சத்குரு சீரடி சாயி வழி காட்டிக் கொண்டிருக்கிறார். கடந்த 5 வருடங்களுக்குள்ளாக, ஸ்ரீ சத்ய நாராயண பூசை, குபேர பூசை, ஸ்வர்ண பைரவர் பூசை, கடன் நிவர்த்தீஸ்வரர் சிவ பூசை, ஸ்ரீ தத்தாத்ரேயர் பூசை, வலம்புரி சங்கு பூசை மற்றும் ஸ்ரீ சுதர்சன சக்கரத்தாழ்வார் பூசை என்று புதிது புதிதான முறையில் வழிபாடுகளை அடியார்கள் நடாத்தி, பல நற்பலன்களையும் அதிசயத்தக்க



முன்னேற்றங்களையும் பெற்று வாழ்வில் இன்புற்று வருகிறார்கள்.

அவ்வகையிலே, முதன் முறையாக குருவின் பாதுகைகளுக்கு தங்கள் கைகளாலேயே அபிஷேக பூசை செய்ய திருவருள் கூடியுள்ளது. இந்நிகழ்வுக்கு, தத்தாத்ரேய அவதாரி அக்கல்கோட் மகராஜ் ஸ்ரீ சுவாமி சமர்த்தர், மகா பெரியவா, மற்றும் ஸ்ரீசத்ய சாய் பாபா– இவர்களின் விசேட பாதுகைகள் சாயி சரணாலயத்திற்கு கொண்டுவரப்பட்டு பக்தர்களுக்கு தரிசனம் தர ஏற்பாடு ஆகியுள்ளது.

செப்டெம்பர் 29ம் திகதியாகிய இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஸ்ரீவரதராஜ விநாயகர் கோவிலில் இருந்து புறப்படும் பாதுகை ஊர்வலம், 9 மணிக்கு சாயி சரணாலயத்தை அடைந்ததும் பக்தர்களின் பாதுகை



வழிபாடு துவங்கும் காலை 11 மணிக்கு பூசை முடிவடைந்ததும் சாயி பகல் ஆரத்தியும் அன்னதானமும் நடைபெறவுள்ளது.

அதே பௌர்ணமித் திருநாளன்று பகல் 1 மணி முதல் திருவாசக முற்றோதலும் நடக்கவிருக்கிறது. கடந்த 56 நாட்களாக 80 க்கும் மேற்பட்ட சாயி அடியவர்கள் திருவாசகத் தேனமுதம் என்ற நூல் மூலமாக நாள் தோரும் தமிழ் வேதமோதி நிறைவு செய்திருக்கிறார்கள். இப்பெரும்பாக்கியதிற்கு சற்குருவுக்கு நன்றி கூறும் முகமாகவே இந்த முற்றோதல் நடைபெறவுள்ளது. கொழும்பு மாணிக்கவாசர் அறப்பணி மன்றம், ஜிந்துபிட்டி திருஞான சம்பந்தர் நற்பணி மன்றம், இவர்களுடன் சாயி அடியவர்களும் இணைந்து இதில் பங்கு கொள்ள இருக்கிறார்கள். பக்தர்கள் அனைவரும் இந்த நிகழ்வுகளில் கலந்து கொண்டு எமது இலங்கைத் திருநாடு, நம் வீடு, மக்கள் குடும்பத்தினர் அனைவரும் மகிழ்வுற சற்குருவை வணங்குவோமாக.




சீனன்கோட்டை பாஸிய்யா பெரிய பள்ளிவாசலில் நடைபெற்ற மீலாதுன் நபி மௌலித் மஜ்லிஸ் தமாம் நிகழ்வில் கலீபதுல் அய்துரீஸியதுல் காதிரிமௌலவி முஸ்தகீம் (நஜாஹி) பங்குபற்றியோர் மத்தியில் உரை நிகழ்த்துவதை படங்களில் காணலாம். படம் பேருவளை விசேட நிருபர் பீ.எம் முக்தார்

# ஓய்வு பெற்ற பெருந்தோட்ட தொழிலாளர்களும் வீடமைப்புத் திட்டங்களில் உள்வாங்கப்படுவர்

### பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதிய தலைவர் பாரத் அருள்சாமி

(நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்)

பெருந்தோட்டங்களில் தொழில் செய்து ஓய்வு பெற்றிருந்தாலும் ஊழியர் சேமலாப நிதி கணக்கு கூற்றறிக்கை இருக்குமாயின் அவர்களும் வீடமைப்புத் திட்டங்களில் உள்வாங்கப்படுவார்கள் என பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதிய தலைவர் பாரத் அருள்சாமி தெரிவித்தார்.

கண்டியில் நேற்று நடைபெற்ற ஊடகச் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

எதிர்காலத்தில் பெருந்தோட்டங்களில் தொழில் செய்து ஓய்வு பெற்றவர்கள், தொழிலாளர்கள், சேவையாளர்கள் என்ற பாகுபாடின்றி அனைவரும் ஊழியர் சேமலாப நிதி கணக்கு கூற்றறிக்கை இருக்குமாயின் பெருந்தோட்டங்களில் வீடமைப்புத் திட்டங்களில் காணிகளை பெறமுடியும். இதுதொடர்பான கொள்கைத் திட்டம் வகுக்கப்பட்டு வருகின்றன. கடந்த கால அரசாங்கங்கள் எதுவுமே காணிப்பிரச்சினைக்கு உரிய தீர்வினை பெற்றுத்தரவில்லை.



பெருந்தோட்டப் பகுதியில் இதுவரை சுமார் 65 ஆயிரம் வீடுகள் காணி உறுதிப்பத்திரமின்றி காணப்படுகின்றன.

இவர்களின் விபரங்களை சேகரித்து பெருந்தோட்ட அமைச்சுக்கு அனுப்பி அவர்களின் அனுமதியுடன் காணி அமைச்சின் ஊடாக காணி உறுதிப்பத்திரங்களை மிக விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்கப் படவுள்ளது. 17,2000 குடும்பங்களுக்கு காணி பகிர்ந்தளிப்பதற்காக சுமார் 4000 ஹெக்டேயர் தேவைப்படும். இதேப் போன்று சட்ட பூர்வமாக ஒரு வருட காலப்பகுதியில் படிப்படியாக உறுதிப்பத்திரம் வழங்கப்படும். JEDB, SLSPC போன்ற கண்டி மாவட்டத்திலுள்ள பெருந்தோட்டங்களில் தொழில் செய்து ஓய்வுபெற்றவர்களுக்கு ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதியம், சேவைகால பணம் போன்றவை உரியமுறையில் கிடைக்காமையால் பல வருடங்களாக சிரமங்களை அனுபவித்து வருகின்றனர். எனவே இப்பிரச்சினைகளுக்கு எவ்வாறு தீர்வு காண்பது என்பது தொடர்பில் ஆலோசித்து வருகின்றோம். இதன்மூலம் இவ்வருடம் டிசம்பர் மாதத்துக்கு முன்னர் இப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு நாம் முயற்சி செய்துவருகின்றோம். அண்மையில் கெலாபொக்க தோட்டத்தில் இறந்த இரண்டு தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு இன்னும் ஒரு மாதக் காலப்பகுதியில் அவர்களுக்குரிய நஷ்ட ஈடு தொகை வழங்கப்படவுள்ளது.

இதுபோன்ற காரணங்களை கருத்திற் கொண்டே ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ், பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நிதியம் மற்றும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சுடன் இணைந்து ஜீவன சக்தி காப்பீட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மலைச்சாரல்

## மீலாத் விழாவை முன்னிட்டு மடவளையில் இரத்ததான நிகழ்வு



(எம்.ஏ.அமீனுல்லா, அக்குறணை குறூப் நிருபர்)

மீலாத் விழாவை முன்னிட்டு அகில இலங்கை வை.எம்.எம்.ஏ.அமைப்பின் மடவளைக் கிளை 17 ஆவது வருடமாக ஏற்பாடு செய்த இரத்ததான நிகழ்வு நேற்று மடவளை 'சன் சைன்' வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்றது.

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ.அமைப்பின் தேசிய தலைவர் இன்சான் ஹமீட், வை.எம்.எம்.ஏ.அமைப்பின் மடவளை கிளைத் தலைவர் றிசாட் லதீப் உட்பட பலர் அதிதிகளாகக் கலந்து கொண்டனர். இதன்போது எடுக்கப்பட்ட படங்களை இங்கு காணலாம்.




மாணவர்களின் மத்தியில் வாசிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கும் முகமாக உமா அறக்கட்டளை (தனி) அமைப்பின் நிறுவுனர் மு.தீபனால் கண்டி விவேகானந்தா கல்லூரிக்கு தினந்தோறும் மாணவர்களின் பயன்பாட்டுக்காக தினகரன் நாளிதழ் வழங்கி வைக்கப்பட்டது. இதன்போது எடுக்கப்பட்ட படங்களை இங்கு காணலாம்.

## கெசல்கமுவ ஓயாவை அகலப்படுத்தும் முதற்கட்ட பணிகள் ஆரம்பம்

(மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்)

கெசல்கமுவ ஓயாவை அகலப்படுத்தும் முதற்கட்ட பணிகள் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் நிதி செயலாளர் மருதபாண்டி ராமேஸ்வரன் தலைமையில் வைபவ ரீதியாக நேற்றுமுன்தினம் (27) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இ.தொ.கா வின் பொது செயலாளரும் ,நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமானின் ஆலோசனைக்கமைவாக , பொகவந்தலாவ கெசல்கமுவ ஓயாவை கிலானி பாலம் தொடக்கம் டியன்சின் பாலம் வரை அகலப்படுத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன் மொத்த மதிப்பீட்டு செலவு 14 மில்லியன் ரூபாவாகும்.



இந் நிகழ்வில் இ.தொ.காவின் பிரதி தலைவர் கணபதி கனகராஜ், முன்னாள் நோர்வூட் பிரதேச சபை தலைவர் ரவி குழந்தைவேல், உப தலைவர் கிசோக்குமார், பிரதேச சபை உறுப்பினர்கள், நோர்வூட் பிரதேச சபை செயலாளர் ,நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சின் மக்கள் தொடர்பு அதிகாரி தயாளன் குமாரசுவாமி , இ.தொ.கா வின் பிரதி தேசிய அமைப்பாளர் பழனி சசிக்குமார், மாவட்டத் தலைவர்கள், தலைவர்கள், நகர வர்த்தகர்கள்,பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

# இஸ்லாத்தின் பார்வையில் பெற்றோர்

பெற்றோரைப் பேணிப் பராமரிப்பதன் மூலம் இவ்வுலகில் நன்மைகளையும் பெற்றுக் கொள்ளலாம். மறுமையில் அல்லாஹ்வின் திருப்தியை அடைந்து கொள்ளலாம். மனிதன் வாழ தகுதியானதாக பூமியை இறைவன் படைத்தான். வெப்பத்திற்காகவும் ஒளிக்காகவும் சூரியனைப் படைத்தான். பூமி உயிர் பெற்று மனிதன் வாழத்தேவையான அனைத்தையும் பெற மழையைத் தேர்ந்தெடுத்தான். மனிதன் பூமியில் வாழ எல்லா வசதிகளையும் ஏற்பாடு செய்த இறைவன், தன் மாபெரும் கருணையினால் மனிதனுக்கு பாச உணர்வும், இரக்க உணர்வும் மிகுந்த பெற்றோர்களைக்கொடுத்தான். அதிலும் குறிப்பாக அன்பு, இரக்கம், கருணை, பாசம், தியாகம் என்று அனைத்துக் குணங்களையும் ஒருங்கே தன்னகத்தே கொண்ட தாயை அளித்து பெருமைப்படுத்தினான். தாய் தனது குழந்தையை ஏறக்குறைய பத்து மாதங்கள் வயிற்றில் சுமந்து, பல்வேறு இன்னல்களைச் சகித்துக் கொள்கிறாள். சுமப்பதைக்கூட சுகமாகவும், இன்பமாகவும், மகிழ்ச்சியாகவும் ஏற்றுக்கொள்கிறாள்.



அல்லாஹ் அல்குர்ஆனில், “நாம் மனிதனுக்கு தன் பெற்றோர் (இருவருக்கும் நலம் செய்ய வேண்டியது) பற்றி உபதேசித்தோம். அவனுடைய தாய் பலவீனத்தின் மீது பலவீனம் கொண்டவளாக (கர்ப்பத்தில்) அவனைச் சுமந்தாள்”. (31:14) என்று குறிப்பிட்டுள்ளான்.

சிரமத்தோடு குழந்தையைச் சுமக்கும் தாய், தான் விரும்பி உண்ணும் உணவைக் கொண்டு தன் குழந்தைக்கு தீங்கு ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக அந்த உணவுகளைத் தவிர்த்து விடுவாள். தான் நினைத்தபடி உறங்கினால் வயிற்றில் இருக்கும் குழந்தைக்கு பாதிப்பு ஏற்படலாம் என்று கருதி தூக்கத்திலும் குழந்தை பாதிக்காமல் பார்த்துக் கொள்வாள்.

தன் குழந்தைக்காக உணவு, உறக்கம் என அனைத்தையும் மாற்றிக்கொள்வாள். இவ்வளவு இரக்கத்தையும், அன்பையும், தியாகத்தையும் வேறு எவராலும் வழங்க முடியாத உன்னத உறவாக ‘தாய்’ இருக்கிறாள்.

“தன்னைத் தவிர வேறு யாரையும் வணங்கக் கூடாது என்றும், பெற்றோர்களிடம் நல்லமுறையில் நடந்து கொள்ள வேண்டும் என்றும் உம்முடைய இறைவன் விதித்துள்ளான்” (17:23) என்பதையும் அல் குர்ஆன் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

இந்த வசனத்தின் ஊடாக பெற்றோருக்கு கொடுக்க வேண்டிய கண்ணியம் எடுத்தியம்ப்பட்டிருக்கின்றது. அதே நேரம் தந்தையை விட தாய்க்கு சேவை செய்வதில் இஸ்லாம் அதிக கவனம் செலுத்துகிறது.

“மனிதன் தன் பெற்றோருக்கு நன்மை செய்யும்படி நாம் உபதேசித்தோம். அவனுடைய தாய் வெகு சிரமத்துடனேயே அவனைச் சுமந்து வெகு சிரமத்துடனேயே அவனைப் பெற்றெடுக்கிறாள். (கர்ப்பத்தில்) அவனைச் சுமப்பதும், அவனுக்கு பால்குடி மறக்கச் செய்வதும் (மொத்தம்) முப்பது மாதங்களாகும்” (அல் குர்ஆன் 46:15).

தன் இரத்தத்தையே பாலாக குழந்தைக்கு ஊட்டுவதாலும், தந்தையை விட குழந்தைக்கு நெருக்கமாக இருப்பதாலும் அதிக உரிமை பெற்றவளாக தாய் இருக்கிறாள். ஒரு ஸஹாபி, நபி (ஸல்) அவர்களிடம், ‘நான் சேவை செய்வதில் முதல் தகுதி யாருக்கு?’ என்று கேட்டார். அதற்கு நபிகளார், ‘உமது தாய்க்கு’ என்றார்கள். ‘அடுத்த தகுதி யாருக்கு?’ என்று அவர் கேட்க, நபி (ஸல்) அவர்கள் மீண்டும், ‘உமது தாய்க்கு’ என்றார்கள். ‘அதற்கடுத்த தகுதி யாருக்கு?’ என்று மூன்றாம் தடவையும் கேட்டார்கள். அச்சமயமும் ‘உமது தாய்’ என்றே நபிகளார் பதிலளித்தார்கள். மறுபடியும் அத்தோழர், ‘அதற்கடுத்த தகுதி யாருக்கு?’ என்று கேட்க, ‘உமது தந்தை’ என நபி (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள். (ஆதாரம்: முஸ்லிம்)

இவை இவ்வாறிருக்க, 'தாயாருக்குச் சேவை செய்வதை உமது கடமை ஆக்கிக் கொள்ளும்”, “தாயின் காலடியில் சொர்க்கம் இருக்கிறது” என்ற நபிகளாரின் வாசகங்கள் தாயின் மேன்மையை பறை சாற்றி நிற்கின்றன. ஆனால் நம்மில் பலர் வளர்ந்து பெரியவரானதும், தாயை இழிவுபடுத்தியும், அதிகாரத் தோரணையுடனும் நடந்து கொள்கிறார்கள். இன்னும் சிலர் வார்த்தைகளால் நோவினை செய்வதோடு மட்டுமல்லாமல், உறவைத் துண்டித்தும் வாழ்கிறார்கள். தன் தேவைகளை தான் சுயமாக நிறைவேற்றிக் கொள்ள சக்தியற்றிருந்த அந்தக் குழந்தைப் பருவத்தில், தன்னுடைய தாயார் தன் மீது பாசத்தோடும், இரக்கத்தோடும் நடந்து கொண்டதை மறந்து விடுகிறார்கள்.

ஒரு தடவை கடுமையான பசியுடன் இரு குழந்தைகளை அழைத்துக் கொண்டு ஒரு தாய், ஆயிஷா (ரழி) அவர்களிடம் வந்தார். அவரிடம் மூன்று பேரீச்சம் பழங்களைக் கொடுத்தார், ஆயிஷா (ரழி) அவர்கள். அதைப் பெற்றுக்கொண்ட அப்பெண்மணி, இரு குழந்தைகளுக்கும் இரண்டு பழங்களைக் கொடுத்து விட்டு ஒன்றைத் தான் சாப்பிட எடுத்தார். பசியோடு இருந்ததால் இரு குழந்தைகளும் வேகமாக பேரீச்சம் பழங்களைச் சாப்பிட்டு விட்டு, தாயின் கையில் இருந்த பழத்தை நோக்கின. உடனே அத்தாய், அந்தப் பழத்தை இரண்டாகப் பிரித்து, இரு குழந்தைகளுக்கும் வழங்கி மகிழ்ந்தாள். இச்செய்தியை ஆயிஷா (ரழி) அவர்கள், நபிகளாரிடம் கூறினார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள், ‘அந்தத் தாய் தன் இரு குழந்தைகள் மீது காட்டிய இரக்கத்தால், அல்லாஹ் அப்பெண் மீது இரக்கம் காட்டி விட்டான்’ என்றார்கள்.

‘நீ எனக்கு நன்றி செலுத்து உன் தாய், தந்தைக்கும் நன்றி செலுத்து’ என்கிறது அல் குர்ஆன். குழந்தைகள் மீது தாய் செலுத்தும் பாசம் அளவில்லாதது; நிகரற்றது. “அல்லாஹ் எல்லாப் பாவங்களையும் மன்னித்து விடுகிறான். பெற்றோருக்கு மாறு செய்வதை மன்னிப்பதில்லை. அதற்கான தண்டனையை உலகிலேயே தந்து விடுவான்” என்று நபிகளார் கூறினார்கள்.

(ஆதாரம்: மிஷ்காத்)

“பெற்றோரில் ஒருவரோ, இருவருமோ முதுமை அடைந்து விட்ட நிலையில் உம்மிடம் இருந்தால் அவர்களை ‘சீ’ என்றுகூட கூறாதீர். அவர்களைக் கடிந்து பேசாதீர். மேலும் அவர்களிடம் கண்ணியமாகப் பேசுவீராக” என்று திருமறையில் (17: 23) இறைவன் கூறுகின்றான். பெற்றோரோடு நல்லுணர்வைப் பேணும் மனிதனுக்கு, ஏற்றுக் கொள்ளப்பட்ட ஹஜ்ஜின் நன்மை எழுதப்படுகிறது. பெற்றோரைப் பேணுவதன் மூலம் இவ்வுலகில் உறவுகளையும், நன்மைகளையும் பெற்றுக்கொள்ளலாம். மறுமையில் அல்லாஹ்வின் திருப்தியைப் பெற்றுக் கொள்ளலாம்.

அப்துல்லாஹ்...

# அல்லாஹ்வுக்கு நெருக்கமானவர்கள்

ஒரு தடவை இறைத் தூதர் (ஸல்) அவர்கள், 'நான் இவ்வையகத்திற்கு அனுப்பப்பட்டதின் நோக்கம் நல்லொழுக்கங்களைப் பரிபூரணமாக்குவதற்கு ஆகும் என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

(ஆதாரம்: அல்முவத்தா)

மேலும் ஒரு தடவை, அல்லாஹ்வின் அடியார்களில் அல்லாஹ்வுக்கு மிகவும் நெருக்கமானவர்கள் யார் எனச் சிலர் நபிகளாரிடம் வினவ, நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்கள். 'சிறந்த ஒழுக்கமுடையவர்கள்' என அன்னார் பதிலளித்தார்கள். (ஆதாரம்: இப்னு ஹிப்பான்)

மற்றொரு நபி மொழியில், மனிதர்களுக்குத் தரப்பட்ட மிகவும் சிறந்த பொருள் எது எனச் சிலர் கேட்ட போது, பெருமானார் (ஸல்) அவர்கள் யாரிடம் சிறந்த ஒழுக்கப் பண்பாடுகள் இருக்கின்றதோ அதுவேயாகும்' எனப் பதில் சொன்னார்கள். (ஆதாரம்: திர்மிதி)

எந்த முஸ்லிமின் நம்பிக்கை முழுமையானது என நபி (ஸல்) அவர்களிடம் கேட்ட போது, யாரிடம் ஒழுக்கப் பண்பாடுகள் இருக்கின்றதோ அவரே என அன்னார் பதிலளித்தார்கள். (ஆதாரம்: தப்ரானி)

அல்லாஹ்வை விசுவாசம் கொண்டவர்கள் அவனை ஈமான் கொள்ள வேண்டும். ஈமான் கொள்ளவில்லை என்றால் நம்பிக்கை வளராது, ஈமான் உறுதியானால் நல்லொழுக்கம் வளரும் என பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இதேவேளை, நபி (ஸல்) அவர்கள், நல்லொழுக்கம் இல்லை என்றால் நம்பிக்கை இல்லை என்றே பொருள்படும். அல்லாஹ் மீதும் மறுமைநாள் மீதும் நம்பிக்கை கொண்ட மனிதன் நல்லதையே பேசட்டும். இல்லையேல் மௌனமாக இருந்திடட்டும் என்றும் கூறியுள்ளார்கள்.

(ஆதாரம்: புஹாரி)

இந்நபிமொழிகளின் ஊடாக ஒவ்வொரு மனிதனுக்கும் நல்லொழுக்கம் இன்றியமையாததாகும். அதனையே இந்த நபிமொழிகள் எடுத்தியம்புகின்றன. அதனால் நபிகளாரின் வழிகாட்டல்கள் மற்றும் போதனைகள் படி வாழ்வொழுங்கை அமைத்துக் கொள்வது ஒவ்வொரு இறைவிசுவாசியினதும் பொறுப்பாகும்.

ஆன போதிலும் சிலர் தாங்கள் சிறந்தவர்கள் என்றும் ஒழுக்கப் பண்பாடுகள் நிறைந்தவர்கள் என்றும் கூறிக்கொள்கிறார்கள். ஆனால் அவர்களிடம் அவர்களது கூற்றுக்கு மாற்றமான விடயங்களே நிறையக் காணப்படுகின்றன. இவ்விதம் நடந்து கொள்பவர்களைப் பற்றி நபி (ஸல்) அவர்கள் மிகவும் வன்மையாகக் கண்டித்துள்ளார்கள்.

எனவே முஸ்லிம்களாகிய நாங்கள் நபி (ஸல்) அவர்கள் கடைப்பிடித்து வாழ்ந்த ஒழுக்கப் பண்பாடுகளைக் பேணிய மனிதனாகவும், மனிதத் தன்மை உடையவனாகவும் வாழ்வதோடு மற்றவர்களையும் நேசித்து அனைத்து மக்களுக்கும் முன்மாதிரியாய்த் திகழ்ந்திட வேண்டும். அதுவே இன்றியமையாததாகும்.

ஏ.ஸீ.எம்.ஹனீபா...
மஸ்ஸல பேருவளை

# அல்–குர்ஆனை ஓதுவோம்

உலகில் பிறக்கும் ஒவ்வொருவரதும் இம்மை மறுமை வாழ்வின் சுபீட்சத்தையும் விமோசனத்தையும் இலக்காகக் கொண்டது தான் அல் குர்ஆன். இதற்கு பல பெயர்கள் உள்ளது. 'அவற்றில் ‘திருக்குர்ஆனின் வசந்த மாதம்’ (‘ரபீஉல் குர்ஆன்) என்ற தத்துவப் பெயரும் ஒன்றாகும்.

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், ‘உங்களில் சிறந்தவர் திருக்குர்ஆனை தானும் கற்று, அதனை பிறருக்கும் கற்றுக் கொடுப்பவரே ஆவார்' என்று கூறியுள்ளார்கள். (ஆதாரம்: புஹாரி)

இந்த நபிமொழியின் ஊடாக அல் குர்ஆனைக் கற்பதன் முக்கியத்துவம் எடுத்தியம்பப்பட்டுள்ளது. அதேநேரம் அல் குர்ஆனைக் கற்பவரினதும் அதனைக் கற்றுக்கொடுப்பவரினதும் சிறப்பு தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. அதாவது அல் குர்ஆனை தானும் கற்று பிறக்கும் கற்றுக் கொடுப்பவரே இறைவிசுவாசிகளில் சிறந்தவராக விளங்குகிறார். இந்நபிமொழி அல்லாஹ்வின் அருள்மறையின் சிறப்பையும் மகத்துவத்தையும் தெளிவாக தெளிவுபடுத்தி நிற்கிறது இந்நபிமொழி.



அப்படியிருந்தும் அல் குரஆனைக் கற்றபதன் அவசியத்தையும் அதனைக் கற்றுக்கொடுப்பதன் முக்கியத்தையும் பெரும்பாலானவர்கள் புரிந்து கொள்ளாதவர்களாக இருக்கின்றனர். இதனால்தான் அல் குர்ஆன் வெறுமனே ஓதப்படக்கூடியதாக இருக்கிறது. அதன் செய்தியையும் அது சொல்ல வருகின்ற அறிவுரை, கட்டளைகளையும் புரிந்து கொள்ளாத நிலையில் ஓதக்கூடியதாக உள்ளது.

ஆனால் அல் குர்ஆனும், நபிமொழிகளும் அல் குர்ஆன் தொடர்பில் குறிப்பிட்டுள்ள விடயங்களை எடுத்துப் பார்த்தால் அது பொருள் அறியாது, கருத்தறியாது வெறுமனே ஓதப்படக்கூடிய ஒன்றல்ல என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

அதனால் அல்லாஹ்வை ஆசானாகக் கொண்டுள்ள இக்குர்ஆனை அதன் எதிர்பார்ப்புக்கு அமைய ஓதுவதும் அதனை அணுகுவதும் இன்றியமையாததாகும்.

அதேநேரம்‘அல் குர்ஆனை ஓதுகின்ற நயவஞ்சகனின் நிலை, துளசிச்செடியின் நிலைக்கு ஒத்திருக்கிறது. அதன் வாசனை நன்று. அதன் சுவையோ கசப்பானது. திருக்குர்ஆனை ஓதாத நயவஞ்சகனின் நிலை, குமட்டிக்காய் போன்றதாகும். அதன் சுவையும் கசப்பானது. அதன் வாடையும் வெறுப்பானது. அல் குர்ஆனை ஓதாமல் அதன்படி செயலாற்றி மட்டும் வருபவர், பேரீச்சம்பழம் போன்றவர் ஆவார். அதன் சுவை நன்று. அதற்கு மணமில்லை. குர்ஆனை ஓதி, அதன்படி செயல்படக்கூடிய ஒரு இறைநம்பிக்கையாளர் எலுமிச்சை போன்றவர். அதன் சுவையும் நன்று வாசனையும் நன்று’என்றும் நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். (ஆதாரம்: புஹாரி)

மேலும், 'எவர் ஒருவர் இரவில் திருக்குர்ஆனின் பத்து வசனங்களை ஓதுகிறாரோ அவர் பொடு போக்கானவராக எழுதப்பட மாட்டார்; ஐம்பது வசனங்களை ஓதுபவர் இறைதியானிப்பவர்களில் ஒருவராக எழுதப்படுகிறார். 100 வசனங்களை ஓதுபவர் இறைவழிபாடு செய்தவர்களில் ஒருவராக எழுதப்படுகிறார். 200 வசனங்களை ஓதுபவர் இறையச்சம் உள்ளவர்களில் ஒருவராக எழுதப்படுகிறார். 300 வசனங்களை ஓதுபவர் வெற்றியாளராகவும், 500 வசனங்களை ஓதுபவர் பெரும் முயற்சியாளராகவும், 1000 வசனங்களை ஓதுபவர் பெரும் தங்கக்குவியலை பெற்ற பாக்கியசாலியாகவும் எழுதப்படுகிறார்' எனவும் நபி (ஸல்) கூறினார்கள்.

(ஆதாரம்: தர்கீப்)

இந்த நபிமொழிகளின்படி அல் குர்ஆனை ஓதத் தெரிந்தவர்களும், அதனைப் பிறருக்கு கற்றுக்கொடுப்பவர்களும் அடைந்து கொள்ளும் நன்மைகளையும் பிரதிபலன்களையும் சொல்லித்தான் தெரிய வேண்டியதில்லை.

அதேநேரம் அல் குர்ஆன் ஓதத் தெரியாதவர் இத்தகைய நற்பாக்கியங்களை தம்மால் அடைய முடியவில்லையே என ஏங்கத் தேவையில்லை. அதாவது அல் குர்ஆன் ஓதப்படுவதை செவிமடுத்தாலும் அதற்கும் நன்மையும், அந்தஸ்தும் உண்டு. ‘திருக்குர்ஆனிலிருந்து ஒரு எழுத்தை தான் ஓதாமல், பிறர் ஓதுவதை செவியுறுபவருக்கு ஒரு நன்மை எழுதப்பட்டு, ஒரு பாவம் அழிக்கப்பட்டு, ஒரு அந்தஸ்து உயர்த்தப்படுகிறது' என நபி (ஸல்) கூறினார்கள்’. (நபிமொழி).

‘உங்களின் இல்லங்களை திருக்குர்ஆனை ஓதுவதைக் கொண்டு ஒளிமயமாக ஆக்குங்கள்’ என நபி (ஸல்) கூறினார்கள்’.

(நபிமொழி)

“நிச்சயமாக இக்குர்ஆன் முற்றிலும் நேராக இருக்கும் நல்வழியைக் காட்டுகிறது. அன்றியும் நற்கருமங்கள் செய்து வரும் முஃமின்களுக்கு, நிச்சயமாக மிகப்பெரும் நற்கூலியுண்டு என்றும் நன்மாராயங் கூறுகிறது”. (அல் குர்ஆன் 17:9)

அல் குர்ஆனை ஓதுவதோடு நிறுத்தி விடாமல் அதன்படி நடந்தால்தான் அனைத்து பாக்கியங்களும் கிடைக்கும். “நிச்சயமாக இது (குர்ஆன் சத்தியத்தையும், அசத்தியத்தையும்) பிரித்து அறிவிக்கக்கூடிய வாக்காகும்” (அல் குர்ஆன் 86:13).

“நிச்சயமாக அது (குர்ஆன்) பயபக்தியுடையவர்களுக்கு நல்லுபதேசமாகும்”

(அல் குர்ஆன் 69:48).

ஆகவே அல் குர்ஆனை ஓதுவோம், ஓத முயற்சிப்போம், அதனை விளங்குவோம். இறையச்சத்தை வளர்த்துக்கொள்வோம்.

அபூமுஷ்ரா...

# உபசரிப்புக்கான உன்னத வழிகாட்டல்



இஸ்லாம் கூறும் விருந்தோம்பல் கருத்துகள், எல்லோராலும் விரும்பக் கூடியவை என்பது மட்டுமல்ல விழுமிய கருத்துகளாகும். அல்லாஹ் மீதும், மறுமை நாளின் மீதும் நம்பிக்கை கொண்டவர்கள் தம் விருந்தினரை நன்றாக உபசரித்துக் கொள்ளட்டும்’ என்பது நபிமொழியாகும். விருந்தினரை உபசரித்தல் என்பது பல பரந்த அர்த்தங்களைக் கொண்டது. விருந்தினர்களுக்கு உணவளிப்பது மட்டுமல்ல, அவர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுப்பதும் உபசரிப்பில் அடங்கும். உங்கள் வீட்டுக்கு விருந்தினர் வந்தால் முதலில் அவருக்கு ‘ஸலாம்’ கூறி வரவேற்று அவருக்காக இறைவனிடம் பிரார்த்தித்து, நலம் விசாரித்துக் கொள்ளுங்கள்.

இதை திருக்குர்ஆன் இவ்வாறு அறிவுறுத்துகிறது.

“(நபியே!) இப்ராஹீமிடம் வந்த கண்ணியத்திற்குரிய விருந்தாளிகளின் செய்தி உமக்குக் கிடைத்ததா? அவர்கள் அவரிடம் வந்தபோது, ‘உம்மீது சாந்தி நிலவட்டும்’ என்று அவர்கள் கூறினார்கள். அவர் கூறினார் ‘உங்கள் மீதும் சாந்தி நிலவுக” (51:24). விருந்தினர்கள் நம் வீட்டுக்கு வரும்போது, மகிழ்ச்சியுடனும், முகமலர்ச்சியுடனும் வரவேற்க வேண்டும். விருந்தினர்கள் வீட்டுக்கு வந்தவுடன் நபி இப்ராஹீம், அவர்களுக்குத் தேவையான உணவுக்கு ஏற்பாடு செய்தார்கள். ஒரு காளைக் கன்றைப் பொரித்து விருந்தினர்களுக்கு வைத்தார்கள்.

இது குறித்து திருமறை “... அறிமுகம் இல்லாத ஆட்களாக இருக்கிறார்களே (என்று எண்ணினார்) பின்னர், அவர் சந்தடியில்லாமல் தம் வீட்டாரிடம் சென்றார். (பொரிக்கப்பட்ட) கொழுத்த காளைக்கன்றைக் கொண்டு வந்து அதை விருந்தினர் முன் வைத்தார்”. (51:25) விருந்தினர்களுக்குத் தெரியாமல் தன் இல்லத்தாரிடம் விருந்து உபசரிப்பை மறைமுகமாக இப்ராஹீம் நபி மேற்கொள்ளச் சொன்னார் என்பது இந்த வசனத்தின் வரிகள் மூலம் விளங்குகிறது.

நாம் என்ன செய்யப்போகிறோம் என்பதை அறிந்தால், விருந்தினர்கள் மறுத்து விடக் கூடும் என்பதால் இந்த இரகசிய ஏற்பாடு. விருந்தினர்களுக்குப் பிடித்தமான உணவு வகைகளை தயாரித்துக் கொடுப்பதில் இருந்து தங்குவதற்கு ஏற்பாடு செய்வது வரை தனிக் கவனம் செலுத்த வேண்டும். விருந்தினர்களின் வருகையை அறிந்து அவர்களுக்குத் தேவையான உணவு வகைகளை முன்கூட்டியே தயார் செய்து விட வேண்டும். சமையல் வேலைகள் அனைத்தும் முடிந்தால்தான் விருந்தினர்களுடன் அதிக நேரம் உரையாடி மகிழ முடியும்.

விருந்தினர்களுக்கு உணவை நாமே எடுத்து வைக்க வேண்டும். வேலையாட்களைக் கொண்டு பரிமாறக் கூடாது. யாராவது விருந்தினர்கள் வீட்டுக்கு வந்தால், அவர்களை நபி (ஸல்) அவர்களே நேரில் உபசரிப்பது வழக்கமாகும். விருந்தினர்கள் உணவருந்தும்போது தாமும் அவர்களோடு அமர்ந்து கொண்டு, “இன்னும் கொஞ்சம் உண்ணுங்கள். இன்னும் கொஞ்சம் உண்ணுங்கள்” என்று நபிகளார் கூறிக்கொண்டே இருப்பார்கள். விருந்தினர்கள் திருப்தியாக சாப்பிட்டு முடித்து விட்டு எப்போது ‘போதும்’ என்று மறுக்கிறார்களோ அப்போது நபிகளாரும் வற்புறுத்துவதை விட்டு விடுவார்கள். விருந்தினர்களுக்கு குறிப்பிட்ட நேரத்தில் உணவைப் பரிமாற வேண்டும். அவர்கள் அருகே இருந்து உணவருந்தும் நாம் அவசர அவசரமாக சாப்பிட்டு முடித்து விடக் கூடாது. அப்படி நாம் விரைவாகச் சாப்பிட்டு முடித்தால் விருந்தினர்கள் அரை குறையாக சாப்பிட்டு எழும் நிலை ஏற்படும். இதனால் நாம் மெதுவாகச் சாப்பிட வேண்டும். அல்லது அவர்கள் சாப்பிட்டு முடிக்கும் வரை காத்திருக்க வேண்டும். அவர்கள் கை அலம்பிய பிறகே நாம் கை அலம்ப வேண்டும். வீட்டுக்கு வரும் விருந்தினர்களை நாம் கண்ணியப்படுத்த வேண்டும். நீங்கள் அவர்களைக் கண்ணியப்படுத்துவது உண்மையில் நீங்கள் உங்களைக் கண்ணியப் படுத்திக் கொள்வதாகும். அவர்களுக்கு ஏதாவது கண்ணியக் குறைவு ஏற்பட்டால் அதைக் களைய துணிவுடன் களம் இறங்க வேண்டும்.

இறைத்தூதர் லூத் (அலை) அவர்களிடம் விருந்தினர்கள் வந்தபோது அவர்களுடைய சமூகத்தார் அவர்களை இழிவுபடுத்த முயன்றனர். அப்போது லூத் சிறிதளவும் விட்டுக் கொடுக்கவில்லை. விருந்தினர்களை இழிவுபடுத்துவது தன்னை இழிவுபடுத்துவதாகும் என்று கருதினார்கள். லூத் கூறினார், “(சகோதரர்களே!) இவர்கள் என்னுடைய விருந்தாளிகள். என்னை அவமானப்படுத்தி விடாதீர்கள். அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். என்னை இழிவுபடுத்தி விடாதீர்கள்”. (அல் குர்ஆன்15:68)

விருந்தினர்களை வீட்டிற்கு வெளியே வந்து வரவேற்று அழைத்துச் செல்வதும், அவர்கள் திரும்பிச் செல்லும்போது வாசல் வரை சென்று வழியனுப்பி வைப்பதும் சிறந்தது. உங்கள் வீட்டிற்கு விருந்தினர்கள் வருகிறார்கள் என்றால், அவர்கள் இறைவன் விதித்த விதிப்படி உங்கள் வீட்டுப்படியை மிதிக்கிறார்கள் என்று தான் பொருள். ஒவ்வொரு மனிதருக்கும் அவரது உணவு அன்றைய தினம் எங்கே இருக்கிறது என்பதை இறைவன் ஏற்கனவே முடிவு செய்து வைத்திருக்கின்றான்.

‘ஒவ்வொரு அரிசியிலும் உனது பெயர் எழுதப்பட்டிருக்கும்’ என்பது அழகிய பழமொழி. இதில் அறிவார்ந்த கருத்துகள் அடங்கியுள்ளன. உலகில் பிறந்த அனைத்து ஜீவராசிகளுக்கும் இறைவனே உணவளிக்கின்றான். “எந்த உயிரினமும் அதற்கான உணவு அல்லாஹ்வின் மீது (பொறுப்பாக) இருந்ததே தவிர பூமியில் (வாழ்வது) இல்லை. இன்னும் அவை தங்கும் இடத்தையும், அவை அடங்கும் இடத்தையும் அவன் அறிவான்” (11:6).

“வறுமைக்கு அஞ்சி உங்கள் குழந்தைகளைக் கொல்லாதீர்கள். நாமே உங்களுக்கும் உணவு அளிக்கிறோம். அவர்களுக்கும் அளிப்போம்” (6:151). மேற்கண்டவை திருமறையின் இறை வசனங்கள்.

ஆகவே இஸ்லாமிய போதனைகளுக்கு அமைய விருந்தோம்பலை மேற்கொள்வோம். அதன் ஊடாக இறையருளையும் கருணையையும் பெற்றுக்கொள்வோம்.

பிந்த் இஸ்மாயீல்...

Wherever you are..,
The best way to Fulfil your Future Dreams...
Gather with,




Green Light for Online Transfer BOC Lake House Branch Acc. No. 000000377
E-mail - classified@lakehouse.lk
077 7 270 067
Gayani - 077 7 278 948/ 011 2 429 347
Piyumi - 011 2 429 383 | 011 2 429 342/ 343


# கேள்வி அழைப்பு

## பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை கேகாலை

1. கேகாலை பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனயில் கீழ்க்காணும் பொருட்களை பெற்றுக் கொள்வதற்காக தகைமையுள்ள வேள்விதாரர்களிடமிருந்து 2023.10.24 மு.ப 10.30 வரை பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

   **01. டயர் மற்றும் டியூப் வழங்குதல்.**

   **02. மடிக்கக்கூடிய கட்டில்களை வழங்குதல்.**

2. இற்காக ஆர்வம் காட்டுகின்ற தகைமை கொண்ட கேள்விதார்களுக்கு கேகாலை பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையில் கணக்குப் பிரிவிலிருந்து 2023.10.02 முதல் 2023.10.23 வரையான வார நாட்களில் மு.ப 9.00 முதல் பி.ப 2.30 வரையான காலத்திற்குள் கேள்வி ஆவணங்களைப் பரீட்சிப்பதற்கு மற்றும் கொள்வனவு செய்வதற்கு முடியும்.

3. பொருட்கள் பற்றிய விபரங்கள் மற்றும் கேள்வி ஆவணங்களை **www.rdhskegalle.lk** இணைய தளத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர்,**
**கேகாளை**

**தொ.பே இல: 035-2222549 / 035-2222578 / 035 2222571**
**பெக்ஸ் : 035-2221253**

www.adz.lk it's what you want

1990 ஆம் அண்டின் வங்கிகள் (சிறப்பு ஏற்பாடுகள் ) சட்டம் எண் 4 மூலம் கடன்களை திரும்பப் பெறுதல் பிரிவு 9 இன் கீழ் விற்பனை அறிவிப்பு

## MCB BANK LIMITED (காலி கிளை)

### மிகவும் பெருமதியான உடைமைகள் மற்றும் மரங்கள், பயிர் நிலங்கள் எல்லாம் அங்கு இருக்கும் அனைத்தும்

**முதலாம் அட்டவை கருதப்படுவது**

ஏல்லாம் பிரக்கப்பட்டு வரையறுக்கப்பட்ட பகுதி லொட் (1) என்று குறிப்பிடப்பட்டுள்ள, படத்தின் இலக்கம் 76ஏ ஏ.பீ.ஆர்.டீ. வாஸ் குணவர்தன அரச அங்கீகாரம் பெற்ற நில அளவையார் என்பவரால் 14ம் திகதி பெப்ரவரி 1966 மாதம் தயார் செய்யப்பட்ட. கொஹொம்பஹ கஹவத்த என்று அழைக்கப்படும் நிலம் மஹகொட கிராம உத்தியோகத்தர் பகுதி இலக்கம் 91ஈ அமைந்துள்ள கரந்தெனிய பிரதேச செயலாளர் பகுதி. பிரதேச சபை வெள்ளபடபத்து பகுதி காலி மாவட்டத்தில் அமைந்துள்ள தென் மாகாணம் அதாவது பொன்ட (1) எல்லைப்படுத்தப்பட்டுள்ளதாவது (போர்டர் ) ஆக அதன் எல்லையாக அமைந்துள்ளதாவது:-

வடக்கின் எல்லையாக அமைவது :- பீ எச் சதோரிஸன் என்பவருக்கு சொந்தமான காணி
கிழக்கின் எல்லையாக அமைவது :- எஸ் எச் ஸரதோரிஸ் என்பவருக்கு சொந்தமான காணி, பாதைக்கான பகுதி லொட் 2 என்று குறிக்கப்பட்டுள்ளது அதே காணியில்
தெற்கின் எல்லையாக அமைவது :- லொட் 2 அதே நிலம் மற்றும் அதே நிலம் பாதைக்கான நுழைவாக குறிக்கப்பட்டுள்ளது.
மேற்கின் எல்லையாக அமைவது :- துசாரா ஹகுரு ஸதிஸ்தா

அது உள்ளடக்கப்படுவது :- ஒரு ரூட் 4 டெஸிமல் எட்டு (8) பேர்ச் அளவு கொண்டது.(A0-R1-P 4.8) அங்கு எல்பிட்டிய மாவட்ட காணிப் பதிவுத் திணைக்களத்தில் தொகுதி போலியோ J 117/72 பதிவு செய்யப்பட்ட மரங்கள், விவசாயங்கள், தோட்டங்கள், அங்கே எல்லாம் உள்ளடங்கும்.

**இரண்டாம் அட்டவை கருதப்படுவது**

ஏல்லாம் பிரக்கப்பட்டு வரையறுக்கப்பட்ட பகுதி லொட் பீ என்று குறிப்பிடப்பட்டுள்ள படம் ஏ.எம் விமலசூரிய அரச அங்கீகாரம் பெற்ற நில அளவையார் என்பவரால் 03ம் திகதி மார்ச் மாதம் 1915 தயார் செய்யப்பட்ட. தெல்கஹவத்த என்று அழைக்கப்படும் நிலம் மஹகொட கிராம உத்தியோகத்தர் பகுதி இலக்கம் 91ஈ அமைந்துள்ள கரந்தெனிய பிரதேச செயலாளர் பகுதி. பிரதேச சபை வெள்ளபடபத்து பகுதி காலி மாவட்டத்தில் அமைந்துள்ள தென் மாகாணம் அதாவது பொன்ட பீ எல்லைப்படுத்தப்பட்டுள்ளதாவது (போர்டர்) ஆக அதன் எல்லையாக அமைந்துள்ளதாவது:-

வடக்கின் எல்லையாக அமைவது :- சுது ஹகுரு ஸாதிரிஸ் என்பவருக்கு சொந்தமான காணி
கிழக்கின் எல்லையாக அமைவது :- லொட் ஏ அதே காணியில்
தெற்கின் எல்லையாக அமைவது :- அய் டீ அந்தோரிஸினால் ஆட்கொள்ளப்பட்ட காணி
மேற்கின் எல்லையாக அமைவது :- லொட் ஸீ அதே காணி

அது உள்ளடக்கப்படுவது :- 38 முப்பெத்தெட்டு பேர்ச் அளவு கொண்டது. (A0-R0-P 38) அங்கு எல்பிட்டிய மாவட்ட காணிப் பதிவுத் திணைக்களத்தில் தொகுதி போலியோ J 117/71 பதிவு செய்யப்பட்ட மரங்கள், விவசாயங்கள், தோட்டங்கள், அங்கே எல்லாம் உள்ளடங்கும்.

**மூன்றாம் அட்டவை கருதப்படுவது**

1. ஏல்லாம் பிரக்கப்பட்டு வரையறுக்கப்பட்ட பகுதி லொட் C1 என்று குறிப்பிடப்பட்டுள்ள பிலேன் இலக்கம் 1586 மதுவகே தெஜாஸிரி (Maduwage Thejasiri) அரச அங்கீகாரம் பெற்ற நில அளவையார் என்பவரால் 22ம் திகதி மே மாதம் 2013 தயார் செய்யப்பட்ட. தெல்கஹவத்த என்று அழைக்கப்படும் நிலம் மஹகொட கிராம உத்தியோகத்தர் பகுதி இலக்கம் 91ஈ அமைந்துள்ள கரந்தெனிய பிரதேச செயலாளர் பகுதி. பிரதேச சபை வெள்ளபடபத்து பகுதி காலி மாவட்டத்தில் அமைந்துள்ள தென் மாகாணம் அதாவது லொட் C1 எல்லைப்படுத்தப்பட்டுள்ளதாவது (போர்டர்) ஆக அதன் எல்லையாக அமைந்துள்ளதாவது:-

வடக்கின் எல்லையாக அமைவது :- lot B அதே காணி
கிழக்கின் எல்லையாக அமைவது :- பிரதேச சபையின் பாதை
தெற்கின் எல்லையாக அமைவது :- C2 அதே காணியின்
மேற்கின் எல்லையாக அமைவது :- எஸ் எச் ஸேதிரிஸ் அவர்களின் காணி (ஆரம்பத்தில் பயிர் நிலமாகக் காணப்பட்டது)

அது உள்ளடக்கப்படுவது :-12.25 பேர்ச் அளவு கொண்டது. (A0-R0-P 12.25) அங்கு எல்பிட்டிய மாவட்ட காணிப் பதிவுத் திணைக்களத்தில் தொகுதி போலியோ து 117/69 பதிவு செய்யப்பட்ட மரங்கள், விவசாயங்கள், தோட்டங்கள், அங்கே எல்லாம் உள்ளடங்கும்.

2. ஏல்லாம் பிரக்கப்பட்டு வரையறுக்கப்பட்ட பகுதி லொட் C3 என்று குறிப்பிடப்பட்டுள்ள பிலேன் இலக்கம் 1586 மதுவகே தெஜாஸிரி (Maduwage Thejasiri) அரச அங்கீகாரம் பெற்ற நில அளவையார் என்பவரால் 22ம் திகதி மே மாதம் 2013 தயார் செய்யப்பட்ட தெல்கஹவத்த என்று அழைக்கப்படும் நிலம் மஹகொட கிராம உத்தியோகத்தர் பகுதி இலக்கம் 91ஈ அமைந்துள்ள கரந்தெனிய பிரதேச செயலாளர் பகுதி. பிரதேச சபை வெள்ளபடபத்து பகுதி காலி மாவட்டத்தில் அமைந்துள்ள தென் மாகாணம் அதாவது லொட் C1 எல்லைப்படுத்தப்பட்டுள்ளதாவது (போர்டர்) ஆக அதன் எல்லையாக அமைந்துள்ளதாவது:-

வடக்கின் எல்லையாக அமைவது :- lot B அதே காணி
கிழக்கின் எல்லையாக அமைவது :- லொட் 6 ஸீ 10 அடி பாதைக்கான நுழைவு பிரதேச சபையின் பாதை
தெற்கின் எல்லையாக அமைவது :- லொட் ஸீ 5 மற்றும் லொட் ஸீ 6 அதே நிலத்திற்கான பாதை
மேற்கின் எல்லையாக அமைவது :- பிரதேச சபைக்கான பாதை

அது உள்ளடக்கப்படுவது :- 4.4 பேர்ச் அளவு கொண்டது. (A0-R0-P 4.4) அங்கு எல்பிட்டிய மாவட்ட காணிப் பதிவுத் திணைக்களத்தில் தொகுதி போலியோ J 117/70 பதிவு செய்யப்பட்ட மரங்கள், விவசாயங்கள், தோட்டங்கள், அங்கே எல்லாம் உள்ளடங்கும்.

வியாபாரம் புரிகின்ற முனிகொட ஹகுரு துஷான்த மதுரா குமாரவுக்கு வழங்கப்பட்டுள்ள வசதிகள் MCB Bank பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. இவர் தில்சாரா ஏற்றுமதி ஸ்தாபனத்தின் ஒரே உரிமையாளராக இருக்கின்றார். இலக்கம் 552ஏ தர்சானா மாகண்தன கரன்தெனிய, இவர் அடமானத்திற்கு பொருப்பானவர் மற்றும் பொன்ட் இலக்கம் 464 தொடர்பாக பொறுப்பானவர் அதன் திகதி 17 ஆகஸ்ட் மாதம் 2017 இதனை வழக்கரிஞர் எம் இஸட் ஹூஸைய்ன் மியா உறுதிப்படுத்தியுள்ளார்.

ஏல்பிட்டிய மாவட்ட நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் வழக்கு இலக்கம் 548/SPL (இறந்த) முனிகொட ஹகுரு துஷாந்த மதுரா குமாரா என்பவரின் விடயமாக காமினி குருஸிங்க என்பவர் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ளார் சட்டக் கோவை 7 வங்கி மூலம் கடன்களை மீளப் பெறுவதற்கான (சிறப்பு ஏற்பாடு) சட்டக் கோவை இலக்கம் 4 இன் 1990 (திருத்தப்பட்டது)

**வரையறுக்கப்பட்ட MCB Bank எனக்கு வழங்கப்பட்ட முழு அதிகாரத்தின் படி நான் இந்த சொத்தை பொது ஏலம் மூலம் 16ம் ஆம் திகதி திங்கள் ஒக்டோபர மாதம் 2023 காலை 10.00 மணிக்கு விற்பனை செய்யவுள்னேன்.**

**சொத்துக்கான அநுகுமுறை:**

தென்மாகாண அதிவேக பாதையின் உள்நுழைவு மத்தியம் குருந்தாகஹஹெட்டேகம (அம்பலங்கொட) குருந்தககஹ ஹேட்கம ஹல்பதொட்ட பாதையிலிருந்து சுமார் 450 மீடர் சிரீ புத்தகயா விகாரை சந்தியை நோக்கி இந்த இடத்திலிருந்து இடதுக்கு அம்பலங்கொட எல்பிட்டிய பாதையை நோக்கி திரும்பவும்.

இந்த பாதையூடாக அன்னலவாக 8.9 கிலோ மீட்டர் இதை அடைந்ததின் பின்பு சிமெந்து கற்கள் போடப்பட்ட இடத்தை அடைய முடியும். அதன் பிறகு பொதுப் பாதை அது கொஸ்வத்த பாதை என்று கூறப்படும் அல்லது பஸல் மாவத்த என்றும் கூறப்படும். பிறகு வழது புறம் பஸல் மாவத்தைக்குத் திரும்பவும் மீண்டும் அன்னளவாக 200 அல்லது 250 மீட்டர் முன்னே செல்லும் போது இந்த இடத்தில் இரண்டு மறுங்கிலும் இந்த உடைமை காணப்படும். GPD ன் உதவியைப் பெற்றுக் கொள்ள அதன் திசை காட்டி விபரம் 6.264488, 80.067564)

இது சம்பந்தமாக மேதிக விபரத்திற்கு அரச கெஸட் 18ம் திகதி ஆகஸ்ட் மாதம் 2023 பார்க்கவும்அத்துடன் 21ம் திகதி ஆகஸ்ட் 2023 The Island, திவயின, தினகரன் போன்ற பத்திரைககளை பார்க்கவும்.

**கட்டணம் செலுத்தும் முறை: -**

வெற்றிபெற்ற கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் தொகைகளை பணமாக செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்)
(2) 1% வீதம் விற்பனை விலையிலிருந்து உள்ளூர் நிர்வாகத்திற்கு செலுத்த வேண்டும்.
(3) ஏல விற்பனையாளரின் தரகு 2 ½ % விற்கின்ற விலையில் இருந்து மேலதிகமாக
(4) வரிகள் அலுவலக உத்தியோகத்தர் மற்றும் தபால் கட்டணம் ரூபா 1000
(5) விற்பனைக்கான ஏதும் மேலதிக செலவுகள் இருப்பின் அதற்கான கட்டணம்
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான கட்டணம் ரூபா. 2000/-.

மிகுதி வாங்கிய விலையில் 90% ஏதும் வரிகள். கட்டனங்கள், மற்றும் அரசால் பனிக்கின்ற ஏதம் விஷேச வரிகள் வாங்கிய நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்த வேண்டிய கட்டனங்கள் ஏதும் இருப்பின்.

இந்த சொத்து சம்பந்தமாகவும் காணி உரித்து சம்பந்தமாகவும் MCB Bank க்கினால் பரீட்சார்த்தம் செய்யப்படும்.

Credit Administration Department, MCB Bank Ltd
No. 8, York Arcade Building, Leyden Bastian Road, Colombo 01
Tel: +94 11 5 222 200

- **எந்த விதமான முன் அறிவிப்புமின்றி இந்த ஏலத்தை ரத்துச் செய்ய வங்கிக்கு பூரண உரிமையுண்டு.**
- **சுகாதார அமைச்சின் வழிகாட்டலின் படி கடுமையான சட்டங்களுடன் கோவித் நெறிமுறையை கடைபிடித்து இந்த ஏலம் நடை முறைப்படுத்தப்படும்.**

**டல்லஸ் கெலார்ட்**
அங்கீகாரம் பெற்ற ஏலவிற்பனையாளர்
இல .146/3, காலதேரா கார்டன்ஸ், கீழ் துடுகெமுனு தெரு, கொஹூவல.
தொ.பே: 11 4302622, 11 4367111 | aucslk@gmail.com

# மக்கள் வங்கி

## 1986 இன் 32ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 இன் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29Dஆம் பிரிவின் கீழான தீர்மானம்

1986 இன் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 இன் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29D ஆம் பிரிவின் கீழ் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையினால் 2023.09.06 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தின் போது பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது என்பதை இத்தால் அறியத் தரப்படுகிறது.

லக் பிரான்ட் ∴பேர்னிச்சர் (பிரைவேற்) லிமிட்டெட் என்பது 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் உரியவாறு கூட்டிணைக்கப்பட்ட பதிவிலக்கம் பி.வி.95902 ஐக் கொண்ட ஒரு கம்பனி என்பதுடன் இல. 108/8, சிறீ மங்கள வீதி மாகொல தெற்கு, மாகொல எனும் முகவரியில் அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ளதோடு, ஆர்.ஏ.சி. குமாரசிறி, பிரசித்த நொத்தாரிசு இனால் சான்றளிக்கப்பட்ட 2020.12.21 ஆம் திகதிய 2331 ஆம் இலக்க ஈட்டு முறி மீது நிலுவையாகவுள்ள தொகையைச் செலுத்தத் தவறியமை காரணமாக, அது தற்போது நிலுவையாக உள்ளதுடன் ரூபா முப்பத்தொரு மில்லியன் நானூற்று எண்பதாயிரத்து அறுநூற்று அறுபத்தெட்டு மற்றும் அறுபத்திரெண்டு சதம் (ரூபா 31,480,668.62)இனை மேற்படி முறியின் மீதான மேலதிக வட்டியுடன் சேர்த்து மக்கள் வங்கிக்கு செலுத்த வேண்டியுள்ளது.

மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையானது, 1986 இன் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 இன் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தினால் அவர்களுக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ், மேற்கூறப்பட்ட ரூபா முப்பத்தொரு மில்லியன் நானூற்று எண்பதாயிரத்து அறுநூற்று அறுபத்தெட்டு மற்றும் அறுபத்திரெண்டு சதம் (ரூபா 31,480,668.62) உடன் சேர்த்து 2023.06.19 திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரை ரூபா இருபத்து நான்கு மில்லியன் நானூற்றுப் பன்னிரெண்டாயிரத்து தொளாயிரத்துத் தொண்ணூற்றி எட்டு மற்றும் அறுபத்தைந்து சதம் (ரூபா 24,412,998.65) தொகையின் மீது 2023.06.19 ஆம் திகதி உள்ளவாறு வாராந்த AWPLR +4% வருட வட்டி என்ற அடிப்படையில் வருடம் ஒன்றிற்கு 25.28% மற்றும் மேற்படி மக்கள் வங்கிச் சட்டத்தின் 29 எல் ஆம் பிரிவின் கீழ் அறவிடத்தக்க செலவுகள், பணங்கள் (ஏதேனும் இருப்பின்) பெறப்பட்டதிலிருந்து அதனைக் கழித்து, அவற்றின் அறவீடு பொருட்டு, மேற்படி அட்டவணையில் முற்றாக விபரிக்கப்பட்ட ஆர்.ஏ.சி.குமாரசிறி, பிரசித்த நொத்தாரிசு இனால் சான்றளிக்கப்பட்ட 2020.12.21 ஆம் திகதிய 2331 ஆம் இலக்க ஈட்டு முறியின் மூலம் மேற்படி வங்கிக்கு ஈடு வைக்கப்பட்ட அசையும் சொத்துகளை (இயந்திர, உபகரணங்கள்) இல. 6 ஏ, பெயார்பீல்ட் கார்டின்ஸ், கொழும்பு 08 இலுள்ள உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் திருமதி ஷொக்மன் சமீரவிக்ரம என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுவதற்கு இத்தால் தீர்மானிக்கின்றது.

**மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணை**

**பொறித்தொகுதியில் அடங்குவன:-**

| Description | Company Ref. No. | Make | Model No. | Manufacture No. | Country | Yr. of Manufacture |
|---|---|---|---|---|---|---|
| Sliding Table Saw (tilt 45 angle) | 02 | New Mas Woodworking Machinery & Equipment Co. Ltd | MJ6132D | 751 | China | 2014 |
| Sliding Table Saw (tilt 45 angle) | 02-1 | New Mas Woodworking Machinery & Equipment Co. Ltd | MJ6132D | 978 | China | 2014 |
| 2D Carving Machine (Serial No. 13111150930) | 31 | Jinan Singhui CNC Technology Co. Ltd | E2-1325C | --- | China | 2013 |
| 3D Carving Machine (Serial No. 13090672304) | 32 | Jinan Singhui CNC Technology Co., Ltd | E9-1224 | --- | China | 2014 |
| Bottom Rip Saw | 07 | New Mas Woodworking Machinery Equipment Co. Ltd | MJ153D | 317 | China | 2013 |
| Big Band Saw (Serial No. 1509291) | 04 | Jingda | MJ345B | --- | China | 2013 |
| Band Saw (600mm) | 05 | New Mas Woodworking Machinery & Equipment Co. Ltd | MJ346A | 316 | China | 2013 |
| Jointer (300mm) | 08 | New Mas Woodworking Machinery & Equipment Co. Lted | MBL503 | 319 | China | 2013 |
| Thickness Planer (400mm) | 10 | New Mas Woodworking Machinery & Equipment Co. Ltd | MB104A | 331 | China | 2013 |
| Jointer (400mm) | 09 | New Mas Woodworking Machinery & Equipment Co. Ltd | MB504 | 401 | China | 2014 |
| Thickness Planer (600mm) | 11 | New Mas Woodworking Machinery & Equipment Co. Ltd | MB106A | 402 | China | 2014 |
| Single Spindle Shaper (5.5kw) | 12 | New Mas Woodworking Machinery & Equipment Co. Ltd | MX5117B | 333 | China | 2013 |
| Single Spindle Shaper (5.5kw) | 12-1 | New Mas Woodworking Machinery & Equipment Co. Ltd | MX5117B | 332 | China | 2013 |
| Double Spindle Shaper (4kw) | 13 | New Mas Woodworking Machinery & Equipment Co. Ltd | MX5117 | 339 | China | 2013 |
| High Speed Table Router (50MM/2.2 KW) | 14 | New Mas Woodworking Machinery & Equipment Co. Ltd | MXS5115A | 334 | China | 2013 |
| CNC-Tenoner | 15 | New Mas Woodworking Machinery & Equipment Co. Ltd | MDK3113B | 314 | China | 2013 |
| NC Mortising Machine (100mm/9kw) | 16 | New Mas Woodworking Machinery & Equipment Co. Ltd | MSK3722-4A | 7746 | China | 2013 |
| Tenoner (Square end / Pneumatic) | 17 | New Mas Woodworking Machinery & Equipment Co. Ltd | MD2108B | 355 | China | 2013 |
| Vertical Spindle Mortiser (100MM/1.5KW) | 18 | New Mas Woodworking Machinery & Equipment Co. Ltd | MS362 | 335 | China | 2013 |
| Edge Sander | 19 | New Mas Woodworking Machinery & Equipment Co. Ltd | MM2617 | 336 | China | 2013 |
| 3 Row Multi Head Boring Machine (15mm/5.9kw) | 21 | New Mas Woodworking Machinery & Equipment Co. Ltd | MZ73213D | 337 | China | 2013 |
| Vertical Spindle Drilling Machine | 22 | New Mas Woodworking Machinery & Equipment Co. Ltd | MZ511 | --- | China | --- |
| Semi-Auto Finger Joint (330mm) | 23 | New Mas Woodworking Machinery & Equipment Co. Ltd | MXB3510 | 356 | China | 2013 |
| Semi-Auto Oil Pressure Clamping Machine | 24 | New Mas Woodworking Machinery & Equipment Co. Ltd | TAB30x13 -20 | --- | China | 2013 |
| Hydraulic Cold Press | 25 | New Mas Woodworking Machinery & Equipment Co. Ltd | MH3284x 50T-2 | --- | China | --- |
| Hydraulic Cold Press | 26 | New Mas Woodworking Machinery & Equipment Co. Ltd | MH3284x 50T-1 | --- | China | --- |
| CNC Band Saw | 06 | New Mas Woodworking Machinery & Equipment Co. Ltd | CF020 (MJ359. CNC) | --- | China | --- |
| Panel Saw (2500mm / 380 V) Beam Saw-as per Invoice) | 03 | New Mas Woodworking Machinery & Equipment Co. Ltd | MJ6225 | 678 | China | 2013 |
| Vertical Belt Sander (Sponge Roller) | 29 | New Mas Woodworking Machinery & Equipment Co. Ltd | MM2115 | 323 | China | 2013 |
| Vertical Belt Sander (Sponge Roller) | 29-1 | New Mas Woodworking Machinery & Equipment Co. Ltd | MM2115-1 | 322 | China | 2013 |
| Tympany Sanding Machine (3' with 2 spare tympany) | 30 | New Mas Woodworking Machinery & Equipment Co. Ltd | MM3223-2 | --- | China | --- |
| Tympany Sanding Machine (3' with 2 spare tympany) | 30-1 | New Mas Woodworking Machinery & Equipment Co. Ltd | MM3223-1 | --- | China | --- |
| Edge Sawing Machine | 28 | New Mas Woodworking Machinery & Equipment Co. Ltd | MJ540 | --- | China | --- |
| Stroke Belt Sander (Horizontal Belt Sands) | 20 | New Mas Woodworking Machinery & Equipment Co. Ltd | MM2015 | 338 | China | 2013 |
| Vacuum Pressing Machine | 27 | --- | TM2480 (MH2480-as per invoice) | 131276 | China | 2013 |
| Sliding Table Saw (No tilt) (3120mm) | 01 | New Mas Woodworking Machinery & Equipment Co. Ltd | MJ6132B | 373 | China | 2013 |

இல.215/2, கட்டகந்த, அனுரகொட, பெப்பிலியாவல எனும் வளவில் அல்லது இந்த முன்வைப்புகளில் தொடர்ச்சியாக அத்தகைய இயந்திரத்தொகுதியைக் கொண்டுவரக்கூடிய அல்லது அகற்றப்படக்கூடிய அத்தகைய வேறு ஏதேனும் வளவில் வைக்கப்படும்.

**பணிப்பாளர் சபையின் கட்டளையின் படி,**

**பிரதிப் பொது முகாமையாளர் (அறவீடுகள்) மக்கள் வங்கி,**
**அறவீடுகள் திணைக்களம்**
**10 ஆம் மாடி, தலைமை அலுவலகக் கட்டடம்,**
**இல. 75, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்த, கொழும்பு 02**

**2023 ஓகஸ்ட் 14 ஆம் திகதி**

www.peoplesbank.lk 1961 PEOPLE'S BANK Pride of the Nation

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்
வவுனியா

# விலைக்கோரலுக்கான அழைப்பு

## 2023/2024ஆம் வருடங்களில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் வளிச்சீராக்கிகளுக்கான சேர்விஸ் மற்றும் தடுப்புப் பராமரிப்பு

பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள ''2023/2024ஆம் வருடங்களில் வவுனியா வைத்தியசாலைகளின் புறபிரிவுகள் மற்றும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் வளிச்சீராக்கிகளுக்கான சேர்விஸ் மற்றும் தடுப்புப் பராமரிப்பு'' என்பதற்கு தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.

| இல. | விபரங்கள் | அமைவிடம் | எண்ணிக்கை | விலைக்கோரல் பிணை முறியின் செல்லுபடிக் காலம் |
|---|---|---|---|---|
| 1 | 12,000 BTUSplit type | RDHS அலுவலகம் மற்றும் வைத்தியசாலையின் புற பிரிவுகள் | 12 | 50,000.00<br>2024-01-11 |
| 2 | 18,000 BTU/Split type | RDHS அலுவலகம் மற்றும் வைத்தியசாலையின் புற பிரிவுகள் | 45 | |
| 4 | 24,000 BTU/Split type | RDHS அலுவலகம் மற்றும் வைத்தியசாலையின் புற பிரிவுகள் | 93 | |

1. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறை மூலமாக இடம்பெறும்.
2. ஒப்பந்தத்தைப் கையளிக்கப் பெறுவதற்கான தகுதியாக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் (ICTAD) வளிச்சீராக்கி விசேடத்துவத்தில் 'EM5' அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தின் கீழ் பதிவு செய்திருத்தல் வேண்டும் என்பதுடன் வளிச்சீராக்கிகளை வழங்குதல் மற்றும் பராமரித்தலுக்கான வியாபாரப் பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
3. மாற்றுவழி விலைக்கோரல்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத 2,000.00 ரூபா கட்டணத்தைச் செலுத்தி மற்றும் பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் 2023-09-29ஆம் திகதி முதல் 2023-10-12ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் வவுனியா - RDHS அலுவலகம், கணக்கியல் பிரிவிலிருந்து ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
5. விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படும் இறுதி நாள் முதல் 2024-01-11ஆம் திகதி வரையில் விலைமனுக்கள் செல்லுபடியாதல் வேண்டும்.
6. விலைமனுக்களை 2023-10-13ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும். சகல விலைமனுக்களுடனும் இலங்கையின் கீர்த்தி வாய்ந்த வங்கியொன்றினால் வழங்கப்பட்ட 50,000.00 ரூபாவுக்கான விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். மேற்குறிப்பிடப்பட்ட நேரத்தின் பின் பின்வரும் முகவரியில் விலைக்கோரலில் கலந்துகொள்வதற்காக விலைமனுதாரரினால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் உடனடியாகத் திறக்கப்படும்.
7. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் அலுவலகத்தின் கணக்காளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**பிராந்திய சுகாதார சேவைகள் அலுவலகம் (தலைவர்),**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் அலுவலகம், மன்னார் வீதி,**
**வவுனியா.**

# குருணாகல் பிரதேச சபையின் 2024 ஆம் வருடத்திற்கான வரவு செலவுத் திட்ட அறிக்கையை பரீட்சித்து பார்த்தல் தொடர்பாக பொது மக்கள் மீது விடுக்கப்படும் அறிவித்தல்

அனைத்து பிரிவுகளினதும் பங்களிப்பு மற்றும் நிலையான அபிவிருத்தி நோக்கங்களுக்காக 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்திற்கு அமைவாக, மற்றும் 2020 வரவு செலவுத்திட்டம் மற்றும் அமுலாக்க விதிகளின் படி 2024 ஆம் வருடத்திற்காக உத்தேச வரவு செலவுத் திட்ட அறிக்கையை 2023.10.01 ஆந் திகதி முதல் 2023.10.31 ஆந் திகதி வரை மு.ப 9.00 முதல் பி.ப 3.00 வரை பொதுமக்களின் பரீட்சித்தலுக்காக சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளதென மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஜே.ஏ. அஜித் குமாரசிங்க,**
**செயலாளர்,**
**குருணாகல் பிரதேச சபை.**

**முகவரி : குருணாகல் பிரதேச சபை, உடதிகன, புத்தளம் வீதி, குருணாகல்**
**தொலைபேசி இல : 0372222551/0372030500**
**தொலைநகல் : 0372228197**
**மின்னஞ்சல் முகவரி : kurunegalaps@gmail.com**

# கல்கமுவ பிரதேச சபை - 2024 ஆம் ஆண்டிற்காக வழங்குநர்களையும் ஒப்பந்தக்காரர்களையும் பதிவு செய்தல்

2024ஆம் ஆண்டிற்காக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக பதிவு செய்துக் கொள்வதற்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட தயாரிப்பாளர், வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடத்தில் விண்ணப்பப் படிவம் கோரப்படுகின்றது.

கீழ் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்திற்கு இணங்க ஒழுங்கமைக்கப்பட்ட விண்ணப்பப் படிவம் 2023.12.31 ஆந் திகதிக்கு முன் "தலைவர், கல்கமுவ பிரதேச சபை, கல்கமுவ" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது நேரில் கொண்டு வந்து பொறுப்படைக்கலாம். விண்ணப்பப்படிவம் இடப்படுகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "2024 ஆம் ஆண்டிற்கு வழங்குநர்களை பதிவு செய்தல்" என்று குறிப்பிடப்பட வேண்டும். குறித்த திகதிக்கு பின்பு கிடைக்கின்ற விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

**பொருட்கள் / மூலப்பொருட்கள்**

01. எல்லா அலுவலக எழுது கருவிகள் (பேனை, பென்சில், கடதாசி வகைகள், பைல், கல்குலேடர் உற்பட ஏனையவைகள்)
02. கணனி இயந்திரம் CCtv மற்றும் CCtv உதிரிப் பாகங்கள்
03. கணனி உதிரிப்பாகங்கள். (பிரின்டர், யூ.பி.எஸ்., டோனர், ரிபன் என்பன)
04. போட்டோ பிரதி இயந்திரம் மற்றும் போட்டோ பிரதி இயந்திரத்திற்கான மேலதிக உதிரிப்பாகங்கள்.
05. வீதி வெளிச்சத்திற்க்கு தேவையான வீதி விளக்கு உற்பட எல்லா மின்சார உதிரிப்பாகங்கள் மற்றும் உபகரணங்கள்.
06. எல்லா வாகனங்களுக்காகவும் டயர், டியுப், பட்டரி என்பன.
07. வாகன மேலதிக உதிரிப்பாகங்கள் (மோட்டார் கிரேட்டர், JCB இயந்திரம், Bobcat வாகனம், கெப் வாகனம், டிரக்டர். முச்சக்கர வண்டி, டிரம் டிரக்)
08. ஹாட்வெயார் பொருட்கள். (சீமெந்து, மண் வெட்டி, சவல் என்பன)
09. ஆரோக்கியம் மற்றும் சுகாதார பொருட்கள் (சவர்க்காரம், விம், டைல் கிளீனர், கிருமிநாசினி பொருட்கள் போன்றன).
10. அலுவலக வீட்டு உபகரணம் வழங்குதல். (மரம் / இரும்பு நாற்காலி, மேசை என்பன)
11. கைத்தொழில் பொருட்கள் (கருங்கல், சிப்ஸ் கல், கல் தூள், மணல், மண், திரிவானா கெரவல் (பொரலு), ABC கலவைகள் என்பன)
12. சீமெந்திலான தயாரிப்புக்கள் (ஹியும் குளாய்கள், அச்சுக் கல், பூச்சாடி என்பன)
13. முன் கலவை கொன்கிறீட்.
14. தார்
15. பலகை மரத் தொழில் சார்ந்த உற்பத்திகள்
16. பண்டிகை பொருட்கள். (கெனபி, தகடு ஹட், மேடை, மூடுகை என்பன)
17. சங்கீத பொருட்கள், முன் பள்ளி உபகரணங்கள் மற்றும் விளையாட்டு பொருட்கள்.
18. பிளாஸ்டிக் குப்பை கொள்கலன், பிளாஸ்டிக் நீர் தாங்கி, சேதனப்பசளை கலன், குளாய் மற்றும் நீர் குளாய் உதிரிப்பாகங்கள் என்பன.
19. நூலகப் புத்தகங்கள், சஞ்சிகை மற்றும் பத்திரிகை.
20. எரிவாயு சிலிண்டர்.
21. தாவரங்களின் வகைகள். (பூக் கன்று வகைகள் மற்றும் ஏனைய கன்று வகைகள்)
22. கணணி வலையமைப்புக்கு உற்படுத்துதல் மற்றும் இணையதள ஆக்கம்
23. வாகன குஷன் வேலைகள் மற்றும் சீட் உறை தைத்தல்
24. வளிச்சீராக்கி இயந்திரம்

**சேவைகள்**

01. அச்சக நடவடிக்கை (ஆவணங்களை ஒழுங்கமைத்தல், துண்டு பிரசுரம், சான்று பத்திரங்கள், பில் என்பன)
02. பெயர் பலகை, பதாகை என்பன மற்றும் ஒழுங்கமைத்தல்.
03. அலுவலக அதிகாரபூர்வ அடையாள அட்டை ஒழுங்கமைத்தல்.
04. பதவி முத்திரை ஒழுங்கமைத்தல்.
05. அலுவலக உபகரணங்களை பழுதுபார்த்தல் மற்றும் சேவை செய்தல். (போட்டோ பிரதி இயந்திரங்கள், விரல் அடையாள இயந்திரம் என்பன)
06. கணனி இயந்திரம் மற்றும் கணனி உதிரிப்பாகங்களை பழுதுபார்த்தல் மற்றும் சேவை செய்தல்.
07. வாகன பழுதுபார்ப்பு மற்றும் சேவைகள் செய்தல். (மோட்டர் கிரேட்டர், டிரம் டிரக், JCB இயந்திரம், கெப் வாகனம், லொரி, முச்சக்கர வண்டி, டிரக்டர் என்பன).
08. தகன கூடத்தை பழுதுபார்க்கும் நடவடிக்கை.
09. நில அளவைச் சேவை.
10. பழைய பத்திரிகை, வெற்று போத்தல், பழைய இரும்பு, எரியாத டியுப் பல்ப் மற்றும் CFL பல்ப் என்பவற்றை விலைக்கு எடுத்தல்.
11. குளிர்பதனாக்கி அமைப்பை பழுதுபார்த்தல்.
12. நீர் குழாய் அமைப்பு / நீர் பில்டர் பழுதுபார்ப்பு.
13. ரூ.2,000,000/= பெறுமதிக்கு மேற்பட்ட சிவில் பொறியியல் செயற்றிட்டத்திற்காக ஆலோசனை சேவை வழங்குதல்
14. ரூ.2,000,000/= மேற்பட்ட ஒப்பந்ததாரர்கள்.

மேலே குறிப்பிடப்பட்ட பொருட்கள் / மூலப் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக ஒரு விடயத்திற்கு பதிவுக் கட்டணம் ரூ.1000/- என்பதுடன், ஒப்பந்ததாரர்களை பதிவு செய்வதற்காக ரூ. 5000/- கட்டணம் அறவிடப்படும்.

## கல்கமுவ பிரதேச சபை - 2024 ஆம் ஆண்டிற்காக வழங்குநர்களை மற்றும் ஒப்பந்ததாரர்களை பதிவு செய்யும் மாதிரிப் படிவம்

1. விண்ணப்பதாரியின் பெயர் :- ....................................................
2. வியாபாரத்தின் பெயர் மற்றும் முகவரி :- ....................................................
3. வியாபாரத்தின் தன்மை :- ....................................................
4. வியாபாரம் / ICTAD பதிவு இலக்கம் மற்றும் திகதி (பிரதி ஒன்றினை இணைக்கவும்) :- ....................................................
5. பதிவு செய்துக் கொள்வதற்கு எதிர்பார்கின்ற உருப்படியின் இலக்கம் :- ....................................................
6. பதிவு செய்துக் கொள்வதற்கு எதிர்பார்கின்ற உருப்படிகள் :- ....................................................
7. தொலைபேசி இலக்கம் :- ........................... அலுவலகம் :- ................................. கையடக்க :- ....................................
8. பெக்ஸ் இலக்கம் :- ....................................................
9. வெட் வரி பதிவு இலக்கம் :- ....................................................
10. இலக்கம் ................................ கான ரூ .................................. பெறுமதி உடைய காசோலை இத்துடன் அனுப்பப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டிற்காக தயாரிப்பாளர் / வழங்குநர் / ஒப்பந்தக்காரர் ஒருவராக பதிவு செய்து கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

........................................ ........................................................................
திகதி **விண்ணப்பதாரியின் / முகாமையாளரின் கையொப்பம் மற்றும் பதவி முத்திரை**

## பொது விதிமுறைகள்

01. விண்ணப்பப் படிவத்துடன் வியாபார பெயர் பதிவு செய்யப்பட்டதற்கான ஒரு பிரதி மற்றும் வெட் பதிவுச் சான்றிதழின் பிரதி ஒன்றினையும் இணைத்து அனுப்ப வேண்டும்.
02. கல்கமுவ பிரதேச சபை அலுவலகத்திற்கு வருகைத் தந்து செலுத்த இயலுமானதுடன், தபால் மூலம் விண்ணப்பிப்பதாயின் "செயலாளர். கல்கமுவ பிரதேச சபை" என்ற பெயருக்கு எழுதிய காசோலையினை மாத்திரம் செலுத்த வேண்டும். தபால் கட்டளை பொறுப்பேற்கப்படமாட்டாது.
03. எல்லா வழங்கல்களுக்காகவும் 30 நாள் கால எல்லைக்கு சபைக்கு கடன் வசதி வழங்க வேண்டும்.

இது பற்றி மேலதிக விபரம் கல்கமுவ பிரதேச சபையின் தொலைபேசி இலக்கம் 037-2254081 மூலம் கடமை நேரத்தினுள் அழைத்து பெற்றுக் கொள்ளலாம்.

**ஏ.பீ. நிமல் ரத்நாயக்க,**
**செயலாளர்,**
**பிரதேச சபை - கல்கமுவ.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**நீர்ப்பாசன அமைச்சு**
**இலங்கை மகாவலி அபிவிருத்தி அதிகார சபை**

## கேள்வி அறிவித்தல்

### ஒன்றிணைக்கப்பட்ட நீரேந்து மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ செயற்றிட்டம் (IWWRMP)

செயற்றிட்ட இலக்கம்: **P166865.** கடன் இல. **IDA-66210**

1. இலங்கை சனநாயக, சோஷலிசக் குடியரசானது சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (International Development Association) ஒன்றிணைக்கப்பட்ட நீரேந்து மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ செயற்றிட்டத்திற்காக கடனொன்றைப் பெற்றுள்ளதுடன் இக்கடனின் ஒரு பகுதியை கீழேயுள்ள அட்டவணையில் விபரப்படுத்தியுள்ளவாறான ஒப்பந்தத்திற்காக செலவு செய்வதற்கு உத்தேசித்துள்ளது.
2. இலங்கை மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் சார்பில் இலங்கை மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்தினால் இல. 500, டீ. பீ. ஜயா மாவத்தை, கொழும்பு-10 எனும் இடத்தில் அமைந்துள்ள இலங்கை மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் 09ஆம் மாடியில் 2023-10-20ஆம் திகதி மு.ப. 11.00 மணி வரை பின்வரும் மேம்படுத்தல் வேலைகளின் பொருட்டு முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| வேலை விபரம் | ஒப்பந்த இலக்கம் | CIDA பதிவுத் தரம் | கேள்விப் பிணை முறி / மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் | கேள்வி முன்னோடிக் கூட்டம் |
|---|---|---|---|---|
| வலவ வலது கரையில் 41 கி.மீ. பிரதான கால்வாயில் 0+000 கி.மீ முதல் 8+250 கி.மீ வரையில் புனரமைத்தல் (பொதி இல. 01) - (மீள் கேள்வியிடல்)<br>(மதிப்பீட்டுத் தொகை: 253 மில்லியன் ரூபா, ஒப்பந்தக் காலம்: 365 நாட்கள்) | LK-MOMDE-378049-CW-RFB | தரம்: C3 அல்லது அதற்கு மேல்<br>விசேடத்துவம்: நீர்ப்பாசனம் மற்றும் கால்வாய் வடிகாலமைப்பு | தொகை: ரூபா 3,800,000.00<br>செல்லுபடியாகும் கால எல்லை: 2024-04-12ஆம் திகதி வரை<br>மீளளிக்கப்படாத கட்டணம் ரூபா 50,000.00 | திகதி: 2023-10-13<br>நேரம்: மு.ப. 10.00<br>இடம்: வதிவிட முகாமையாளர் அலுவலகம் - வலவ |
| வலவ வலது கரையில் 41 கி.மீ. பிரதான கால்வாயில் 8+250 கி.மீ முதல் 17+400 கி.மீ வரையில் புனரமைத்தல் (பொதி இல. 02) - (மீள் கேள்வியிடல்)<br>(மதிப்பீட்டுத் தொகை: 219 மில்லியன் ரூபா, ஒப்பந்தக் காலம்: 365 நாட்கள்) | LK-MOMDE-378051-CW-RFB | தரம்: C3 அல்லது அதற்கு மேல்<br>விசேடத்துவம்: நீர்ப்பாசனம் மற்றும் கால்வாய் வடிகாலமைப்பு | தொகை: ரூபா 3,285,000.00<br>செல்லுபடியாகும் கால எல்லை: 2024-03-15ஆம் திகதி வரை<br>மீளளிக்கப்படாத கட்டணம் ரூபா 50,000.00 | |
| வலவ வலது கரையில் 41 கி.மீ. பிரதான கால்வாயில் 23+400 கி.மீ முதல் 30+005 கி.மீ வரையில் புனரமைத்தல் (பொதி இல. 03) - (மீள் கேள்வியிடல்)<br>(மதிப்பீட்டுத் தொகை: 158 மில்லியன் ரூபா, ஒப்பந்தக் காலம்: 365 நாட்கள்) | LK-MOMDE-378055-CW-RFB | தரம்: C3 அல்லது அதற்கு மேல்<br>விசேடத்துவம்: நீர்ப்பாசனம் மற்றும் கால்வாய் வடிகாலமைப்பு | தொகை: ரூபா 2,400,000.00<br>செல்லுபடியாகும் கால எல்லை: 2024-03-15ஆம் திகதி வரை<br>மீளளிக்கப்படாத கட்டணம் ரூபா 35,000.00 | |
| வலவ வலது கரையில் 41 கி.மீ. பிரதான கால்வாயில் 30+005 கி.மீ முதல் 41+600 கி.மீ வரையில் புனரமைத்தல் (பொதி இல. 04) - (மீள் கேள்வியிடல்)<br>(மதிப்பீட்டுத் தொகை: 158 மில்லியன் ரூபா, ஒப்பந்தக் காலம்: 365 நாட்கள்) | LK-MOMDE-378056-CW-RFB | தரம்: C3 அல்லது அதற்கு மேல்<br>விசேடத்துவம்: நீர்ப்பாசனம் மற்றும் கால்வாய் வடிகாலமைப்பு | தொகை: ரூபா 3,200,000.00<br>செல்லுபடியாகும் கால எல்லை: 2024-03-15ஆம் திகதி வரை<br>மீளளிக்கப்படாத கட்டணம் ரூபா 50,000.00 | |

3. ஒப்பந்தத்தை கையளிக்கப் பெறுவதற்கான தகைமையைப் பெறுவதற்கு, சித்திகரமான கேள்விதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் கேள்வித் தரவிலுள்ள பின்வரும் தேவைப்பாடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. மேற்படி அட்டவணையில் வேலைகளுக்கு எதிரில் தரப்பட்டுள்ள CIDA திட்டத்தின் கீழ் பதிவு மற்றும் துறைக்கான பதிவைக் கொண்டுள்ள மற்றும் 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்துடன் பதிவு செய்துள்ளவர்கள் மட்டுமே இந்தக் கேள்விக்கான தகுதியைப் பெறுவர். அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் இலங்கை அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட ஏனைய சுற்றுநிருபங்கள் இந்த கேள்விகளை மதிப்பிடுகையில் கவனத்திற் கொள்ளப்படும்.
5. வளமுள்ள கேள்விதாரர்கள் 2023-10-02ஆம் திகதி முதல் 2023-10-19ஆம் திகதி வரையில் மு.ப. 9.30 முதல் பி.ப. 3.00 மணி வரையில் மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி கொழும்பு-10, டீ.பி. ஜயா மாவத்தை, 500ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள இலங்கை மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் 03ஆம் மாடியிலுள்ள பிரதிப் பணிப்பாளர் நாயகம் (தொழில்நுட்ப சேவைகள்) அவர்களுக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் ஒரு தொகுதி கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
6. கேள்விதாரர்கள் 2023-10-02ஆம் திகதி முதல் 2023-10-19ஆம் திகதி வரையில் மு.ப. 9.30 முதல் பி.ப. 4.00 மணி வரையில் கொழும்பு-10, டீ.பி. ஜயா மாவத்தை, 500ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள இலங்கை மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் 03ஆம் மாடியிலுள்ள பிரதிப் பணிப்பாளர் நாயகம் (தொழில்நுட்ப சேவைகள்) அவர்களிடம் கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம் மற்றும் http//mahaweli.gov.lk எனும் இணையதளத்திலும் பரீட்சித்துப் பார்ப்பதற்கு கிடைக்கத்தக்கதாகவுள்ளன.
7. நகல் பிரதிகளுடான கேள்விகளை முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கடித உறையில் உள்ளிட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் இலக்கத்தைத் தெளிவாகக் குறிப்பிட்டு 2023-10-20ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் கொழும்பு-10, டீ.பி. ஜயா மாவத்தை, 500ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள இலங்கை மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் 09ஆம் மாடியிலுள்ள பணிப்பாளர் நாயகத்திற்குப் பதிவுத் தபாலில் அல்லது கூரியர் சேவை மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது நேரில் கொண்டு வந்து ஒப்படைத்தல் வேண்டும். அதன்பின் கேள்விகள் உடன் திறக்கப்படும். கேள்விப் படிவங்ளைச் சமர்ப்பித்துள்ள ஒப்பந்தக்காரர்கள் அல்லது அவரது பிரதிநிதிகளான இரண்டுக்கு (2) மேற்படாத நபர்கள் இச்சந்தர்ப்பத்தில் கலந்து கொள்ளலாம்.
8. மேலதிக விபரங்களை இலங்கை மகாவலி அதிகார சபையின் தொழில்நுட்ப சேவைகள் பிரிவின் **011-2687475, 011-2689651** எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக பெற்றுக்கொள்ளலாம். மின்னஞ்சல்: **ddgts.masl@gmail.com.**

**பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை மகாவலி அதிகார சபை.**

# அறிவித்தல்

## 2023-06-30ஆம் திகதி நாளது தரவேற்றம் செய்யப்பட்ட அங்கத்தவர் பெயர் பட்டியலைக் காட்சிப்படுத்துதல்

2018-10-04ஆம் திகதிய 2091/63ஆம் இலக்க அதிவிசேட பத்திரிகையின் திருத்தப்பட்ட 1974-01-10ஆம் திகதிய 93/05ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 1973 கூட்டுறவுச் சங்க சட்டக் கோவையின் 12(iii) அத்தியாயத்தின் பிரகாரம் 2023-06-30ஆம் திகதியில் நாளது தரவேற்றம் செய்யப்பட்ட குளி/143 எனும் பதிவிலக்கத்தைக் கொண்ட 1974-12-19ஆம் திகதி பதிவு செய்யப்பட்ட வ/ப குளியாப்பிட்டிய பிரிவின் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பிரதேசங்களுக்கு இயைபான அங்கத்தவர் பெயர் பட்டியல் அந்தந்தப் பிரதேசங்களின் சங்கப் பிரதான அலுவலகம் மற்றும் சங்கத்தின் www.mpcskuliyapitiya.com எனும் உத்தியோகபூர்வ இணையதளத்தில் 2023-09-30ஆம் திகதி முதல் 2023-10-31ஆம் திகதி வரை காட்சிக்கு வைக்கப்படுவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது. அதேபோல் அத்துடன் அந்தந்த பிரதேசங்களுக்கு இயைபான அடையாளம் காணப்பட்ட மரணித்த அங்கத்தவர்களின் பெயர்ப் பட்டியலும் முன்வைக்கப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் அந்த அங்கத்தவர் பெயர்ப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களில் ஏதேனும் குறைபாடுகள் அல்லது திருத்தங்களை உள்ளடக்குவதற்கு அங்கத்தவர்கள் தொடர்பிலான புதிய தகவல்களை உள்ளடக்குதல் தொடர்பில் மேன்முறையீடு அல்லது தற்போதுள்ள தகவல்கள் தொடர்பில் எதிர்ப்புகள் இருக்குமானால் அந்த எதிர்ப்புகளை 2023-10-31ஆம் திகதிக்கு முன் சங்கத்தின் செயலாளருக்கு எழுத்து மூலம், பதிவுத் தபாலில் அல்லது நேரில் கொண்டுவந்து ஒப்படைக்குமாறு இத்தால் அறிவிக்கின்றேன்.

**நிர்வாகச் சபையின் கட்டளையின் பிரகாரம்,**
**செயலாளர்,**
**குளியாப்பிட்டிய பிரிவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.**

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

# மாவத்தகம பிரதேச சபை

## அறிவித்தல்


2024ஆம் ஆண்டின் மாவத்தகம பிரதேச சபையின் குறைநிரப்பு வரவு செலவுத் திட்ட அறிக்கை கீழ்க்காணும் இடங்களில் பரீட்சித்துப் பார்ப்பதற்கு பொதுமக்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக இத்தால் அறிவித்துக்கொள்கின்றேன்.

01. பிரதேச சபை தலைமையகம் - மாவத்தகம

02. மக்கள் நூலகம் - மாவத்தகம

**ஆர்.எம்.டி.கே. ரத்நாயக்க**
**செயலாளர்**

**மாவத்தகம பிரதேச சபை**
**2023.09.22**




## நாராஹென்பிட்ட விசேட பொருளாதார நிலையம்

# பெறுகை அறிவித்தல்

### 2024ஆம் வருடத்திற்கான சுத்திகரிப்புச் சேவையைப் பெற்றுக்கொள்ளல்

1. நாராஹென்பிட்ட விசேட பொருளாதார நிலையத்திற்கு 2024ஆம் வருடத்தில் சுத்திகரிப்புச் சேவையை வழங்குவதற்காக விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு நாராஹென்பிட்ட விசேட பொருளாதார நிலையத்தின் சார்பில் திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
2. விலைக்கோரல் விண்ணப்பங்களை 2023-09-29ஆம் திகதி முதல் 2023-10-17ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரையில் நாராஹென்பிட்ட விசேட பொருளாதார நிலைய அலுவலகத்திலிருந்து (தொலைபேசி இல. 011-2369626) மீளளிக்கப்படாத 2000.00 ரூபாவைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
3. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை ‘‘பிரதேச செயலாளர், திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகம், இல. 563, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு-05’’ எனும் முகவரிக்கு விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘‘2024ஆம் வருடத்திற்கான சுத்திகரிப்புச் சேவையை வழங்குதல் நாராஹென்பிட்ட விசேட பொருளாதார நிலையம்’’ எனக் குறிப்பிட்டு 2023-10-18ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டுவந்து மேற்கூறிய முகவரியிலுள்ள நில மெதுர கட்டிடத்தின் இரண்டாம் மாடியிலுள்ள திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகத்தின் கணக்குப் பிரிவிலுள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடலாம்.
4. சகல விலைமனுக்களுடனும் மீளளிக்கப்படும் 30,000.00 ரூபாவுக்கான பெறுகைப் பிணை வைப்பொன்றை நாராஹென்பிட்ட விசேட பொருளாதார நிலைய முகாமையாளர் பொறுப்பு பெயரில் நாராஹென்பிட்ட இலங்கை வங்கியில் பேணப்படும் 77533972 எனும் கணக்கிலக்கத்திற்கு வைப்புப் செய்து அந்தப் பற்றுச்சீட்டை நாராஹென்பிட்ட விசேட பொருளாதார நிலைய அலுவலகத்திற்குச் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளப்படும் பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை விலைமனுக்களுடன் இணைத்தல் வேண்டும்.
5. விலைக்கோரல் ஆவணங்களை 02 பிரதிகளில் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியெனக் குறிப்பிட்டு வெவ்வேறான உறைகளில் இட்டு அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டுச் சமர்ப்பித்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள் 2023-10-18ஆம் திகதி பி.ப. 2.05 மணிக்கு திம்பிரிகஸ்யாய செயலகத்தில் திறக்கப்படும் என்பதுடன் விண்ணப்பதாரர் அல்லது அவரின் அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் இந்நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.
7. குறித்த விலைமனுக்களை முழுமையாக அல்லது அதன் பகுதியொன்றை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.
8. தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகம்.**




# பெறுகை அறிவித்தல்

குண்டசாலை பிரதேச சபைக்கு சொந்தமான திகன நகரில் அமைந்துள்ள சம்பத் பியச நிலையத்தை நீண்டகால குத்தகை அடிப்படையில் குத்தகைக்கு விடுவதற்கு கேள்விகளை சமர்ப்பிப்பதற்காக இத்தால் அழைப்பு விடுவிக்கப்படுகிறது. அதனடிப்படையில் உங்களால் இந்த கடை அறையை குத்தகைக்கு பெற்றுக்கொள்ள எதிர்பார்ப்பின் நிபந்தனையுடனான விண்ணப்பங்கள் கீழே அட்டவணையின் பிரகாரம் காசு செலுத்தி 2023.09.28 முதல் 2023.10.11 வரை சாதாரண வேலை நாட்களில் மு.ப 9.00 முதல் பி.ப 3.00 வரை குண்டசாலை பிரதேச சபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

02. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட 02 தொகுதிகளுடனான விண்ணப்பத்தை செயலாளர், குண்டசாலை பிரதேச சபை, மெனிக்ஹின்ன என்ற முகவரிக்கு 2023.10.12 பி.ப 2.00இற்கு முன் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கையோடு கொண்டு வந்து அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடவேண்டியதுடன் தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். சமர்ப்பிக்கப்படும் கேள்வி விண்ணப்பத்தை உள்ளீடும் கடித உறையில் இடதுப்பக்க மேல் மூளையில் திகன சம்பத் பியச நிலையத்தை குத்தகைக்கு விடுவதுடன் சம்பந்தப்பட்ட விலைமனுக்களை சமர்ப்பித்தல் என்று குறிப்பிட்டு மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியென்று குறிப்பிட்டு வேறு வேறாக உறையில் உள்ளிடல் வேண்டும்.

03. சகல விண்ணப்பங்களும் 2023.10.12 பி.ப 2.30 இற்கு கேள்விதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படுவதுடன் அதற்கான கேள்விகளை சமர்ப்பிப்போருக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம். கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரித்தல் அல்லது வேறு ஏதாவது தீர்மானம் எடுக்குல் உரிமை குண்டசாலை பிரதேச சபை பெறுகைக்குழுவிற்கு உண்டு.

**அட்டவணை**

குண்டாசலை பிரதேச சபைக்குச் சொந்தமான குத்தகைக்கு விடுவதற்கு உத்தேசித்துள்ள குத்தகை சொத்துக்கள் பற்றிய விபரம் கீழ்க்காணுமாறு அமையும்.

| குத்தகை வழங்குவதற்கு உத்தேசித்துள்ள சொத்துக்கள் | சதுர அடி அளவு | குறைந்தபட்ச கேள்வி | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பிணை | கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| திகன சம்பத் பியச நிலைய கட்டிடம் | 615 | 1620000.00 | 15000.00 | 1500.00 |

**2023.09.26**
**குண்டசாலை பிரதேச சபை**

**எஸ்.ஆர்.அதாவுதா**
**செயலாளர்,**
**குண்டசாலை பிரதேச சபை.**
**மெனிக்ஹின்ன**

## நாராஹென்பிட்ட விசேட பொருளாதார நிலையம்

# பெறுகை அறிவித்தல்

### 2024ஆம் வருடத்திற்கான பாதுகாப்புச் சேவையைப் பெற்றுக்கொள்ளல்

1. நாராஹென்பிட்ட விசேட பொருளாதார நிலையத்திற்கு 2024ஆம் வருடத்தில் பாதுகாப்புச் சேவையை வழங்குவதற்காக விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு நாராஹென்பிட்ட விசேட பொருளாதார நிலையத்தின் சார்பில் திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
2. விலைக்கோரல் விண்ணப்பங்களை 2023-09-29ஆம் திகதி முதல் 2023-10-17ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரையில் நாராஹென்பிட்ட விசேட பொருளாதார நிலைய அலுவலகத்திலிருந்து (தொலைபேசி இல. 011-2369626) மீளளிக்கப்படாத 2000.00 ரூபாவைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
3. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை ‘‘பிரதேச செயலாளர், திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகம், இல. 563, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு-05’’ எனும் முகவரிக்கு விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘‘2024ஆம் வருடத்திற்கான சுத்திகரிப்புச் சேவையை வழங்குதல் நாராஹென்பிட்ட விசேட பொருளாதார நிலையம்’’ எனக் குறிப்பிட்டு 2023-10-18ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டுவந்து மேற்கூறிய முகவரியிலுள்ள நில மெதுர கட்டிடத்தின் இரண்டாம் மாடியிலுள்ள திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகத்தின் கணக்குப் பிரிவிலுள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடலாம்.
4. சகல விலைமனுக்களுடனும் மீளளிக்கப்படும் 30,000.00 ரூபாவுக்கான பெறுகைப் பிணை வைப்பொன்றை நாராஹென்பிட்ட விசேட பொருளாதார நிலைய முகாமையாளர் பொறுப்பு பெயரில் நாராஹென்பிட்ட இலங்கை வங்கியில் பேணப்படும் 77533972 எனும் கணக்கிலக்கத்திற்கு வைப்புப் செய்து அந்தப் பற்றுச்சீட்டை நாராஹென்பிட்ட விசேட பொருளாதார நிலைய அலுவலகத்திற்குச் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளப்படும் பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை விலைமனுக்களுடன் இணைத்தல் வேண்டும்.
5. விலைக்கோரல் ஆவணங்களை 02 பிரதிகளில் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியெனக் குறிப்பிட்டு வெவ்வேறான உறைகளில் இட்டு அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டுச் சமர்ப்பித்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள் 2023-10-18ஆம் திகதி பி.ப. 2.05 மணிக்கு திம்பிரிகஸ்யாய செயலகத்தில் திறக்கப்படும் என்பதுடன் விண்ணப்பதாரர் அல்லது அவரின் அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் இந்நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.
7. குறித்த விலைமனுக்களை முழுமையாக அல்லது அதன் பகுதியொன்றை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.
8. தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகம்.**

# கேள்விக்கான அழைப்பு

## கண்டி மாநகர சபை

### கண்டி மாநகர சபைக்கு தேவையான கம்பிகளை பெற்றுக்கொள்வதற்கான கேள்வி கோரல்

கேள்வி கோரல் இல : CPC/KMC/FD/S/PC01-2023/10

1. கண்டி மாநகர சபையின் நிர்மாணத்திற்கு தேவையான கம்பிகளை பெற்றுக்கொள்வதற்காக (கீழே விவரிக்கப்பட்டுள்ளவாறு) தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

| இலக்கம் | உருப்படி | அளவு | கேள்விப் பினை 2024.01.03 வரை செல்லுபடியாகுதல் வேண்டும் | பொருட்களை வழங்குவதற்கு எடுக்கும் காலம் |
|---|---|---|---|---|
| 1 | 10mm TOR Steel BAR | 6500 | 200,000.00 | ஓடர் கிடைக்கப்பெற்று 14 நாட்களுக்குள் |
| 2 | 12mm TOR Steel BAR | 2750 | | |
| 3 | 16mm TOR Steel BAR | 2000 | | |
| 4 | 6mm MILD STEEL COIL (50kg Rolls X 30NOS) | 1500kg | | |

2. கேள்விதாரரிடம் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடம் இற்கு உருக்குக்கம்பி வழங்கும் மற்றும் விநியோகித்தலுக்கான வியாபார பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும். கேள்விதாரர் உருக்குக்கம்பி உற்பத்தியாளர் அல்லாத வேளையில் விநியோகிப்பதற்காக உற்பத்தியாளரின் அதிகாரத்தை பெற்றிருத்தல் வேண்டும்.
3. ஆர்வம் காட்டுகின்ற தகைமையுள்ள கேள்விதாரர்களுக்கு கணக்காளர் (வழங்கல்கள்) மாநகர சபை, கண்டி (தொ.பே : 081-2232071) (மின்னஞ்சல் : supplieskmc@gmail.com) இடம் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள முடிவதுடன் 27.09.2023 முதல் 16.10.2023 வரை அலுவலக நேரங்களில் 9.00 மணி முதல் 15.45 மணி வரை கணக்காளர் (வழங்கல்கள்) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்வி ஆவணக் கட்டணத்தை கொடுப்பனவுகள் இன்றி இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம்.
4. ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு ஆங்கில மொழியில் முழுமையான கேள்வி ஆவணத் தொகுதியை 27.09.2023 முதல் 16.10.2023 வரை வேலை நாட்களில் 9.00 மணி முதல் 14.45 மணி வரை கீழே தரப்பட்டுள்ள முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பத்தை சமர்ப்பித்து வெட் மற்றும் முத்திரைக் கட்டணத்தை மீளளிக்கப்பாடாத இலங்கை ரூபாய் இரண்டாயிரத்து முந்நூறு (ரூ.2300.00) கட்டணத்தைச் செலுத்தி கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாக மட்டும் ஏற்கப்படும்.
5. மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியுடன் கீழே தரப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது பிரதம மாநகர கணக்காளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுவதற்காக 2023.10.17 மு.ப 10.00 அல்லது அதற்கு முன்பு கேள்விகளை ஒப்படைத்தல் வேண்டும். தாமதமான கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் திறத்தல் 2023.10.17 மு.ப 10.00 இற்கு கேள்விதாரர் அல்லது கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் கேள்விகள் மூடப்பட்டவுடன் இடம்பெறும்.
6. 2023.12.17 வரை கேள்விகள் செல்லுபடியாதல் வேண்டும் அத்துடன் இலங்கையில் செயற்படும் இலங்கையின் மத்திய வங்கியில் பதிவு செய்த அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக்கொண்ட 2024.01.15 வரை செல்லுபடியாகும் ரூபாய் இரண்டு இலட்சம் (ரூ.200,000.00) பெறுமதியுடைய கேள்வி பிணையொன்றை சகல கேள்வியுடனும் சமர்ப்பித்தல் வேண்டும்.
7. கேள்விப்பிணையானது கண்டி மாநகர சபையில் மாநகர ஆணையாளரின் பெயரில் விநியோகிக்கப்பட வேண்டும். கேள்விப்பிணை இலங்கை ரூபாவில் இருப்பதுடன் கேள்வி ஆவணத்தின் (IV) ஆம் பிரிவின் தரப்பட்டுள்ள மாதிரிகளில் இருத்தல் வேண்டும்.
8. காரணம் கூறாமலேயே கிடைக்கப்பெறும் எந்தக் கேள்வியையும், நிராகரிக்கும் ஏற்றுக்கொள்வதற்கு தொழில் தருநர் கண்டி மாநகர சபையிற்கு உரிமையுண்டு.

**திகதி : 2023.09.27**

**கே.கே.ஜீ.ஐ.டி.பீ.விஜயதிலக்க**
**மாநகர ஆணையாளர்**
**மாநகர சபை**
**கண்டி**



## ஆசிய விளையாட்டுப் போட்டி:

# பதக்கம் வெல்லத் தவறிய மத்தியு நீச்சல் போட்டியில் தேசிய சாதனை

சீனாவிலிருந்து நிரோஷான் பிரியங்கர




சீனாவின் ஹான்சோ நகரில் நடைபெற்று வரும் ஆசிய விளையாட்டப் போட்டியில் ஆண்களுக்கான 50 மீற்றர் பட்டர்பிளை நீச்சல் போட்டியில் மத்தியு அபேசிங்க இலங்கையின் தேசிய சாதனையை முறியடித்தார்.

நேற்று (28) நடந்த இந்தப் போட்டியின் ஆரம்ப சுற்றில் பங்கேற்ற அபேசிங்க போட்டித் தூரத்தை 24.58 விநாடிகளில் பூர்த்தி செய்து இந்த சாதனையை படைத்தார். எனினும் இந்தப் போட்டியில் அவர் 6 ஆவது இடத்தையே பிடித்தார்.

இதன்போது கடந்த ஆண்டு பொதுநலவாய போட்டியில் அகலங்க பீரிஸ் 24.89 விநாடிகளில் போட்டியை நிறைவுசெய்த தேசிய சாதனையையே அபேசிங்க முறியடித்தார்.

இந்தப் போட்டியில் 3 ஆவது ஆரம்ப சுற்றுப் போட்டியில் அகலங்க பீரிஸ் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதில் 24.91 விநாடிகளில் போட்டியை நிறைவு செய்த அவர் 8 வீரர்களில் 7 ஆவது இடத்தையே பிடித்தார்.

இதன்படி 40 ஒட்டுமொத்த வீரர்களில் அபேசிங்க 18 ஆவது இடத்தையும் அகலங்க பீரிஸ் 22 ஆவது இடத்தையும் பிடித்ததால் பதக்க வாய்ப்பை இழந்தனர்.

இதேவேளை நேற்று ஈ ஸ்போர்ட்ஸ் விளையாட்டில் இணைந்த இலங்கை அணி பஸ் எலிட் பி பிரிவில் ஆரம்ப சுற்றில் போட்டியிட்டு நான்கு அணிகளில் சீன தைபே அணிக்கு மாத்திரம் பின்தங்கியது. தைபே அணி 48:21.048 நிமிடங்களில் போட்டியை நிறைவு செய்ததோடு போட்டியை நிறைவு செய்ய இலங்கை அணிக்கு 57:33.253 நிமிடங்கள் தேவைப்பட்டன.

ஈ ஸ்போர்ட்ஸ் போட்டியில் இலங்கை அணி ஆரம்ப சுற்றில் இன்று மேலும் இரு போட்டிகளில் பங்கேற்கவுள்ளதோடு, ஆரம்ப சுற்று முடிவில் குறைந்த காலத்தை பதிவு செய்யும் 4 அணிகள் 8 அணிகள் பிரிவுக்கு தகுதி பெறும்.

குத்துச்சண்டை போட்டியில் நேற்று 63.5–71 கிலோகிராம் எடைப் பிரிவில் போட்டியிட்ட நிராஜ் விஜேவர்தன சீன தைபே வீரர் செய் வெய் இடம் 5–0 என தோல்வியை சந்தித்தார். நிராஜ் எதிராளிக்கு கடும் போட்டியை கொடுத்தபோதும் ஐந்து சுற்றுகளிலும் முன்னிலை பெற தைபே வீரரால் முடிந்தது. இந்த தோல்வியுடன் இம்முறை ஆசிய விளையாட்டுப் போட்டியில் குத்துச்சண்டையில் இலங்கையின் போட்டிகள் அனைத்தும் நிறைவு பெற்றுள்ளன.

ஆசிய விளையாட்டுப் போட்டியில் இன்றைய தினத்தில் இலங்கையின் பதக்க எதிர்பார்ப்பான மெய்வல்லுனர் போட்டிகள் ஆரம்பமாகின்றன. இதில் இலங்கை வீர, வீராங்கனைகளான நதீஷா ராமநாயக்க, காலிங்க குமாரகே மற்றும் அருண தர்ஷன ஆகியோர் போட்டியிடவுள்ளனர். இவர்கள் மூவரும் 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் பங்கேற்கின்றன.

# பாடுமீன்கள் சமர் கிரிக்கெட் போட்டிக்கு மழை குறுக்கீடு

கல்லடி குறூப் நிருபர்



மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரிக்கும், மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரிக்கும் இடையிலான மட்டக்களப்பின் போர் என வர்ணிக்கப்படும் பாடு மீன்களின் சமர் கிரிக்கெட் போட்டி மழை குறுக்கிட்டதால் இரு அணிகளுக்கும் இடையே பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு சிவானந்தா விளையாட்டு மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை (26) நடைபெற்ற 50 ஓவர்கள் கொண்ட இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி அணியினர் முதலில் துடுப்பெடுத்தாடியதில் 49 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 143 ஓட்டங்களை பெற்றது.

பதிலெடுத்தாடிய மட்டக்களப்பு மத்திய கல்லூரி அணி 2 விக்கெட் இழப்புக்கு 28 விக்கெட்டுகளை பெற்ற நிலையில் மழை குறுக்கிட்டது.

# ஏறாவூர் அலிகார் கால்பந்து அணி அரையிறுதிக்கு தகுதி

ஏறாவூர் சுழற்சி நிருபர்



பாடசாலைகளுக்கு இடையிலான கால்பந்தாட்ட போட்டியில் ஏறாவூர் அலிகார் தேசிய பாடசாலை அணி அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளது.

கொழும்பு சுகததாச மைதானத்தில் கடந்த ஞாயிறன்று (24) நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் புனித ஹென்ரிஸ் அணியை எதிர்கொண்ட அலிகார் அணி 5–0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது. இலங்கை பாடசாலைகள் கால்பந்து சம்மேளனம் இந்தப் போட்டியை நடத்துகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பாலியல் குற்றச்சாட்டு: குணதிலக்க குற்றமற்றவரென நீதிமன்றம் தீர்ப்பு



## குற்றத்தை நிரூபிக்கத் தவறியதாக நீதிபதி தெரிவிப்பு

டி20 உலகக் கிண்ண போட்டியில் பங்கேற்பதற்காக அவுஸ்திரேலியா சென்றிருந்தபோது பெண் ஒருவர் மீது பாலியல் தாக்குதல் நடத்தியதாக குற்றம்சாட்டப்பட்ட இலங்கை கிரிக்கெட் வீரர் தனுஷ்க குணதிலக்க குற்றமற்றவர் என நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

உடலுறவின்போது ஆணுறையை அகற்றுவதற்கான சந்தர்ப்பம் குணதிலக்கவுக்கு இருக்கவில்லை என்பது ஆதாரபூர்வமாக உறுதி செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் பொலிஸுக்கு வழங்கிய வாக்குமூலத்தில் உண்மையாக இருந்தார் என்று தீர்ப்பளித்த நீதிபதி தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு நவம்பர் 2 ஆம் திகதி 29 வயதான சிட்னி பெண் உடன் அவரது கிழக்கு புறநகரில் இருக்கும் வீட்டில் உடலுறவில் ஈடுபட்டபோது பெண்ணின் விருப்பத்திற்கு முரணாக திருட்டுத்தனமாக ஆணுறையை அகற்றியதாகவே 32 வயதான குணதிலக்க மீது குற்றம்சாட்டப்பட்டது. எனினும் இந்தக் குற்றசாட்டை குணதிலக்க மறுத்த நிலையில் கடந்த வாரம் இடம்பெற்ற நான்கு நாள் வழங்கு விசாரணைக்கு பின்னர் டவுனிங் சென்டர் மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி சாரா ஹுக்கட் நேற்று (28) தீர்ப்பு வழங்கினார்.

இதன்போது குணதிலக்க குற்றமற்றவர் என தீர்ப்பளித்த நீதிபதி கூறியதாவது, “உடலுறவு தொடர்ச்சியாக இடம்பெற்றதன் காரணமாக, குற்றம்சாட்டப்பட்ட வகையில் ஆணுறையை அகற்றுவதற்கான சந்தர்ப்பம் இருக்கவில்லை என்று ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்டது” என்றார்.

இதில் டென்னி என்று அழைக்கப்பட்ட குணதிலக்க மற்றும் அந்தப் பெண் கடந்த ஆண்டு ஒக்டோபர் 29 ஆம் திகதி டேடிங் செயலியான டின்டர் மூலம் நட்பாகி இருப்பதோடு இருவரும் வீடியோ அழைப்பு உட்பட இஸ்டாகிராம் மற்றும் வட்ஸ்அப் செயலி ஊடாகவும் தொடர்பில் இருந்துள்ளனர்.

இருவரும் ஒபெரா மதுபான விடுதியில் குடித்துவிட்டு பிராங்கிஸ் பிசாவில் இரவு உணவை எடுத்துக்கொண்டு பின்னர் படகு மூலம் குற்றம்சாட்டிய பெண்ணின் வீட்டுக்குச் சென்றுள்ளனர். அங்கு அந்தப் பெண் கிட்டார் வாசிப்பது மற்றும் பாட்டுப் பாடுவதை குணதிலக்க பதிவு செய்துள்ளார்.

### “புத்திசாலிப் பெண்”

“பிடிக்கப்பட்ட அந்த வீடியோக்கள் மூலம் அங்கு ஓய்வான, மகிழ்ச்சியான மற்றும் கொண்டாட்டம் நிறைந்த உணர்வு ஒன்று இருந்துள்ளது” என்று நீதிபதி தெரிவித்துள்ளார்.

குற்றம்சாட்டும் பெண் புத்திசாலித்தனமாக செயற்படுவதாகவும் ஒரு சாட்சியாகவன்றி “வேண்டுமென்றே தவறான சாட்சியங்களை வழங்குவதற்கான விருப்பத்தால் தூண்டப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்ட நீதிபதி, அந்தப் பெண் குற்றம்சாட்டியவரை சாதகமற்றவராக சித்தரிக்கும் நோக்கமுடையவராக இருந்துள்ளார்” என்றார்.

இரண்டு நாட்கள் வாக்குமூலம் அளித்த அந்தப் பெண் குணதிலக்க தம்மை வலுக்கட்டாயமாக முத்தமிட்டதாகவும் தனது வீட்டுக்கு செல்லும் வழியில் படகில் தனது பின்புறமாக அடித்ததாகவும் குற்றம்சாட்டியிருந்தார். அதேபோன்று ஒய்வறைக்கு தன்னைத் தள்ளியதாகவும் அந்தப் பெண் குற்றம்சாட்டியுள்ளார்.

எனினும் தனுஷ்க குணதிலக்கவின் சார்பில் வாதாடிய வழங்கறிஞர் முருகன் தங்கராஜின் குறுக்கு விசாரணையில் தாமே அறைக்குச் செல்ல குணதிலக்கவை அழைத்ததை அந்தப் பெண் ஒப்புக்கொண்டதோடு உணர்வை ஏற்படுத்தும் வகையில் மெழுவர்த்தியை ஏற்றியதாகவும் ஒப்புக்கொண்டார்.

### நிரூபிக்கத் தவறிய குற்றச்சாட்டு

குணதிலக்க குறைந்தது மூன்று முறை தன்னை மூச்சுத்திணற வைத்ததாக அந்தப் பெண் கூறியதோடு தனது படுக்கையறையில் 10 தொடக்கம் 15 நிமிடங்கள் இடம்பெற்ற வலுக்கட்டாயமான உடலுறவின்போது பின்புறமாக அடித்ததாகவும் குறிப்பிட்டார்.

பாலியல் உறவு முடிவுற்ற மூன்று தொடக்கம் ஐந்து விநாடிகளில் படுக்கையறை தரையில் ஆணுறை இருப்பதைக் கண்டதாக அந்தப் பெண் வழக்கு விசாரணையில் கூறினார். ஆணுறையை குணதிலக்க அங்கு வீசியதாக குற்றம்சாட்டிய அந்தப் பெண் அதனை அவர் வீசுவதை காணவில்லை என்று குறிப்பிட்டார்.

வழக்குத்தொடுநர் கெப்ரியல் ஸ்டீட்மன் வாதாடியபோது, “அவரது (பெண்ணின்) எதிர்பார்ப்பு மற்றும் விரும்பியதற்கு மாற்றமாக இது இருந்தது” என்று குறிப்பிட்டதோடு, அவரது நடத்தை “அந்த மனநிலையில், அவரது (பெண்ணின்) தெளிவான விருப்பத்திற்கு மாறாக ஆணுறையை அகற்றும் விருப்பத்தை கொண்டதாக இருந்தது” என்றும் தெரிவித்தார்.

எனினும் பிரதிவாதியின் சார்பில் வாதாடிய வழக்கறிஞர் முருகன் தங்கராஜ், “உடலுறவின்போது குணதிலக்க ஆணுறையை அகற்றுவதற்கு வாய்ப்பு இருக்கவில்லை என்றும் அது தொடர்ச்சியான உடலுறவாக இருந்தது என்றும் அந்தப் பெண்ணும் விபரித்திருந்தார்” என்று வாதிட்டார்.

வழக்குத்தொடுநரால் இதனை நிரூபிக்க முடியாமல் போயிருப்பதாகவும் தங்கராஜ் குறிப்பிட்டிருந்தார்.

### உண்மை பேசிய குணதிலக்க

டி20 உலகக் கிண்ணத்தில் பங்கேற்றுவிட்டு இலங்கை திரும்புவதற்காக இலங்கை அணியினர் நவம்பர் 6 ஆம் திகதி ஹியாட் ரிஜென்சி ஹோட்டலில் இருந்து விமானநிலையத்திற்கு புறப்படுவதற்கு முன்னரே குணதிலக்க கைது செய்யப்பட்டார். இதன்போது அவரது ஹோட்டல் அறை பொலிஸாரால் சோதனை செய்யப்பட்டது. அங்குள்ள பை ஒன்றில் இருந்து இரு ஆணுறைகள் கைப்பற்றப்பட்டன.

“அவரிடம் இரு ஆணுறைகள் இருப்பதைக் கொண்டு அவர் குறித்த சந்தர்ப்பங்களில் ஆணுறை அணிவது உறுதியாகிறது” என்று நீதிமதி தெரிவித்துள்ளார்.

குணதிலக்க பதிவு செய்யப்பட்ட இரண்டரை மணி நேர பொலிஸ் விசாரணைக்கு முகம்கொடுத்திருந்தார். “எந்த சந்தர்ப்பதிலாவது ஆணுறையின்றி உடலுறவில் ஈடுபட்டீர்களா?” என்று பொலிஸார் கேட்டபோது, “இல்லை, இல்லை, இல்லை” என்று குணதிலக்க பதிலளித்தார்.

ஆணுறையுடன் உடலுறவு கொள்ள விரும்பவில்லை என்று அந்தப் பெண்ணிடம் கூறியதை குணதிலக்க ஒப்புக்கொண்டார். அந்தப் பெண்ணே ஆணுறையை எடுத்து வந்ததாக குறிப்பிட்டார்.

“ஆணுறையின்றி செய்ய வேண்டும் என்று நான் ஒருபோதும் கூறவில்லை” என்று குறிப்பிட்ட குணதிலக்க “நாம் ஆணுறையுடனேயே செய்தோம்” என்றார்.

அந்த விசாரணையில் குணதிலக்கவிடம் கேட்கப்பட்ட அனைத்துக் கேள்விகளுக்கும் அவர் பதிலளித்திருப்பதாக குறிப்பிட்ட நீதிபதி, “உண்மையாக இருப்பதற்கும் பொலிஸாருக்கு உதவுவதற்கும் அவர் தன்னால் முடிந்த அனைத்தையும் செய்துள்ளார் என்றே முடிவுக்கு வரவேண்டியுள்ளது” என்று தெரிவித்துள்ளார்.

“அந்த விசாரணையில் அவர் கூறியவற்றை நிராகரிப்பதற்கு அல்லது நம்பாமல் இருப்பதற்கு எந்தக் காரணமும் இல்லை” என்றும் நீதிபதி தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளார்.

### பெண்ணின் ஆதாரங்களே எதிரானது

குணதிலக்க “மிருகமாக மாறியதாகவும் உண்மையில் மிகப் பயங்கரமான ஒன்று நடந்ததாகவும்” அந்தப் பெண் தனது நண்பர்களிடம் தெரிவித்ததாக நீதிமன்றத்தில் கூறப்பட்டது. ஆணுறை தொடர்பில் அந்த பெண் நண்பர்களிடம் கூறும்போது, “அவர் அதனை அகற்றினாரா என்பது எனக்குத் தெரியாது” என்று குறிப்பிட்டதோடு “எனக்கு உறுதியாகத் தெரியாது அப்படி உணர்கிறேன்” என்றும் தெரிவித்துள்ளார்.

நீதிபதி கூறியதாவது, “குற்றம்சாட்டுபவரின் ஆதாரங்கள் குற்றம்சாட்டுபவருக்கு ஆதரவாகவன்றி அதனை குறைத்து மதிப்பிடுவதாக உள்ளது” என்றார்.

அந்தப் பெண் உண்மையானவரல்ல என்பது நிரூபிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்ட தங்கராஜ், படகில் இருந்த சிசிடீவி மற்றும் கண்காணிப்பு கெமராவில் இந்த ஜோடி முத்தமிடுவது மற்றும் கட்டிப்பிடிப்பது தெரிகிறது என்றும் அது எனது கட்சிக்காரர் வலுக்கட்டாயமாகவும் கடுமையாகவும் செயற்பட்டதாக அந்தப் பெண் விபரிப்பதற்கு முரணாக இருப்பதாகவும் தங்கராஜ் தெரிவித்துள்ளார்.


குணதிலக்க கைது செய்யப்பட்டதை அடுத்து கிரிக்கெட் ஆடுவதில் இருந்து அவர் இடைநிறுத்தப்பட்டார். 2015 ஆம் ஆண்டு சர்வதேச கிரிக்கெட்டில் அறிமுகமான குணதிலக்க இலங்கை அணிக்காக எட்டு டெஸ்ட் போட்டிகள் உட்பட 100க்கும் அதிகமான போட்டிகளில் விளையாடியுள்ளார்.

அவர் டி20 உலகக் கிண்ண போட்டியில் ஆடுவதற்காக அவுஸ்ரேலியா சென்றபோதும் ஒரு போட்டியில் ஆடிய பின் உபாதை காரணமாக அணியில் இருந்து விடுவிக்கப்பட்டார்.

இந்த வழக்கு விசாரணைக்கு முன்னரே இந்த வழக்குத் தொடர்பில் ஊடகங்கள் அதிக அவதானம் செலுத்தியதால் வழக்கு விசாரணை ஒரு நீதிபதியை கொண்டதாக நடத்துவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

தனது வருவாயைக் கொண்டு பெற்றொருக்கான உதவிகளை வழங்க வேண்டி இருப்பதாக குணதிலக்க விடுத்த கோரிக்கையை அடுத்தே இந்த வழக்கு விசாரணை துரிதப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மீண்டும் கிரிக்கெட் ஆட திட்டமிடும் குணதிலக்க



பாலியல் குற்றச்சாட்டில் நிரபராதியென அறிவிக்கப்பட்ட தனுஷ்க குணதிலக்க நீதிமன்றத்தின் தீர்ப்பின் பின், தான் கிரிக்கெட் விளையாட்டுக்கு திரும்ப விரும்புவதாகவும் கலங்கத்திற்கு உள்ளான தனது நற்பெயரை கட்டியெழுப்பவுள்ளதாகவும் ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

“கடந்த பதினொரு மாதங்களும் எனக்கு கடுமையாக இருந்தன. எனது முகாமையாளர், குறிப்பாக எனது வழக்கறிஞர் முருகன் தங்கராஜுக்கு நான் நன்றிகளை கூறிக்கொள்கிறேன்.

எனது வாழ்வு வழக்கத்திற்கு திரும்பியதை இட்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன். நாடு திரும்பி மீண்டும் கிரிக்கெட் ஆடுவதற்கு எதிர்பார்த்திருக்கிறேன்” என்று குணதிலக்க குறிப்பிட்டார்.

இதேவேளை பாலியல் குற்றச்சாட்டில் இருந்து நிரபராதியாக்கப்பட்ட தனுஷ்க குணதிலக்க மீது விதிக்கப்பட்ட தற்காலிக போட்டித் தடையை நீக்குவது குறித்து இலங்கை கிரிக்கெட் சபை ஆலோசித்து வருவதாக தெரியவருகிறது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 செப்டெம்பர் மாதம் 29ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.